

# அருட்பெருஞ் ஜோதி அகவல்

(எளிய உரை)

உரையாசிரியர்

**புலவர் சீனி. சட்டையப்பன்**

# அருட்பெருஞ் ஜோதி அகவல்

(எளிய உரை)

உரையாசிரியர்
**புலவர் சீனி. சட்டையப்பன்**

**தயாமூலம்**
எஸ்.எம்.ஆர். காம்ப்ளெக்ஸ்
7/4, தளவாய் தெரு, மதுரை 625 001
தொலைபேசி : 0452 2620620

அருட்பெருஞ்ஜோதி அகவல்

உரையாசிரியர் :
புலவர் சீனி. சட்டையப்பன்

முதல் பதிப்பு : ஏப்ரல் 2009

வெளியீடு : தயாமூலம்
எஸ்.எம்.ஆர். காம்ப்ளெக்ஸ், 7/4, தளவாய் தெரு,
மதுரை 625 001 தொலைபேசி : 0452 2620620

நூலாக்க விபரம்: 1/8 டெம்மி, 18.6 கி. மேப்லித்தோ, 184 பக்கங்கள்
அச்சுக்கோப்பு: டிரைகாம் கம்ப்யூட்டர்ஸ், சென்னை 47
அட்டை வடிவமைப்பு : நித்யா கிருஷ்ணமூர்த்தி
விலை: ரூ.100

**Arutperunjothi Agaval**

Commentary by Pulavar Seeni. Sattayappan

First Print : April 2009

Published by

Dhayamoolam Publications
S.M.R. Complex, 7/4, Thalavai Street, Madurai 625 001
Telephone : 0452 2620620 • email: dhayamoolam@gmail.com

Price Rs.100

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ் ஜோதி

## பொருளடக்கம்

முன்னுரை 5 • அகவல் உரை 7

பின்னிணைப்புகள்

அகவல் - கலைச்சொல் விளக்கம்

அருட்பெருஞ்ஜோதி அட்டகம்

# பதிப்புரை

இறைவனைக் கூட்டுவழிபாட்டின் மூலமாகத் தொழுவதற்கு வள்ளலார் அருளிச் செய்தவற்றுள் மிக முக்கியமானது அருட்பெருஞ்ஜோதி அகவல். சன்மார்க்க உலகில் இது நீண்ட நெடிய காலமாகப் பின்பற்றப்பட்டு வருவதை வடலூர் சத்திய தருமச் சாலையில் இன்றும் காணலாம். திருப்பள்ளி எழுச்சி, திருவடிப்புகழ்ச்சி ஓதப்பெற்ற பின்பு அருட்பெருஞ் ஜோதி அகவல் அனைவராலும் ஓதப்படுவது கண்கூடு. (அதனைத் தொடர்ந்து இறுதியில் 'அருட்பெருஞ்ஜோதி அட்டகம்' ஓதப்படும்.)

மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையில் (18.04.1872) வள்ளலார் எழுந்தருளியிருந்தபோது ஒரே இரவில் — பன்னிரண்டு நாழிகைக்குள் — தமது திருக்கரத்தினாலேயே எழுதி முடிக்கப்பட்டது இவ்வகவல். அக் கையெழுத்துப்பிரதி இன்றும் வடலூர் சத்திய தருமச் சபையில் வைத்து வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. இது 1596 அடிகளைக் கொண்டது. இதை இரண்டிரண்டு அடிகளையுடைய செய்யுளாகக் கொள்ள வேண்டும் என்பர். அப்படிக் கொண்டால் 798 அடிகள். ஆசிரியப்பாவின் அடியெல்லையாகத் தொல்காப்பியம் வரையறுத்ததையும் தாண்டி நிற்கும் சிறப்புடையது அகவல்.

அகவல் என்னும் சொல், பா வகைகளுள் ஆசிரியப்பாவைக் குறிக்கும். அதிலும் இது நிலைமண்டில ஆசிரியப்பாவாகும். தோகைமயில் ஒன்று தன் துணையைச் சேர்க்கைக்கு அழைப்பதாகிய ஓசைப்பாங்கினை உடையது பற்றியே அகவல் எனப்பட்டது. இது அப்படியே அருட்பெருஞ்ஜோதி அகவலுக்குப் பொருந்துகிறது. அதாவது, வள்ளலார் தன்னில் புணர்ந்து கலந்த தன்னிகரற்ற தலைவனாம் ஆண்டவனை அழைத்து அழைத்து அவனது பேரின்பக் கிளர்ச்சியை ஓதி ஓதி மகிழ்வதே அருட்பெருஞ்ஜோதி அகவல். இந்த அகவலை எழுதுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே அதற்கான காப்புச் செய்யுளை வள்ளலார் எழுதியுள்ளார் என்ற கருத்தும் உண்டு. அது,

"அருட்சபை நடம்புரி அருட்பெரு் சோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே" - என்பதாகும்.

அருட்பெருஞ்ஜோதி அகவல் என்று வழக்கமாக எல்லோராலும் சொல்லப்பட்டு வந்தாலும் "*திருவருட்பெருஞ் ஜோதி அகவல்*" என்பதே வள்ளலார் இட்ட பெயர் என்பர். இதற்கு ஆதாரமாக அவரது பேருபதேசப் பகுதியைக் காட்டுவர். அதாவது எழுதிரைகளின் விளக்கத்தைப் பற்றி

வள்ளலார் கூறும்போது "இத்திரைகளின் விவரத்தைத் திருவருட்பெருஞ் ஜோதி அகவலில் கண்டுகொள்க" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அகவல், தோத்திரத்துக்குத் தோத்திரமும் சாத்திரத்துக்குச் சாத்திரமும் ஆகும். திருவாசகப் பகுதியின் பலவற்றிற்கு இது விரியாக உள்ளது. குறிப்பாகத் திருவண்டப் பகுதி. திருவருட்பாவின் உயிர்ப்பகுதி அகவல் எனில் மிகையன்று. எனவேதான், வேதத்துள் ஸ்ரீருத்திரம்போல அருட்பாவுள் அருட்பெருஞ் ஜோதி அகவல் விளங்குகிறது என்று அழகரடிகளும், "திருவருட்பிரகாச வள்ளல் பெருமானருளிய திருப்பாசுரங்கள் யாவும் விசேடமேயாயினும் முன்னைந்து திருமுறைகளும் சமயத்திற்குட்பட்ட சொரூபத் தோத்திரமாயும் ஆறாவது திருமுறை சமயாதீத பரவஸ்துவி னிலக்கணத்தை யுள்ளடக்கி நிற்குந் தோத்திரப்பாக்களாயும் அதிலும் அத் திருமுறை முன்புள்ள அருட்பெருஞ்ஜோதி அகவற்பாவானது அவ் வள்ளற் பெருமானுக்கு அருட்டெரிசனமுண்டாங் காலையில் அருளிச் செய்ததெனவு முணரப்பெற்றேன்..." என்று ஆனந்த நாத சண்முக சரணாலய சுவாமிகளும் கூறுகின்றனர்.

அருட்பெருஞ்ஜோதி என்று தொடங்கி அருட்பெருஞ்ஜோதி என்று முடியும் இவ்வகவலை ஒருவர் பொருளறியாது ஓதினாலும் அருட்பெருஞ்ஜோதி என்ற திருப்பெயரை ஓராயிரம் முறைக்கு மேல் ஓதிய (அருட்பெருஞ்ஜோதி அட்டோத்தர சகஸ்ரநாம அருச்சனை ஒன்று செய்த) புண்ணியம் உண்டு என்பார் ஊரன் அடிகள். பொருளறியாது ஓதினாலே இந்தப் புண்ணியம் கிடைக்கும் எனில் பொருளறிந்து ஓதும்போது அப்புண்ணியம் இரட்டிப்பாகும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? எனவே அப்பொருளை எல்லோரும் எளிதில் அறிந்து ஓத, புலவர் சட்டையப்பனாரை அணுகினோம். வள்ளலாரின் நேரடி மாணவரான காரணப்பட்டு கந்தசாமி அய்யாவிடம் பயின்ற பொறையாறு சிதம்பர சுவாமிகளிடம் முறையாகப் பாடங்கேட்டவர் சட்டையப்பனார் அவர்கள். அவர் பலகாலம் பயின்ற அனுபவத்தின் வெளிப்பாடாய் இந்த உரை அமைந்துள்ளது.

தயாமூலப் பதிப்பகத்தின் முதல் வெளியீடாய் இந்நூல் வருவதில் எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. உரை முழுவதையும் மேற்பார்த்துக்கொடுத்த மதுரை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு. இராம. பாண்டுரங்கன் அவர்களுக்கும், முனைவர் ப. சரவணன் அவர்களுக்கும், பொருளுதவி யோடு நூல் வெளியீட்டில் அக்கறை காட்டிய சன்மார்க்க அன்பர்களுக்கும் நன்றி.

வாழிய வள்ளல் மலரடிகள்!

**— பதிப்பகத்தார்**

உ

# அருட்பெருஞ் ஜோதி அகவல்

***(அகர முதல்) அருட்பெருஞ் ஜோதியாய் விளங்கும் நிலை***

1 அருட்பெருஞ் ஜோதி, அருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ் ஜோதி, அருட்பெருஞ் ஜோதி

பெருந்தயவும் பேரறிவும் உடைய பேரின்பமே! பேரின்பமும் பெருந்தயவும் உடைய பேரறிவே! பெருந்தயவும் பேரறிவும் உடைய பேரின்பமே! பேரின்பமும் பெருந்தயவும் உடைய பேரறிவே!

2 அருட்சிவ நெறிசார், அருட்பெரு நிலைவாழ்,
அருட்சிவ பதிஆம் அருட்பெருஞ் ஜோதி

பேரருள் இறை நெறியில் பொருந்திப் பேரருள் பெருநிலையில் வாழ்கின்ற பேரருட் பெருஞ்ஜோதிப் பெருங் கடவுளாம் பேரருட் பெருஞ் ஜோதியே!

3 ஆகம முடிமேல், ஆரண முடிமேல்,
ஆகநின்று ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

பதிநூலாம் (சித்தாந்த) சுத்த ஆகம அனுபவ எல்லையின் மேலும் பாச நூலாம் சுத்த வேதாந்த அனுபவ எல்லையின் மேலும் அதீதமாகிச் சிறந்து ஓங்கிடும் அருட்பெருஞ் ஜோதியே!

4 இக நிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய்,
அகம் அறப் பொருந்திய அருட்பெருஞ் ஜோதி

உலகியல் நிலையிலும் விளங்கும் மெய்ப்பொருளாகவும், மறுமை நிலையிலும் விளங்கும் மெய்ப்பொருளாகவும், குறைகள் யாவும் நீங்கப் பொருந்திடும் அருட்பெருஞ் ஜோதியே!

5 ஈனம் இன்று, இக பரத்து இரண்டின் மேற்பொருளாய்
ஆனல் இன்று ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

தாழ்வின்றி இம்மை மறுமை ஆகியவற்றினும் மேம்பட்டு விளங்கும் பேரின்ப(ஒருமை)ப் பொருளாய் எங்கும் நிறைந் தோங்கிடும் அருட்பெருஞ் ஜோதியே!

6 உரைமனம் கடந்த ஒரு பெரு வெளிமேல்
அரைசு செய்து ஓங்கும் அருட்பெருஞ் ஜோதி

வாக்கு மன எல்லைகளைக் கடந்த ஒப்பற்ற சிதாகாச வெளியின் மீது அருளாட்சி புரிந்தோங்கும் அருட்பெருஞ் ஜோதியே!

7 ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்
ஆக்கமும் அருளிய அருட்பெருஞ் ஜோதி

எவ்வுயிரையும் இன்பமடையச் செய்யும் கருணை நன்முயற்சியும், உடம்பு, உள்ளம், உயிர் ஆகியவற்றை ஒளிமயமாக்கித் தரும் மெய் உணர்ச்சியும், சுத்தம், பிரணவம், ஞானம் என்கிற அருள் உடம்பினையும், அதற்கான கருணை வளமும் ஈந்தருளும் அருட்பெருஞ் ஜோதியே!

8 எல்லைஇல் பிறப்பு எனும் இருங்கடல் கடத்தி, என்
அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

அளவு கடந்த பிறவிகள் என்கின்ற பெரிய கடலிலிருந்து கரையேறச் செய்து, என் இறப்புப் பிறப்புத் துன்பங்கள் யாவும் நீக்கியருளிய அருட்பெருஞ் ஜோதியே!

9 ஏறா நிலைமிசை ஏற்றி, என் தனக்கே
ஆறாறு காட்டிய அருட்பெருஞ் ஜோதி

சுத்த சிவ துரியாதீதப் பெருநிலை மீது என்னை ஏறச் செய்து எனக்கே முப்பத்தாறாகும் தத்துவ நிலைகள் யாவும் ‘அருள் ஒளிமயமே’ எனக் காண்பித்தருளிய அருட்பெருஞ் ஜோதியே!

10 ஐயமும் திரிபும் அறுத்து, எனது உடம்பினுள்
ஐயமும் நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

சந்தேக விபரீதமும், மாறுபாட்டு உணர்வும் வேரற்றுப் போகும்படிச் செய்து எனது உடம்பின் உள்ளே ஊறி இறப்பினை உண்டாக்கும் கோழையின் மூலத்தையும்கூட நீக்கியருளிய அருட்பெருஞ் ஜோதியே!



11 ஒன்று என, இரண்டு என, ஒன்றிரண்டு என, இவை
அன்று என விளங்கிய அருட்பெருஞ் ஜோதி

அத்வைதன் எனவும், துவைதன் எனவும், விசிட்டாத்துவைதன் எனவும் கூறப்படும் நிலையினனாகி, இம்மூன்றும் அல்லாதவனாகி, அருட்பான்மையால் விளங்கிடும் அருட்பெருஞ் ஜோதியே!

12 ஓதாது உணர்ந்திட ஒளி அளித்து, எனக்கே
ஆதாரம் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

கல்வி பயிலாமல் உலகியல் நிலை அருளியல் நிலை யாவும் உணர்ந்து கொள்ளும்படி அருள் ஒளி ஈந்ததுடன் எனக்கே ஆதரவாகி விளங்கிடும் அருட்பெருஞ் ஜோதியே!

13 ஔவியம் ஆதிஓர் ஆறும் தவிர்த்த பேர்
அவ் இயல் வழுத்தும் அருட்பெருஞ் ஜோதி

பொய், கடுஞ்சொல், வஞ்சகம், அழுக்காறு, புறங்கூறுதல், சூதாய்ப் பேசுதல் முதலிய ஆறு வகைச் சொற்குற்றங்களையும் நீக்கியவர்கள், நெகிழ்ந்து உருகிப் போற்றும் அருட்பெருஞ் ஜோதியே!

14 திருநிலைத்தனி வெளி சிவவெளி எனும் ஓர்
அருள் வெளிப் பதிவளர் அருட்பெருஞ் ஜோதி

பேரின்பத் தனிவெளி, சுத்தசிவ வெளி என்னும் ஓர் அருள் வெளியாம் சீரிடத்தில் ஓங்கி வளர்கின்ற அருட்பெருஞ் ஜோதியே!

15 சுத்த சன்மார்க்க சுகத் தனி வெளி எனும்
அத்தகைச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

உலகுயிர்களைத் தன்னைப்போல் நடத்தும் ஒப்பற்ற பேரின்பப் பெரு வெளி என்னும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

16 சுத்த மெய்ஞ்ஞான சுகோதய வெளி எனும்
அத்துவிதச் சபை அருட்பெருஞ் ஜோதி

தூய்மையானதான மெய்யறிவாம் இன்பம் தோன்றும் வெளி என்னும் உயிர் இறையுடன் ஒன்றுபடும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

17 தூய கலாந்த சுகம் தரு வெளி எனும்
ஆய சிற்சபையில் அருட்பெருஞ் ஜோதி

பிரகாசிக்கின்ற பஞ்சகலைகளின் முடிவில் பரமானந்தம் வழங்கும் வெளி என்று அழைக்கப்படும் படியான சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

18 ஞான யோகாந்த நடத் திருவெளி எனும்
ஆனிஇல் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

சுத்த யோகாந்தமாம் மெய்ஞ்ஞானத்தின் முடிவில் ஒளிநடம் புரியும் வெளி என்கின்ற குறைவற்ற சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

19 விமல போதாந்தமா மெய்ப்பொருள் வெளி எனும்
அமல சிற்சபையில் அருட்பெருஞ் ஜோதி

தற்போத முடிவு எனும் மலநீக்கம் ஈகின்ற, ஒப்பற்ற மெய்ப்பொருள் வெளி என்னும் படியான ஐம்மலம் நீங்கிய சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

20 பெரிய நாதாந்தப் பெருநிலை வெளி எனும்
அரிய சிற்றம்பலத்து அருட்பெருஞ் ஜோதி

உயரிய பரநாத முடிவாகும் ஒப்பற்ற ஆன்ம அனுபவ வெளி என்கின்ற அற்புத ஞானசபையின் அருட்பெருஞ் ஜோதியே!

21 சுத்த வேதாந்தத் துரிய மேல்வெளி எனும்
அத்தகு சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

தூய மறைமுடிவினதாகும் துரிய மேல் நிலை வெளி என்னும் அவ்வகை சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!



22 சுத்த சித்தாந்த சுகப் பெருவெளி எனும்
அத்தனிச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

புனித சித்தாந்த முடிவினதாகும் பரமுத்தி இன்ப நிலைப் பெருவெளி என்னும் அத்தகைய சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

23 தகர மெய்ஞ்ஞானத் தனிப் பெருவெளி எனும்
அகர நிலைப் பதி அருட்பெருஞ் ஜோதி

புன்மை உடலைப் பொன்மை உடலாக மாற்றும் மெய்யறிவுப் பெருவெளி என்று அழைக்கப்பெறும் அகண்டாகார ஞானம் எனும் அகர நிலையில் விளங்கும் அருட்பெருஞ் ஜோதியே!

24 தத்துவ அதீதத் தனிப் பொருள் வெளி எனும்
அத் திரு அம்பலத்து அருட்பெருஞ் ஜோதி

தூல, சூக்கும, காரணமாகும் தத்துவங்களின் முடிவில் விளங்குவதும், ஒப்பற்ற மெய்ப்பொருள் வெளி என்று அழைக்கப் பெறுவதுமாகிய (அத்தகைய) சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

25 சச்சிதா னந்தத் தனிப் பரவெளி எனும்
அச்சு இயல் அம்பலத்து அருட்பெருஞ் ஜோதி

மெய்யறிவின்பமாகிய ஒப்பற்ற மேல்வெளி என்று மேலோரால் அழைக்கப் பெறுவதும் அனைத்திற்கும் ஆதார இயல்பினை உடையதுமாகிய சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

26 சாகாக் கலை நிலை தழைத்திடு வெளி எனும்
ஆகாயத்து ஒளிர் அருட்பெருஞ் ஜோதி

சாகாக் கல்வி நிலை ஓங்கிடச் செய்யும் வெளி என்று பெரியோர்களால் கூறப்பெறும் சத்திய ஞான சபையில் ஒளிர்கின்ற அருட்பெருஞ் ஜோதியே!

27 காரண காரியம் காட்டிடு வெளி எனும்
ஆரணச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

அருட்பிரகாசமாம் மூல காரணமும் அருள் ஒளியாம் அதன் செயற்பாடும் இன்னதென்று காண்பிக்கின்ற சுத்த வேதாந்தப் பெருவெளி என்று அழைக்கப்பெறும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

28 ஏகம் அநேகம் எனப் பகர் வெளி எனும்
ஆகமச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

அருள்நிலை விளங்கும் திருச்சிற்றம்பலம் எனும் தனிப்பெரு வெளியாகி, அதனிடையே பொன்னம்பலம் - பராபரம் - பரம்பரம் - பரம் - சுத்தம் - கலை - உயிர் - பகுதி - பூதவெளி முதலிய பல வெளிகளாகக் கூறுகின்ற சுத்த சித்தாந்த வெளி யாகும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

***சிற்சபை அருட்பெருஞ் ஜோதி***

29 வேத ஆகமங்களின் விளைவுகட்கு எல்லாம்
ஆதாரம் ஆம்சபை அருட்பெருஞ் ஜோதி

வேதத்தின் அனுபவமாகிய தொம்பதம் (உயிர் அனுபவம்) தத்பதம் (அருள் அனுபவம்) அசிபதம் (சிவ அனுபவம்) நிலைகட்கும், ஆகமங்களின் அனுபவமாகிய பதிநிலை, பாசநிலை, பசுநிலை அனுபவங்கட்கும் அடிப்படையாகும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

30 என்று ஆதிய சுடர்க்கு இயல் நிலையாய், அது
அன்று ஆம் திருச்சபை அருட்பெருஞ் ஜோதி

மனஅறிவு, ஜீவ அறிவு, ஆன்ம அறிவு என்னும் சந்திர, சூரிய, அக்கினி ஆகிய மூவகைச் சுடர்களுக்கு இயல்புநிலையாகியும், அம்முச்சுடர்களின் இயல்புநிலை அல்லாதது ஆகியும் விளங்கும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

31 சமயம் கடந்த தனிப்பொருள் வெளியாய்
அமையும் திருச்சபை அருட்பெருஞ் ஜோதி

சத்துவ குணத்தின் வாச்சிய அனுபவம் உடைய சமயங்களுக்கு அப்பாற்பட்ட ஒப்பற்ற மெய்ப்பொருள் வெளியாகி அமைந்து விளங்கும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!



32 முச் சுடர்களும் ஒளி முயங்குற அளித்தருள்
அச் சுடர்ஆம் சபை அருட்பெருஞ் ஜோதி

மன ஒளி, ஜீவ ஒளி, ஆன்ம ஒளியாம் சந்திர, சூரிய, அக்கினி என்னும் மூன்று வகைச் சுடர்களும் ஒளி கலந்து கொள்ளும்படி அருள் அளித்திடும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

33 துரியமும் கடந்த சுக பூரணம் தரும்
அரிய சிற்றம்பலத்து அருட்பெருஞ் ஜோதி

ஜீவ துரியம், பர துரியம், சிவ துரியம் (குரு துரியம்) என்னும் ஒளி வெளி அனுபவப் பெருநிலைகள் கடந்ததும் பரிபூரணப் பேரின்பம் தருவதுமாகிய ஒப்புயர்வு அற்ற சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

34 எவ்வகைச் சுகங்களும் இனிது உற அளித்தருள்
அவ்வகைச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

இம்மை இன்பச் சுகம், மறுமை இன்பச் சுகம், பேரின்பச் சுகம் ஆகிய சுகங்களை அன்பர்கட்கு இனிமையுடன் பொருந்தும்படி அளித்தருளி மேலும் அவ்வவ்வகைச் சுகங்களாகி விளங்கும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

35 இயற்கை உண்மையதாய் இயற்கை இன்பமும் ஆம்
அயர்ப்பு இலாச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

அனாதி இயல்புடைய சத்தியமாகியும் (அனாதி இயல்புடைய மெய்யறிவும்) அனாதி இயல்புடைய ஆனந்தமாகியும் விளங்கும் தளர்விலாத சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

36 சாக்கிராதீதத் தனி வெளியாய் நிறைவு
ஆக்கிய சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

ஜீவத்துவ, பரத்துவ நிலைகட்கு மேம்பட்டு விளங்கும் ஒப்பற்ற ஆன்ம ஆகாசமாய் அதனிடையே முழுமை பெறச் செய்யும் ஆன்மப் பிரகாசமாய் நிறைந்தருளும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

37 சுட்டுதற்கு அரிதாம் சுகாதீத வெளி எனும்
அட்ட மேல் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

இது அது என்று சுட்டிக் கூறுதற்கு அருமை உடையதாய் பேரின்பத்தனிவெளி என்று அழைக்கப்பெறுவதாய், ஐம்பூதங்கள், சந்திரன், சூரியன், அக்னி என்னும் எட்டு வகை நிலைகட்கும் மேல் நிலையாய் விளங்கித் திகழும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

38 நவந் தவிர் நிலைகளும் நண்ணும் ஓர் நிலையாய்
அவம் தவிர் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

பிரம்மன், திருமால், உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன், விந்து, நாதம், பரவிந்து, பரநாதம் என்னும் ஒன்பது நிலை அனுபவங்களும் நீங்கிய ஒப்பற்ற பேரனுபவ நிலையில் பொருந்தக்கூடிய அருள் நிலையாய்ப் பிறவிப் பெருந்துன்பங்கள் யாவும் தவிர்த்தருளும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

39 உபய பக்கங்களும் ஒன்று எனக் காட்டிய
அபய சிற்சபையில் அருட்பெருஞ் ஜோதி

பார்வையால் பஞ்சகிருத்தியம் செய்யும் அணுபட்சம், சொல்லால் பஞ்ச கிருத்தியம் செய்யும் சம்புபட்சம் முதலிய இரண்டாகிய உயர் ஐந்தொழில் நிலைகளும் திருவருள் நிலையில் ஒன்றுதான் எனக் காட்டியருள்கின்ற, ஆன்ம கோடிகளுக்கு அடைக்கலமாகும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

40 சேகரம் ஆம் பல சித்தி நிலைக்கு எலாம்
ஆகரம் ஆம் சபை அருட்பெருஞ் ஜோதி

கர்மசித்தி, யோகசித்தி, ஞானசித்தி, எல்லாம் வல்ல சித்தி எனப் பெறும் பல்வகையாய்ச் சேர்கின்ற சித்தி பேறுகளுக்கெல்லாம் உறைவிட மாகிய சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!



41 மனாதிகட்கு அரிய மதாதீத வெளி ஆம்
அனாதி சிற்சபையில் அருட்பெருஞ் ஜோதி

மனம் முதலிய தத்துவங்கள் யாவற்றினுக்கும் எட்டாததாகிய (சித்தாந்தம், வேதாந்தம், போதாந்தம், கலாந்தம், யோகாந்தம், நாதாந்தம் என்னும்) ஆறுவகை மத அனுபவத்திற்கு மேம்பட்ட வெளியானதும் ஆகித் தொடக்கம் ஏதும் இல்லாத சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

42 ஓதி, நின்று உணர்ந்து உணர்ந்து உணர்தற்கு அரிதாம்
ஆதி சிற்சபயையில் அருட்பெருஞ் ஜோதி

கல்வி என்னும் அபர ஞானத்தால் பலமுறை கற்றுணர்ந்தும்கூட சற்றும் உணர்வதற்கு முடியாததான முதன்மையாகிய சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

43 வாரமும் அழியா வரமும் தரும் திரு
ஆரமுதாம் சபை அருட்பெருஞ் ஜோதி

அன்பின் உரிமையும் அதனால் அழிவடையாத கிருபையும் தந்தருளித் திருவருள் அமுதமாகிய இனிக்கும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

44 இழியாப் பெருநலம் எல்லாம் அளித்து அருள்
அழியாச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

தாழ்வடையாத பேரின்ப நன்மைகள் யாவும் ஈந்தருளும் அழிவடையாத சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

45 கற்பம் பலபல கழியினும் அழிவுறா
அற்புதம் தரும்சபை அருட்பெருஞ் ஜோதி

கோடிக்கணக்கான ஆண்டுகளின் தொகுதியாகிய பலப்பல கற்ப கோடி காலங்கள் சென்றாலும் அழிவடையாத சன்மார்க்க சித்திப் புதுமைகள் ஈந்தருளும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

46 எனைத்தும் துன்பு இலா இயல் அளித்து, எண்ணிய
அனைத்தும் தரும் சபை அருட்பெருஞ் ஜோதி

சிறிதளவேனும் துன்பமடையா அருள் வாழ்வினை ஈந்து எண்ணிய எல்லாவற்றையும் முடித்துத் தரும்படியான சத்திய ஞானசபையின் அருட்பெருஞ் ஜோதியே!

47 பாணிப்பு இலதாய்ப் பரவினோர்க்கு அருள்புரி
ஆணிப் பொன் அம்பலத்து அருட்பெருஞ் ஜோதி

அருள் ஈவதில் சிறிதும் பின்னடையாது, துதித்துப் போற்றுவோர்க்குக் கருணை பாலிக்கின்ற மாற்றறியாத பொன்னம்பலத்து (சத்திய ஞான சபையின்) அருட்பெருஞ் ஜோதியே!

48 எம் பலம் எனத் தொழுது ஏத்தினோர்க்கு அருள்புரி
அம்பலத்து ஆடல்செய் அருட்பெருஞ் ஜோதி

'எமது அருள் வல்லபமே' எனப் பணிந்து போற்றுவோர்க்குக் கருணை பாலிக்கும் சத்திய ஞான சபையின் அருள் நடம்புரிகின்ற அருட்பெருஞ் ஜோதியே!

49 தம் பரஞான சிதம்பரம் எனும் ஓர்
அம்பரத்து ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

நம் தமது உத்தர ஞான சித்திபுரம், என்று அருளாளர்களால் அழைக்கப்பெறும் ஒப்பற்ற சத்திய ஞான சபையின் ஓங்கி ஒளிரும் அருட்பெருஞ் ஜோதியே!

50 எச்சபை பொது என இயம்பினர் அறிஞர்கள்
அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ் ஜோதி

எச் சபை பொது என (பொது = உயிர்க்குலம்) மெய்யறிவாளர்கள் கூறுவார்களோ அத்தகைய சத்திய ஞான சபையில் சிறப்புடன் விளங்கிடும் அருட்பெருஞ் ஜோதியே!



51 வாடுதல் நீக்கிய மணிமன் றிடையே
ஆடுதல் வல்ல அருட்பெருஞ் ஜோதி

உயிரினது மரணத் தளர்ச்சியைப் போக்கியருள்கின்ற மணிமன்றம் என்னும் சத்திய ஞான சபையில் உரிமையோடு அருளாடல் புரியும் அருட்பெருஞ் ஜோதியே!

52 நாடகத் திருச் செயல் நவிற்றிடும் ஒருபேர்
ஆடகப் பொது ஒளிர் அருட்பெருஞ் ஜோதி

உயிர்களைத் தன்போல் ஆக்கும் அருள் நடம் என்னும் திருவருட் கூத்தினைப் புரிகின்ற, ஒப்பற்ற பொன்மணி மன்றமாகிய சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

53 கற்பனை முழுவதும் கடந்து ஒளிதரும் ஓர்
அற்புதச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

இல்லாததை இருப்பதாய்ச் சொல்லுகின்ற இம்மை இன்ப, மறுமை இன்ப கற்பனைகள் யாவையும் கடந்து (பேரின்ப நிலையில் விளங்கி) அருள் பிரகாசம் ஈந்தருள்கின்ற ஓர் அற்புத சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

54 ஈன்ற நல்தாயினும் இனிய பெருந்தயவு
ஆன்ற சிற்சபையில் அருட்பெருஞ் ஜோதி

பெற்றெடுத்துப் பேணி வளர்க்கின்ற சிறந்த தாயைவிட எவ்வுயிர்க்கும் இனிமைத்தாயாகிப் பேரருள் சுரந்து ஒளிரும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

55 இன்புஉறு நான் உளத்து எண்ணியாங்கு
எண்ணியாங்கு
அன்பு உறத் தருசபை அருட்பெருஞ் ஜோதி

பேரின்ப நிலையில் திளைக்கும் என் கருத்து எண்ணியபடி எண்ணியபடி எல்லாம் அன்புடன் ஈந்தருளும் சத்திய ஞான சபையின் அருட்பெருஞ் ஜோதியே!

56 எம்மையும் என்னைவிட்டு இறையும் பிரியாது
அம்மை அப்பனும் ஆம் அருட்பெருஞ் ஜோதி

இம்மை, மறுமை, பேரின்ப வாழ்வுகளில் என்னை நொடிப்பொழுதும் பிரிதல் இல்லாமல் என் உயிர்க்கு அருள் தாயும் அருள் தந்தையுமாகி விளங்கும் அருட்பெருஞ் ஜோதியே!

57 பிறிவுற்று அறியாப் பெரும் பொருளாய், என்
அறிவுக்கு அறிவு ஆம் அருட்பெருஞ் ஜோதி

என்னைச் சிறுபொழுதும் பிரிந்திட எண்ணாத ஒப்பற்ற மெய்ப்பொருளையும், என் ஆன்ம அறிவுக்கு ஆதார அருள் அறிவாகியும் விளங்கும் அருட்பெருஞ் ஜோதியே!

58 சாதியும் மதமும் சமயமும் காணா
ஆதி அநாதி ஆம் அருட்பெருஞ் ஜோதி

உயர்வு தாழ்வு முதலிய சாதிப் பிரிவுகளும், வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதப்பிரிவுகளும், சைவம் சமணம் முதலிய சமயப் பிரிவுகளும் கண்டுணராத தோன்று நிலை இயல்புப் பொருளாகியும் தோன்றாநிலை இயல்புப் பொருளாகியும் விளங்கும் அருட்பெருஞ் ஜோதியே!

59 தநு கரணாதிகள் தாம் கடந்து அறியும் ஓர்
அநுபவம் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

உடல், மனம், உலகம், இன்பம் ஆகிய நிலைகள் யாவும் நீங்கிய நிலையில், சுத்த ஆன்ம அறிவால் மட்டும் அறியப்படும் ஒப்பற்ற அருள் அனுபவமாகிய அருட்பெருஞ் ஜோதியே!

60 உனும் உணர்வு உணர்வாய் உணர்வு எலாம் கடந்த
அநுபவாதீத அருட்பெருஞ் ஜோதி

உள்ளத்து உணர்வில் கருத்து உணர்வாய் (மேலும் புலன், மனம் முதலிய) அவ்வுணர்வுகள் யாவும் நீங்கிய ஆன்மானுபவத்திற்கும் அருள் அனுபவத்திற்கும் அப்பாற்பட்டு ஓங்கும் அருட்பெருஞ் ஜோதியே!



61 பொது உணர்வு உணரும்போது அலால், பிரித்தே
அது எனில், தோன்றா அருட்பெருஞ் ஜோதி

எவ்வுயிரையும் தனக்குச் சமமாக உணரும் பொழுதில் அன்றி உலகம் வேறு, உயிர் வேறு, இறைவேறு எனப் பிரித்து(அது என எண்ணி)க் கூறுவோமானால் தோன்றாத் தன்மையதாகிய அருட்பெருஞ் ஜோதியே!

62 உளவினில் அறிந்தால் ஒழிய, மற்று அளக்கின்
அளவினில் அளவா அருட்பெருஞ் ஜோதி

உயிருள் இறைவன் விளங்குவதாகிய உளவு நிலையால் அறிய முயன்றால் அன்றி, வேதாகமம் முதலிய கலை அளவுகளால் அளந்திட முயன்றால் அளக்க முடியாததாகிய அருட்பெருஞ் ஜோதியே!

***யாவும் தாமாகி விளங்குதல்***

63 என்னையும் பணிகொண்டு இறவா வரம் அளித்து
அன்னையில் உவந்த அருட்பெருஞ் ஜோதி

எளியவனாகிய என்னையும் உயிர்நேயத் தொண்டுக்கு ஆளாக்கி என்றும் மரணம் அடையாத ஆசீர்வாதமும் அளித் தருளித் தாயினும் மகிழ்ந்திடும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

64 ஓதி ஓதாமல் உறவு எனக்கு அளித்த
ஆதி ஈறு இல்லா அருட்பெருஞ் ஜோதி

அடியேன் நின் அருட்புகழைத் துதிக்கும்படிச் செய்தும், கலைநூல் கல்வி யாதொன்றும் கற்றிடாமல் பூரண அறிவு பெறும்படிச் செய்தும் யானே தானாகும் சம்பந்தத்தை அளித்தும் அருளிய தோற்றமும் முடிவும் இல்லாத அருட்பெருஞ் ஜோதியே!

65 படிஅடி, வான் முடி பற்றினும் தோற்றா
அடி முடி எனும் ஓர் அருட்பெருஞ் ஜோதி

பூமியின் கீழ் எல்லையும், ஆகாயத்தின் மேல் எல்லையும் கொண்டு ஓங்கிப் பார்த்திடினும் முயன்றிடினும் யாதொன்றும் காண முடியாத திருவடி நிலையும் திருமுடி நிலையும் கொண்ட ஒப்பற்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

66 பவனத்தின் அண்டப் பரப்பின் எங்கெங்கும்
அவனுக்கு அவனாம் அருட்பெருஞ் ஜோதி

பூமியிலும், அண்டவெளிகளிலும் மற்றும் எவ்வெவ்விடங்களிலும் உள்ள ஆணுயிருக்குத் தெய்வ ஆணாகிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

67 திவள்உற்ற அண்டத் திரளின் எங்கெங்கும்
அவளுக்கு அவளாம் அருட்பெருஞ் ஜோதி

விளங்குகின்ற விண்ணகக் கூட்டத் திரள்களிலும் மற்று எவ்வெவ்விடங்களிலும் உள்ள பெண்ணுயிருக்குத் தெய்வப் பெண்ணாகிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

68 மதன்உற்ற அண்ட வரைப்பின் எங்கெங்கும்
அதனுக்கு அதுவாம் அருட்பெருஞ் ஜோதி

வளமை உற்ற வானகப் பரப்புகளிலும் மற்று எவ்வெவ்விடங்களிலும் உள்ள அஃறிணைப் பொருளுக்கு, தெய்வப் பொருளுமாகிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

69 எப்பாலுமாய் வெளிஎல்லாம் கடந்து, மேல்
அப்பாலும் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

எப்பக்கங்களிலும் நிறைந்ததாகியும் பூத வெளிமுதலாக பெருஞ் சுகவெளி ஈறாக உள்ள எல்லா வெளிகளையும் கடந்ததாகியும் மேலும் அவற்றிற்கு அப்பாற்பட்டதாகியும் விளங்கும் அருட்பெருஞ் ஜோதியே!

70 வல்லதாய் எல்லாம் ஆகி எல்லாமும்
அல்லதாய் விளங்கும் அருட்பெருஞ் ஜோதி

எல்லாமும் வல்லதாகியும், எல்லா உலகங்களும் எல்லா உயிர்களும் எல்லாப் பொருள்களும் எல்லா இன்பங்களுமாகியும் அவையாவும் அல்லாததாகியும் ஒளிரும் எம் அருட்பெருஞ் ஜோதியே!



71 எப்பொருள் மெய்ப்பொருள் என்பர் மெய்கண்டோர்
அப்பொருள் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

சத்தியத்தின் இயல்பினை உள்ளபடி உணர்ந்தவர்கள் ‘எத்தகைய பொருள் அழியாத இயற்கை உண்மைப் பொருள்’ என்று கூறுவார்களோ, அத்தகைய பொருளாகி விளங்கும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

72 தாங்கு அகிலாண்ட சராசர நிலைநின்று
ஆங்குஉற விளங்கும் அருட்பெருஞ் ஜோதி

அந்தரத்தில் நிறுத்திய சகல அண்டங்களின் இயங்கும் உயிர், இயங்காத உயிர்களின் உள்ளே நின்று அவை அவை வாழ்வுற விளங்கும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

73 சத்தர்கள் எல்லாம் தழைத்திட அகம் புறத்து
அத்திசை விளங்கும் அருட்பெருஞ் ஜோதி

ஐந்தொழில் கடவுளர்களுக்கு மேலாகி பரசிவ நிலைக்கும் அப்பாற்பட்டு சுத்த தத்துவங்களை நடத்தும் சத்தர்கள் யாவரும் செழித்தோங்கும்படியாக அவர்களது அகத்தும் புறத்தும் அவ்வவ்விடங்களிலும் நிறைந்து விளங்குகின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

74 சத்திகள் எல்லாம் தழைக்க எங்கெங்கும்
அத்தகை விளங்கும் அருட்பெருஞ் ஜோதி

அக அமுதம் அருந்தும் தகுதியுடையவர்களாகிச் சுத்த தத்துவங்களை நடத்தும் சத்தர்களுக்குப் பணிபுரியும் சத்திகள் யாவரும் செழித்து ஓங்கும்படியாக எவ்வெவ் இடங்களிலும் நிறைந்து விளங்கும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

75 முந்துறும் ஐந்தொழில் மூர்த்திகள் பலர்க்கும்
ஐந்தொழில் அளிக்கும் அருட்பெருஞ் ஜோதி

உலகம் படைத்தல் முதலிய ஐந்தொழிலும் ஞானம் படைத்தல் முதலிய ஐந்தொழிலும் செய்கின்ற பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேச்சுவரன், சதாசிவன் என்னும் மூர்த்திகள் மூர்த்தர்கள் முதலிய பல வகையினர்க்கும் ஐந்தொழில் செய்யும் வல்லபங்களை அளித்தருள்கின்ற அருட்பெருஞ் ஜோதியே!

76 பெரிதினும் பெரிதாய்ச் சிறிதினும் சிறிதாய்
அரிதினும் அரிதாம் அருட்பெருஞ் ஜோதி

பேரண்டங்களைவிடப் பெரியதாகியும் சிற்றணுக்களைவிடச் சிறியதாகியும் அரிதாகிய மனிதன் பெறும் பேரின்ப அனுபவத்தைவிட அரிதாகிய அனுபவமாகியும் விளங்குகின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

77 காட்சியும், காணாக் காட்சியும், அது தரும்
ஆட்சியும் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

இந்திரியக் காட்சி, கரணக் காட்சி, ஜீவக் காட்சி, ஆன்மக் காட்சிகளாயும், இந்தக் காட்சிகளால் காணமுடியாத அருட்காட்சியாயும் ஆகி, அத்தகைய அருட்காட்சிகளை ஈந்தருளும் அருளாட்சி உடையது மாகிய எமது அருட்பெருஞ் ஜோதியே!

78 இன்புஉறு சித்திகள் எல்லாம் புரிக என்று
அன்புடன் எனக்கு அருள் அருட்பெருஞ் ஜோதி

இம்மை இன்ப சித்திகள், மறுமை இன்ப சித்திகள், பேரின்பச் சித்திகள் எல்லாம் 'நீயே உயிர்களுக்கு ஈந்தருள்க' என்று நேயத்துடன் என்தனக்கு அருள்கின்ற எமது அருட்பெருஞ் ஜோதியே!

79 இறவா வரம் அளித்து என்னை மேலேற்றிய
அறவாழி யாம் தனி அருட்பெருஞ் ஜோதி

என்றும் மரணமுறா ஆசீர்வாதம் தந்து, எளியனாகிய என்னை அருட்ஜோதி ஆட்சி பீடத்துக்கு ஏற்றிய சத்திய தருமக் கடலாகி விளங்கும் ஒப்பற்ற எமது அருட்பெருஞ் ஜோதியே!

80 நான் அந்தம் இல்லா நலம் பெற எனக்கே
ஆனந்தம் நல்கிய அருட்பெருஞ் ஜோதி

எளியேனாகிய நான் மரணமாம் முடிவுநிலை பெறாது, அருள் இன்பத்தைப் பெற்றிடு என்று என்தனக்கே பேரின்பம் ஈந்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



81 எண்ணிய எண்ணியாங்கு இயற்றுக என்று எனை
அண்ணி உள் ஓங்கும் அருட்பெருஞ் ஜோதி

'நினைத்தவை நினைத்தபடியே செய்திடுக' என்று என்பால் அன்புடன் அணுகி என் உள்ளத்தில் ஓங்கி ஒளிர்ந்திடும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

82 மேயினை மெய்ப்பொருள், விளங்கினை, நீ அது
ஆயினை என்று அருள் அருட்பெருஞ் ஜோதி

'உயிர் இரக்கப் பெரு நெறியைப் பின்பற்றினாய், அதனால் எல்லாம் வல்ல கடவுள் நிலையை விளங்கிக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றாய், அம்மட்டோ அதனால் தனிப்பெரும் கடவுளாகவே ஆகிவிட்டாய்' என்று அருள் புரிகின்ற அருட்பெருஞ் ஜோதியே!

83 எண்ணில், செழுந்தேன் இனிய தெள் அமுது என
அண்ணித்து இனிக்கும் அருட்பெருஞ் ஜோதி

கருதும் பொழுதெல்லாம் மாட்சிமை நிறைந்த தேன் எனவும் அகம் புறம் எல்லாம் இனிக்கச் செய்யும் தெள்ளிய அமிர்தம் எனவும் எளியவனிடமும் பொருந்தித் தித்திக்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

84 சிந்தையில் துன்பு ஒழி, சிவம் பெறுக எனத்தொழில்
ஐந்தையும் எனக்கு அருள் அருட்பெருஞ் ஜோதி

நின் மனத்தினது கவலைகள் யாவும் நீக்குக, அத்துடன் (சத்து, சித்து, ஆனந்தமாகிய) கடவுள் பேற்றினையும் அடைந்திடுக என்று (அணுபட்சம், பரமாணுபட்சம், பிரதிகிருதி பட்சம், சம்பு பட்சம், விபு பட்சம் ஆகிய) ஐந்தொழில்களையும் எனக்கு ஈந்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

85 எங்கெங்கு இருந்து உயிர் ஏது எது வேண்டினும்
அங்கங்கு இருந்து அருள் அருட்பெருஞ் ஜோதி

இம்மை, மறுமை, ஒருமை நிலைகளில் இருந்து உயிர்க் கூட்டங்கள் எப்படி யாசித்தாலும் யாது யாசித்தாலும் அம் மூவகை நிலைகளிலும் நிலை பெற்று அருள் செய்கின்ற அருட்பெருஞ் ஜோதியே!

86 சக முதல் புறப்புறம், தங்கிய அகப்புறம்
அகம் புறம் முற்றும் ஆம் அருட்பெருஞ் ஜோதி

மண் உலகம் முதலாகப் பேரண்டம் ஈறாகவும் விண்மீன், நிலவு, கதிரவன், அக்கினி ஆகியவற்றினிடத்தும், பொறிகள், மனம், ஜீவன், ஆன்மா ஆகியவற்றினிடத்தும் (எட்டிடத்து) நிறைவாகி ஒளிர்ந்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

87 சிகரமும் வகரமும் சேர்தனி உகரமும்
அகரமும் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

எல்லாம்வல்ல இறைவனைச் சுட்டும் 'சி' என்னும் எழுத்தாகியும் இறைவனிடத்தில் பிரிவு படாத அருளினைச் சுட்டும் 'வ' என்னும் (சிகர வகரம்) எழுத்தாகியும், அவரின் காத்தலுக்குரிய ஒப்பற்ற 'உ' என்னும் எழுத்தாகியும், அகண்டாகார அருட் ஜோதி அறிவினை விளக்கிடும் 'அ' என்னும் எழுத்தாகியும் (அகர உகரம்) ஒளிர்கின்ற எமது அருட்பெருஞ் ஜோதியே!

88 உபரச வேதியின் உபயமும் பரமும்
அபரமும் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

இரசவாதம், உபரசவாதம் என்னும் பதினான்குவகை வாத வித்தைகளின் சாத்திர அறிவாகியும், அனுபவ அறிவாகியும், அவ்விரண்டின் அறிவாகியும் விளங்குகின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

89 மந்தணம் இது என மறுவிலா மதியால்
அந்தணர் வழுத்தும் அருட்பெருஞ் ஜோதி

அருள் ஒளிரும் உள்ளத்தில் மறைந்திருக்கின்ற இரகசியமே எனக் குறைவற்ற அறிவினைக்கொண்டு உயிர்நேய அனுபவி களால் வாழ்த்தப்படுகின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

90 எம்புயக் கனி என எண்ணுவார் இதய
அம்புயத்து அமர்ந்த அருட்பெருஞ் ஜோதி

எமது உள்ளங்கை நெல்லிக்கனிபோல உயிர்நேய உணர்வி னால் இடைவிடாது எண்ணுபவர் தம் உள்ளத் தாமரையில் வீற்றிருந்து அருளும் அருட்பெருஞ் ஜோதியே!



91 செடி அறுத்தே திட தேகமும் போகமும்
அடியருக்கே தரும் அருட்பெருஞ் ஜோதி

வினைத்துன்பம் நீக்கி வலுவான உடல் வளமும் மேலான இன்பப் பேறும் அடியார்களின் பொருட்டுத் தந்து உதவுகின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

92 துன்பு அறுத்து ஒருசிவ துரிய சுகம்தனை
அன்பருக்கே தரும் அருட்பெருஞ் ஜோதி

பிறவித் துன்பம் நீக்கி ஒப்பற்ற குருதுரியமாகிய பேரின்பப் பேற்றினை உயிர் நேய நெறியாளர்க்கென்றே தந்து உதவுகின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

93 பொது அது, சிறப்பு அது, புதியது, பழையது என்று
அது அதுவாய்த் திகழ் அருட்பெருஞ் ஜோதி

(கடவுள் நிலை) யாவர்க்கும் பொதுவாய் விளங்குவது, அன்பர்களுக்குச் சிறப்பாக விளங்குவது, அந்நிலையே புத்தம் புதுமைகளையும் ஏற்பது, முன்னம் பழமைக்கும் பழமை யானது என்று அவ்வாறு விளங்குகின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

94 சேதனப் பெருநிலை திகழ்தரும் ஒரு பரை
ஆதனத்து ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

ஆன்ம தரிசனம் அருள் தரிசனம் ஆகியவற்றிற்கு மேலாகி விளங்கும் அழியாப் பெரு நிலையாம் ஒப்பற்ற பரசிவ சக்தி (யாகிய) தரிசன நிலையிலும் ஓங்கி ஒளிரும் எமது அருட்பெருஞ் ஜோதியே!

95 ஓ(ம்)மயத் திருஉரு உவப்புடன் அளித்து, எனக்கு
ஆமயத் தடை தவிர் அருட்பெருஞ் ஜோதி

எனக்குப் பிரணவ தேகத் திருமேனியை உவகையோடு ஈந்தருளி ஆன்மாவின் மலம் மாயை என்னும் இருள் நிலைக் குறுக்கீடுகளை நீக்கியருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

96 எப்படி எண்ணியது, என் கருத்து இங்கு, எனக்கு
அப்படி அருளிய அருட்பெருஞ் ஜோதி

என் உள்ளக் கருத்து எவ்வாறு எவ்வாறு எண்ணியதோ அவ்வாறே அவ்வாறே முடித்துக் கொள்ள எனக்குக் கிருபை கூர்ந்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

97 எத்தகை விழைந்தன என்மனம் இங்கு, எனக்கு
அத்தகை அருளிய அருட்பெருஞ் ஜோதி

எவ்வகையில் எவ்வகையில் என் நெஞ்சம் விரும்பினவோ அவ்வகையில் அவ்வகையில் நிறைவேற்றிக் கொள்ள எனக்குக் கருணை கூர்ந்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

98 இங்குறத் திரிந்து உளம் இளையா வகை எனக்கு
அங்கையில் கனிஆம் அருட்பெருஞ் ஜோதி

இவ்வுலக வாழ்வின்போது எனது உள்ளம் அலைந்து தளராத படியும், எனக்கு யாவும் நிறைவேறும்படியும், உள்ளங்கையில் (நெல்லிப்) பழம் போன்றதாகி அருள்புரியும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

99 பார் உயப் புரிக எனப் பணித்து எனக்கருளி என்
ஆருயிர்க்குள் ஒளிர் அருட்பெருஞ் ஜோதி

உலக உயிர்கள் நல்வாழ்வு அடையும்படிச் செயலாற்றுக என்று எனக்குக் கட்டளை இட்டருளியதுடன் என்தன் நேரிய உயிர்க்குள்ளும் நீங்காது ஒளிர்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

100 தேவியுற்று ஒளிர்தரு திருஉருவுடன் எனது
ஆவியில் கலந்து ஒளிர் அருட்பெருஞ் ஜோதி

மாணிக்க வல்லி (என்னும் ஞான ஆனந்த வல்லி) யுடன் பொருந்தி மாற்றறியாச் செழும் பசும் பொன்னினும் பிரகாசிக்கின்ற அருள் திருமேனியுடன் என் உள்ளத்தே காட்சியளித்து எனது உயிரின் உயிரினுள்ளும் ஒன்றுபட்டு ஒளிர்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!



101 எவ்வழி மெய்வழி என்ப வேதாகமம்
அவ்வழி எனக்கு அருள் அருட்பெருஞ் ஜோதி

சத்திய வேத முறைகளும் தூய ஆகமக் கலைகளும் எந்த மார்க்கம் உண்மை மார்க்கம் என்கின்றனவோ அத்தகைய சுத்த சன்மார்க்கத்தைப் பின்பற்ற எனக்குக் கருணைபாலிக்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

102 வையமும் வானமும் வாழ்த்திட எனக்கு அருள்
ஐ அறிவு அளித்த அருட்பெருஞ் ஜோதி

உலகத்து உயிர்களும் வானகத்து உயிர்களும் போற்றிட, அருள் பஞ்ச கிருத்தியங்கள் செய்யும் மெய்ஞ்ஞானம் அளித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

103 சாமாறு அனைத்தும் தவிர்த்து இங்கு எனக்கே
ஆமாறு அருளிய அருட்பெருஞ் ஜோதி

இறந்து போவதற்குத் துணையான வினை, மதம், மலம், மாயையுடன் நரை, திரை, பிணி, மூப்பு என்கிற தடைகள் அனைத்தும் நீக்கி இவ்வுலகிலேயே கடவுள் நிலையை அடையும்படிக் கருணை பாலித்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

104 சத்தியம் ஆம் சிவசத்தியை ஈந்து எனக்கு
அத்திறல் வளர்க்கும் அருட்பெருஞ் ஜோதி

எளியனாகிய எனக்கும் இயற்கை உண்மையாம் சிவசத்தித் தகுதியை உலக உயிர்கள் மேம்பட என்றே கொடுத்தருளி எல்லாம் வல்ல பேராற்றலையும் என்னிடம் வளர்த்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

105 சாவா நிலை இது தந்தனம் உனக்கே
ஆவா என அருள் அருட்பெருஞ் ஜோதி

மரணமிலாப் பெருநிலையாகிய சுத்த, பிரணவ, ஞானதேக நிலை இதனை அடடா! அடடா! உன்தனக்கு மட்டுமே சர்வ சுதந்தரமாகக் கொடுத்தருளினோம் என்று தயவு கூர்ந்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

106 சாதியும் மதமும் சமயமும் பொய்என
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் ஜோதி

மேல் வகுப்பு, கீழ் வகுப்பு என்கிற பாகுபாடுகளும் வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம், நாதாந்தம் என்கிற மதக் கோட்பாடுகளும்; சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்துவம், மகமதியம், உலகாயதம் என்கிற சமய நடைமுறைகளும் பொய்மை உடையனவே என இளம்பருவத் திலேயே உணர்த்தியருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

107 மயர்ந்திடேல் சிறிதும் மனம் தளர்ந்து அஞ்சேல்
அயர்ந்திடேல் என்று அருள் அருட்பெருஞ் ஜோதி

உள்ளம் சலித்து மயக்கம் அடைதல் வேண்டாம்; சற்றும் மனத் தளர்வினால் பயமடைதல் வேண்டாம்; மேலும் ஐம்புலன் களாலும் களைப்படைதல் வேண்டாம் என்று என்னிடம் காருண்யம் வைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

108 தேசு உறத் திகழ்தரு திருநெறிப் பொருள் இயல்
ஆசு அறத் தெரித்த அருட்பெருஞ் ஜோதி

அருட்பிரகாசம் ஓங்கி வளர்வதற்கான தாசமார்க்கம் சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் ஆகிய தெய்வத் திருநெறி களின் உண்மைக் கருத்தின் இயல்பினை அப்பழுக்கில்லாமல் என்தனக்குத் தெரிவித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

109 காட்டிய உலகு எலாம் கருணையால் சித்தியின்
ஆட்டியல் புரியும் அருட்பெருஞ் ஜோதி

வரையறை செய்தருளிய எல்லா உலகங்களிலும், பெருந் தயவினால், அருட்சித்திக் கூத்தின் இயல்பினைச் செய்தருள் கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

110 எம் குலம் எம் இனம் என்ப, தொண்ணூற்றாறு
அங்குலம் என்று அருள் அருட்பெருஞ் ஜோதி

எமது சாதி, எமது வர்க்கம் என்பதெல்லாம் தொண்ணூற்றாறு அழகிய தத்துவங்களால் ஆன ஒரே மானிடப் பிரிவுதான் என்று அறிவித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



111 எம்மதம் எம் இறை என்ப உயிர்த்திரள்
அம் மதம் என்று அருள் அருட்பெருஞ் ஜோதி

எமது கோட்பாடு, எமது கடவுள் என்பதெல்லாம் உயிர்க் கூட்டங்களாகிய அவற்றின் தற்போத அறிவு வளர்ச்சி நிலைகளே என்று தெரிவித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

112 கூறிய கருநிலை குலவிய கீழ் மேல்
ஆறியல் என உரை அருட்பெருஞ் ஜோதி

கருப்பை, முட்டை, நிலம், அழுக்கு ஆகியவற்றின் மூலம் தோன்றி ஒளிர்கின்ற நான்கு வகை உயிர்கள் யாவும் கீழ்நிலையிலிருந்து மேல்நிலை வரை ஒன்று முதல் ஆறு தன்மைஉடையனவே என உரைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

113 எண்தர முடியாது இலங்கிய பற்பல
அண்டமும் நிறைந்து ஒளிர் அருட்பெருஞ் ஜோதி

எண்ணிக் கூறமுடியாமல் விளங்குகின்ற பல்வேறு வகையான அண்டகோடிகளின் அகத்திலும் புறத்திலும் பூரணமாகிப் பிரகாசிக்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

114 சார் உயிர்க்கு எல்லாம் தாரகம் ஆம் பரை
ஆயிருர்க்கு உயிராம் அருட்பெருஞ் ஜோதி

தன்னைச் சார்ந்த எல்லா உயிர்களுக்கும் ஆதாரமாகிய பராசக்தியாகியும், மற்று எங்கும் நிறைந்த எல்லா உயிர் களுக்கும் உயிருமாகிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

115 வாழி நீடூழி வாழி என்று ஓங்கு பேர்
ஆழியை அளித்த அருட்பெருஞ் ஜோதி

எல்லாம் வல்ல சித்தி பெற்று வாழ்வாயாக, நெடிதான ஊழி ஊழிக் காலம் கடந்தும் எல்லாம் வல்ல இறைமை பெற்று வாழ்வாயாக என்று ஓங்கிடும் பேரருள் ஆணையைச் செலுத்தும் ஆட்சியை எனக்களித்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

116 மாய்ந்தவர் மீட்டும் வருநெறி தந்து, இதை
ஆய்ந்திடு என்று உரைத்த அருட்பெருஞ் ஜோதி

மாண்டவர் மீளவும் உயிர் பெற்றும், உணர்வு பெற்றும் உயர்கின்ற அருள் வழியை ஈந்ததுடன் அல்லாமல் அவ்வாறு செய்யும்படிக்குத் தான் கட்டளை இட்டதனையும் ஆராய்ந்திடுக என்று கூறியருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

117 எச்சம் நினக்கு இலை, எல்லாம் பெறுக என்று
அச்சம் தவிர்த்த என் அருட்பெருஞ் ஜோதி

வினைக்குறைபாட்டை அனுபவிக்கும் மிச்சம் மீதமுள்ள வாழ்வு நினக்கு இனி இல்லை; ஆதலின் எல்லாமான அருளாட்சியின் சீர்மைகள் யாவும் பெற்றிடுக என்றுரைத்து எனது மரண பயமும் நீக்கிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

118 நீடுக நீயே நீள் உலகு அனைத்தும் நின்று
ஆடுக என்ற என் அருட்பெருஞ் ஜோதி

நீயே அருள் ஆட்சியினை நெடிது ஆள்க! ஓங்குகின்ற அண்ட கோளங்கள் புவனங்கள், உலகங்கள் யாவற்றிலும் நீயே நிலை பெற்று ஆனந்த நடனமும் அருள் நடனமும் புரிந்தருள்க என்று உரைத்தருளிய எம் தனிப் பெருங் கருணையே!

119 முத்திறல் வடிவமும் முன்னியாங்கு எய்துறும்
அத்திறல் எனக்கு அருள் அருட்பெருஞ் ஜோதி

சுத்த தேக வடிவும், பிரணவ தேக வடிவும், ஞான தேக வடிவும் எண்ணும் போதெல்லாம் எண்ணும் போதெல்லாம் அடைந்து அருளாட்சி புரிகின்ற மேலாகிய அருள் வல்லபத்தினை எனக்கு ஈந்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

120 மூவகைச் சித்தியின் முடிபுகள் முழுவதும்
ஆ வகை எனக்கு அருள் அருட்பெருஞ் ஜோதி

சுத்த கரும சித்தி, சுத்த யோக சித்தி, சுத்த ஞான சித்தி ஆகிய மூவகைச் சித்திகளின் பயன்பாடுகள் முழுதும் உயிர்க்குலங்கள் மேம்படும் வழியில் எனக்கு அனுக்கிரகித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



121 கரும சித்திகளின் கலை பல கோடியும்
அரசு உற எனக்கு அருள் அருட்பெருஞ் ஜோதி

அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் எட்டுவகை யாவனவும் பிறவுமான கரும சித்தி நிலைகள் பலப்பல கோடிகளையும் ஆண்டு அனுபவிக்க எனக்குக் கருணைபாலித்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

122 யோக சித்திகள் வகை உறு பல கோடியும்
ஆக என்று எனக்கு அருள் அருட்பெருஞ் ஜோதி

நூற்று எட்டு ஆண்டிற்குள் புதைத்த தேகத்தை உயிர்ப்பிக்கும் வல்லபம் உடையதும் அறுபத்து நான்கு சித்திகளையும் தற்சுதந்திரத்தில் நடத்துவதுமான யோக சித்திகள் பலப்பல கோடிகளும் உயிர்க்குலம் மேம்படுதற்காக என்றே என் தனக்கு அருள் பாலித்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

123 ஞான சித்தியின் வகை நல்விரிவு அனைத்தும்
ஆனியின்று எனக்கு அருள் அருட்பெருஞ் ஜோதி

காலம் கடந்தும் அறுநூற்று எண்பத்தெட்டு கோடி வகையான மகா சித்திகளைத் தன் சுதந்திரத்தில் நடத்துவதுமாகிய சுத்த ஞான சித்தியின் தொகை வகை விரிவுகள் யாவும் துன்பம் ஏதுமின்றி எனக்குக் கிடைக்கும்படித் தயவு கூர்ந்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

124 புடை உறு சித்தியின் பொருட்டே முத்தியை
அடைவது என்று அருளிய அருட்பெருஞ் ஜோதி

உடனாகிப் பொருந்துகின்ற சுத்த கர்ம சித்தி, சுத்தயோக சித்தி, சுத்த ஞான சித்திகளின் காரணமாகவே முதலில் முத்திப் பேற்றினை அடைந்தனுபவிக்கும்படியான நியதி அமைக்கப் பெற்றுள்ளது என்று தெரிவித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

125 முத்தி என்பது நிலை முன் உறு சாதனம்
அத்தக என்ற என் அருட்பெருஞ் ஜோதி

முத்திப்பேறு என்பது ஆன்மானுபவ நிலையாகிய முதற்படி பொருந்தும் அடையாள முயற்சி என்று தெரிவித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

126 சித்தி என்பது நிலை சேர்ந்த அநுபவம்
அத்திறல் என்ற என் அருட்பெருஞ் ஜோதி

சித்திப்பேறு என்பது அருட்பெருஞ் ஜோதியின் அனுபவப் பேராற்றலை முடிந்த முடிபாகப் பொருந்தும் நிலைபேறாகும் எனத் தெரிவித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

127 ஏக சிற்சித்தியே இயல் உற அனேகம்
ஆகியது என்ற என் அருட்பெருஞ் ஜோதி

அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரின் ஒன்றாகிய சிற்சித்தி ஆற்றலே அனேக விதமான கர்ம சித்தி, யோக சித்தி, ஞான சித்திகளாக விளங்கும்படி ஆகியுள்ளது என்று தெரிவித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

128 இன்ப சித்தியின் இயல் ஏகம் அனேகம்
அன்பருக்கு என்ற என் அருட்பெருஞ் ஜோதி

அருட்பெருஞ் ஜோதியின் சிற்குண சிவானந்த சித்தியின் இயல்பு ஒன்றாகவும் பலவாகவும் இறையன்பர்களுக்குப் பொருந்தும்படி ஆக்கப் பெற்றுள்ளது என்று தெரிவித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

129 எட்டு இரண்டு என்பன இயலும் முற்படிஎன
அட்ட(ம்) நின்று அருளிய அருட்பெருஞ் ஜோதி

ஓங்காரத்துள் முதன்மை வகிக்கும் 'அ'(எட்டு) என்னும் பதிநிலை அக்கரமும், இடைநிலை வகிக்கும் 'உ' (இரண்டு) என்னும் பசுநிலை அக்கரமும், அருளும் அன்புமாக இருப்பத றிந்து அனுபவமாதலே முதலில் கிட்டும் தகுதி என ஐம்பூதம், அக்னி, சூரியன், சந்திரன் ஆகிய எட்டுவகைப் பொருள்களிலே நின்று புறத்தும் அகத்தும் கருணை பாலித்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

130 இப்படி கண்டனை, இனி உறு படி எலாம்
அப்படியே எனும் அருட்பெருஞ் ஜோதி

எட்டும் இரண்டுமாகிய பதிநிலை அருள் என்றும் பாசநிலை அன்பு என்றும் கூறும் அநுபவத்தினைக் கண்டுணர்ந்தாய், இனிமேல் பொருந்தும் மற்ற அநுபவங்கள் யாவும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுச் சுத்தசிவ அனுபவ நிலையே என்று உரைத் தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



131 படி முடி கடந்தனை, பார் இது பார் என
அடி முடி காட்டிய அருட்பெருஞ் ஜோதி

கீழ்நவநிலைகள், மேல்நவநிலைகள் ஆகிய பதினான்கு (18-4) நிலை அனுபவத்திற்கும் மேம்பட்டாய் என்பதை உணர்வாயாக! இதனைப் பட்டறிந்து பார்ப்பாயாக என்று நிராசையின் அடையாளமாகிய அடி நிலையையும், சிவப் பிரகாசத்தினை அனுபவித்து இன்புறுகின்ற முடி நிலையையும் - எனக்குக் காண்பித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

132 ஜோதியுள் ஜோதியின் சொருபமே அந்தம்
ஆதி என்று அருளிய அருட்பெருஞ் ஜோதி

கடவுள் பிரகாசமும் அதன் முன் விளங்கும் அருட்பிரகாசமுமே முடி நிலையும் அடி நிலையும் ஆகும் என்று எனக்குத் தெரிவித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

133 இந்த சிற்சோதியின் இயல் உரு ஆதி
அந்தம் என்று அருளிய அருட்பெருஞ் ஜோதி

இந்தப் பேர் அறிவாகியப் பெரும் பிரகாசத்தின் இயல் உருவ (புடைய ஒளி) நிலையும், இயல் அருவ (சுடர் நிலையும் - சோபை) நிலையுமே அடியும் முடியுமாக அமைந்துள்ளது என்றும் தெரிவித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

134 ஆதியும் அந்தமும் அறிந்தனை நீயே
ஆதி என்று அருளிய அருட்பெருஞ் ஜோதி

அருட்பிரகாசமாகிய முன்னிலையும் சுத்த சிவப்பிரகாசமாகிய முடிந்தநிலையும் அறிந்து நிறைந்தவனாகிய நீயே முதல் இடம் (தகுதி) பெற்றவன் என்று தெரிவித்தருளிய எம் தனிப் பெருங் கருணையே!

135 நல் அமுது என் ஒரு நாஉளம் காட்டி என்
அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

அருள் அமுதமாகிய ஒன்றினை எனது புறத்துறுப்பாகிய நாக்கினிடத்தும் என் உள்ளமாகிய அகத்தினிடத்தும் காட்டி அனுபவிக்கும்படிச் செய்து என் பிறவி அல்லல்கள் யாவற்றையும் நீக்கியருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

136 கற்பகம் என் உளங் கை தனில் கொடுத்தே
அற்புதம் இயற்று எனும் அருட்பெருஞ் ஜோதி

உயிர்க்குலம் நினைத்தவை கேட்பவை ஆகிய யாவையும் கொடுத்தருளும் கொடையாற்றலை என் உள்ளத்திடத்தும் என் கரங்களிடத்தும் கொடுத்தருளி அதன் வழி அருள் அற்புதங்களைச் செய்தருள்வாயாக என்று உரைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

137 கதிர் நலம் என் இரு கண்களில் கொடுத்தே
அதிசயம் இயற்று எனும் அருட்பெருஞ் ஜோதி

தண் கதிர் (சந்திரன்) ஆற்றல், வெங்கதிர் (சூரியன்) ஆற்றல் ஆகிய நன்மைகளை உயிர்க்குலம் மேம்பட என்றே எனது இரண்டு புறக் கண்களிடத்தும் அமைத்தருளி நூதனப் புதுமைகளையும் செய்தருள்வாயாக என்று தெரிவித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

138 அருள் ஒளி என்தனி அறிவினில் விரித்தே
அருள்நெறி விளக்கு எனும் அருட்பெருஞ் ஜோதி

அருட்பிரகாசத்தினை என்தன்னுடைய பேரறிவினிடத்து அமைத்து விளக்கம் செய்து, அவ்வாறே திருவருள் மார்க்கத்தையும் உயிர்க் குலத்தினிடத்தே விளக்கிடுக என்று உணர்த்தியருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

139 பரை ஒளி என் மனப் பதியினில் விரித்தே
அரசது இயற்று எனும் அருட்பெருஞ் ஜோதி

பன்னிரு சூரியர் உதயம் போன்றதாகிய ஆதாரப் பிரணவ சத்தியின் ஒளியாற்றலை எனது மனத்தினிடத்தே அமைத்து விளக்கம் செய்ததுடன் அருளாட்சியினையும் நீயே செய்திடுக என்று அனுக்கிரகம் செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

140 வல்லப சத்திகள் வகை எலாம் அளித்து எனது
அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

அருள் ஆற்றலுடைய இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்தி, ஆதி சத்தி, பராசத்தி, சிற்சத்தி, சிவானந்த சத்தி, அருள் சத்தி



ஆகிய சத்தி வரிசைகள் எல்லாம் எனக்கு உதவி செய்யும் பெருமையைக் கொடுத்தருளி எனது பிறவிப் பெருந் துன்பங்கள் யாவற்றையும் போக்கியருளிய எம் தனிப் பெருங் கருணையே!

141 ஆர் இயல் அகம், புறம், அகப்புறம், புறப்புறம்
ஆரமுது எனக்கு அருள் அருட்பெருஞ் ஜோதி

நிறைநிலையாகிய சத்தி சத்தர்களுக்குரிய அக அமுதமும், ஐந்தொழில் கர்த்தர்களுக்குரிய அகப்புற அமுதமும், தேவர்களுக்குரிய புற அமுதமும், நிலவுலக உயிர்களுக்குரிய புறப்புற அமுதமும் நிறைந்து பயன்தர உன்னத அருள் அமுதத்தை எனக்கு ஈந்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

142 சூரிய சந்திர ஜோதியுட் ஜோதி என்று
ஆரியர் புகழ்தரும் அருட்பெருஞ் ஜோதி

சூரியப் பிரகாசம், சந்திரப் பிரகாசம் ஆகியப் பிரகாசங்களைப் பிரகாசிக்கச் செய்யும் திரு அருட்பிரகாசம் என்று வேத விற்பன்னர்களால் புகழ்ந்தேத்திடும் எம் தனிப் பெருங் கருணையே!

143 பிறிவு ஏது, இனி உனைப் பிடித்தனம், உனக்கு நம்
அறிவே வடிவு எனும் அருட்பெருஞ் ஜோதி

உனையே எமக்குரிய அன்பனாகக் கைப்பிடித்தோம்! இனிப் பிரிந்து பிறக்க வேண்டியது ஏதுமில்லை! ஆதலின் நமது சிவஞானமே நினது உருவமாகும் எனத் தெரிவித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

144 எஞ்சேல் உலகினில் யாதொன்று பற்றியும்
அஞ்சேல் என்று அருள் அருட்பெருஞ் ஜோதி

நீ அனுபவித்து அகற்ற வேண்டிய குறைகள் ஏதுமில்லை; இம்மை மறுமை உலகங்களின் அலைவுகள் ஏது ஒன்று பற்றியும் நீ அஞ்ச வேண்டியதுமில்லை என்று கருணை பாலித்த எம் தனிப் பெருங் கருணையே!

145 மாண்டு உழலா வகை வந்து, இளங்காலையே
ஆண்டுகொண்டு அருளிய அருட்பெருஞ் ஜோதி

இறந்துபோய்ப் பிறவிகளில் உழன்று துன்பப்படாத வகையில் எழுந்தருளி வந்து என் இளம் பிராயத்திலேயே மணமாலை சூட்டி ஆட்கொண்டருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

146 பற்றுகள் அனைத்தையும் பற்றுஅறத் தவிர்த்து, எனது
அற்றமும் நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

இம்மை இன்ப இச்சைகள், மறுமை இன்ப இச்சைகள் ஆகிய அனைத்தையும் சிறிதும் அப்பழுக்கில்லாதபடி நீக்கியதுடன் எனது சாக்காட்டையும் போக்கியருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

147 சமயம் குலம் முதல் சார்பு எலாம் விடுத்த
அமயம் தோன்றிய அருட்பெருஞ் ஜோதி

சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலிய சமயப் பற்றுகள்; உயர்ந்த குலம், தாழ்ந்த குலம் முதலிய குலப் பற்றுகள்; சித்தாந்தம், வேதாந்தம் முதலிய கொள்கைப் பற்றுகள் யாவும் அறவே கைவிட்ட தருணத்தில் வெளிப்பட்டு அருள்கின்ற எம் தனிப் பெருங் கருணையே!

148 வாய்தற்கு உரித்து எனும் மறை ஆகமங்களால்
ஆய்தற்கு அரிய அருட்பெருஞ் ஜோதி

மாட்சிமைக்கு உரியது என்று வேதங்களாலும் ஆகமங்களாலும் கூட ஆராய்ந்து கூறுவதற்கு இயலாத அருமையை உடைய எம் அருட்பெருஞ் ஜோதியே!

149 எல்லாம் வல்ல சித்து எனக்கு அளித்து, எனக்கு உனை
அல்லாது இலை எனும் அருட்பெருஞ் ஜோதி

எல்லாம் வல்ல கடவுள் சித்தியை எனக்குக் கொடுத்தருளி உன்னைவிட எனக்கு உரிமையுள்ள அன்பன் யாரும் இல்லை என்று சொந்தம் பாராட்டியருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



150 நவை இலா உளத்தில் நாடிய நாடிய
அவை எலாம் அளிக்கும் அருட்பெருஞ் ஜோதி

மாசு மரு இல்லா உள்ளத்தினால் விரும்பித் தேடிய நிலையில் அருள் ஆட்சியின் சிறப்புகள் யாவும் கொடுத்தருள்கின்ற எம் தனிப் பெருங் கருணையே!

151 கூற்று உதைத்து, என்பால் குற்றமும் குணமும் கொண்டு
ஆற்றல் மிக்கு அளித்த அருட்பெருஞ் ஜோதி

காலனை எற்றித்தள்ளி, என்னிடம் உள்ள குற்றங் குறைகளையும் நிறைகளாக ஏற்றுக் கொண்டு, மேலும் பேரருள் வல்லபத்தினையும் மிகவும் கொடுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

152 நன்று அறிவு அறியா நாயினேன் தனையும்
அன்று வந்து ஆண்ட அருட்பெருஞ் ஜோதி

கொல்லாமையை மேற்கொள்ளும் அறிவே நல்லறிவு என்று உணர்ந்தறியாத கீழ்மையனாகிய நாயினேன் தன்னையும் இளம் பருவத்திலேயே எழுந்தருளி வந்து ஆட்படுத்திய எம் தனிப் பெருங் கருணையே!

153 நாயினும் கடையேன் ஈயினும் இழிந்தேன்
ஆயினும் அருளிய அருட்பெருஞ் ஜோதி

தெரு நாயினும் கடையவன், மலத்து ஈயினும் இழிந்தவன் என்றாலும்கூட என்னிடத்தும் இரக்கம் கொண்டு அருள் புரிந்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

154 தோத்திரம் புகலேன் பாத்திரம் அல்லேன்
ஆத்திரம் அளித்த அருட்பெருஞ் ஜோதி

இறைவனைத் துதித்தலாகிய பாடல்களைச் சொல்லிப் பாடவும் அறியேன்; இறைவனுக்குத் தகுதி வாய்ந்த பாடல்கள் செய்யும் அடியவனாக வளர்ந்தும் அறியேன்; ஆயினும் வியந்து போற்றுதற்குரிய அருள் வல்லபத்தை எனக்கும் ஈந்தருளிய எம் தனிப் பெருங் கருணையே!

155 எச் சோதனைகளும் இயற்றாது எனக்கே
'அச்சோ' என்று அருள் அருட்பெருஞ் ஜோதி

எவ்வகைச் சோதனைகளையும் என்னிடம் செய்து பார்க்காமல் என்தனக்கே 'ஓகோ' என்று பெருங் கருணை புரிந்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

156 ஏறா நிலை நடு ஏற்றி என்றனை ஈண்டு
ஆறாறு கடத்திய அருட்பெருஞ் ஜோதி

எத்தகைய அடியவர்களாலும் எட்ட இயலாப் பெரும் நிலையின் நடுவில் ஏறச்செய்து, என்தன்னை இப்பிறப்பில் முப்பத்தாறு தத்துவங்கட்கு அப்பாற்பட்ட அருட்கலை நிலையில் வாழும் படிச் செலுத்தியுமருளிய எம் தனிப் பெருங் கருணையே!

157 தாபத் துயரம் தவிர்த்து, உலகு உறும் எலா
ஆபத்தும் நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

துக்கம் அடைதல், துன்பம் அனுபவித்தல் ஆகியவற்றை அறவே என்னிடம் நீக்கி, உலகத்தினிடையில் பசி, பிணி, மரணம், ஜனனம் முதலியவற்றால் பெறும் எல்லாவகை ஆபத்துகளையும் அறவே விலக்கியருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

158 மருட்பகை தவிர்த்து எனை வாழ்வித்து எனக்கே
அருட்குரு ஆகிய அருட்பெருஞ் ஜோதி

உயிருக்கு மயக்கத்தைத் தருகின்ற எண் வகைத் தருக்குகள், வினைகள், மலங்கள், மாயைகள் ஆகிய எதிரி நிலைகளை நீக்கியதுடன் என்னை அழியாத பேரின்பச் சித்திப் பெரு வாழ்வில் வாழ்வித்து என்தனக்கே ஞான தேசிகனாய் அமைந் தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

159 உருவமும் அருவமும் உபயமும் ஆகிய
அருள்நிலை தெரித்த அருட்பெருஞ் ஜோதி

நான்முகன், திருமால், உருத்திரன், மகேச்சுரன் என்னும் நான்கு வகை தெய்வ உருவங்களாகியும்; விந்து, நாதம், பரவிந்து, பரநாதம் என்னும் நான்கு வகை தெய்வ அருவங்களையும் சதாசிவன் என்னும் ஒரு வகை அருஉருவமாகியும் திகழ்கின்ற அருள் விளக்க நிலை பேறுகளை எனக்குத் தெரிவித்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



160 இருள் அறுத்து என் உளத்து எண்ணியாங்கு அருளி
அருள் அமுது அளித்த அருட்பெருஞ் ஜோதி

மாயை என்னும் இருள் நிலைகளை என் உயிரிலிருந்து நீக்கி அருள் ஒளியூட்டி, என் உள்ளம் எண்ணியபடி எல்லாம் யான் அடையும்படிக் கருணை புரிந்ததுடன் அருளாகிய அமுதத்தினையும் அருந்தும்படிக் கொடுத்தருளிய அருட்பெருஞ் ஜோதியே!

161 தெருள்நிலை இது எனத்தெருட்டி, என் உளத்து இருந்து
அருள் நிலை காட்டிய அருட்பெருஞ் ஜோதி

தீவிரப் பக்குவநிலை இறைவனுக்குத் தலைவியாகத் திகழும் நிலையே என என்னைப் பக்குவப்படுத்தியதுடன், என் உள்ளகத்தில் அமர்ந்தருளிப் பேரருள் பேற்றினை அடையும் வழிமுறையையும் காட்டியருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

162 பொருட்பதம் எல்லாம் புரிந்து மேல்ஓங்கிய
அருட்பதம் அளித்த அருட்பெருஞ் ஜோதி

தேவர் பத நிலைகள், மூவர் பதநிலைகள், ஐவர் பதநிலைகள், நவ நிலைக் கடவுளர் பதநிலைகள் ஆகிய மறுமைப் பதநிலைகள் எல்லாம் அறிந்து அடைந்திடச் செய்ததும் அல்லாமல், அவற்றிற்கு முடிவில் விளங்கக்கூடிய திருவருட் பேறாகிய அருட்பத நிலையையும் எனக்குக் கொடுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

163 உருள் சகடாகிய உளம் சலியா வகை
அருள் வழி நிறுத்திய அருட்பெருஞ் ஜோதி

சுழல்கின்ற சக்கரமாகிய என் உள்ளத்தைச் சலிப்புறாத வழிமுறையாகிய பெருங்கருணை மார்க்கத்தில் நிலைநிறுத்தி அருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

164 வெருள் மன மாயை வினை இருள் நீக்கி, உள்
அருள் விளக்கு ஏற்றிய அருட்பெருஞ் ஜோதி

அச்சப்படுத்துகின்ற மனமாகிய மாயை இருளையும், அதன் பயனாகிய வினை இருளையும் போக்கி, என் உள்ளகத்தே நிலை பெற்று ஒளிரும்படியாக அருள் தீபத்தையும் ஏற்றி வைத்தருளிய எம் தனிப் பெருங் கருணையே!

165 சுருள் விரிவு உடை மனச் சுழல் எலாம் அறுத்தே
அருள் ஒளி நிரப்பிய அருட்பெருஞ் ஜோதி

சுழன்று திரிந்து விரிவடையும் என் மனத்தின் அலைவுகள் யாவையும் அடியோடு நீக்கி, என் உள்ளத்தின் இடத்து கருணை தீபத்தை என்றும் நிலைபெற ஏற்றிவைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

166 விருப்போடு இகல் உறு வெறுப்பும் தவிர்த்தே
அருட்பேறு அளித்த அருட்பெருஞ் ஜோதி

இராகம், துவேஷம் என்னும் ஒன்றை விரும்பும் நிலையையும் ஒன்றை வெறுக்கும் நிலையையும் என்னிடம் அறவே நீக்கியருளியதுடன் பெருங்கருணையாம் பாக்கியத்தையும் எனக்கு ஈந்தருளிய எம் தனிப் பெருங் கருணையே!

167 அருட்பேர் தரித்து உலகு அனைத்தும் மலர்ந்திட
அருட்சீர் அளித்த அருட்பெருஞ் ஜோதி

திருவருட் பிரகாச வள்ளல் என்னும் தெய்வ (அருட்)ப் பெயரினைத் தாங்கி மூவகை உலகங்களும் உயிர்களும் மலர்ச்சி அடைந்து இன்பம் பெற என்றே அருட்பெரும் செல்வத்தை எனக்குத் தந்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

168 உலகு எலாம் பரவ என் உள்ளத்து இருந்தே
அலகுஇலா ஒளி செய் அருட்பெருஞ் ஜோதி

ஏழுலகங்களும் வாழ்த்தி வணங்க, என் உள்ளம் என்னும் பீடத்தில் அமர்ந்தருளியதுடன், அளவிட்டுச் சொல்ல முடியாத அருட் பிரகாசத்தையும் கொடுத்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!



### *ஐம்பூதமாய் விளங்கும் வகை*

169 விண்ணினுள் விண்ணாய், விண் நடு விண்ணாய்
அண்ணி நிறைந்த அருட்பெருஞ் ஜோதி

சுத்தம் (காரணம்) சுத்தாசுத்தம் (காரண காரியம்) அசுத்தம் (காரியம்) என பஞ்ச பூதங்கள் மூன்று வகைப்படும். அவ்வரிசைப்படி சுத்த பூத வானில் சுத்தாசுத்த பூதவானையும், சுத்தாசுத்த பூத வானில் அசுத்த பூத வானையும் நிறையும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

170 விண் உறு விண்ணாய், விண்நிலை விண்ணாய்
அண்ணி வயங்கும் அருட்பெருஞ் ஜோதி

அசுத்த பூத வானில் பொருந்தும் சுத்தாசுத்த பூத வானமும் சுத்தாசுத்த பூத வானில் நிலைபெறும் சுத்த பூத வானமும் சேர்ந்து விளங்கும்படி அருள் செய்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

171 காற்றினுள் காற்றாய்க் காற்றிடைக் காற்றாய்
ஆற்றலின் ஓங்கும் அருட்பெருஞ் ஜோதி

சுத்த பூத வளியில் சுத்தாசுத்த பூத வளியும், அந்தச் சுத்தாசுத்த பூத வளியில் அசுத்த பூத வளியும் வலிவுற்றுத் திகழும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

172 காற்றுறு காற்றாய்க் கால்நிலைக் காற்றாய்
ஆற்ற விளங்கும் அருட்பெருஞ் ஜோதி

அசுத்த பூத வளியில் பொருந்தும் சுத்தாசுத்த பூத வளியும், அந்தச் சுத்தாசுத்த பூத வளியிடையில் சுத்த பூதவளியும் மிகவும் விளங்கும் படியும் செய்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

173 அனலினுள் அனலாய் அனல் நடு அனலாய்
அனலுற விளங்கும் அருட்பெருஞ் ஜோதி

சுத்த பூத நெருப்பினுள் சுத்தாசுத்த பூத நெருப்பும், அந்தச் சுத்தாசுத்த பூத நெருப்பினிடையில் அசுத்த பூத நெருப்பும் உணர்வுடன் திகழும்படி அமைந்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

174 அனலுறும் அனலாய் அனல்நிலை அனலாய்
அனலுற வயங்கும் அருட்பெருஞ் ஜோதி

அசுத்த பூத நெருப்பினுள் பொருந்தும் சுத்தாசுத்த பூத நெருப்பும் அந்தச் சுத்தாசுத்த பூத நெருப்பினுள் நிலைபெறும் சுத்த பூத நெருப்பும் திகழும்படி விளங்கும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

175 புனலினுள் புனலாய்ப் புனலிடைப் புனலாய்
அனை என வயங்கும் அருட்பெருஞ் ஜோதி

சுத்த பூத நீரினில் சுத்தாசுத்த பூத நீரும் அந்தச் சுத்தாசுத்த பூத நீரினில் அசுத்த பூத நீரும் தாயின் தயவுபோல் விளங்கும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

176 புனல் உறு புனலாய்ப் புனல்நிலைப் புனலாய்
அனை எனப் பெருகும் அருட்பெருஞ் ஜோதி

அசுத்த பூத நீரின் இடையில் பொருந்தும் சுத்தாசுத்த பூத நீரும், அந்தச் சுத்தாசுத்த பூத நீரினில் நிலைபெறும் சுத்தபூத நீரும் அன்னையின் கருணைபோல் பெருகிடும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

177 புவியினுள் புவியாய்ப் புவிநடுப் புவியாய்
அவை தர வயங்கும் அருட்பெருஞ் ஜோதி

சுத்தபூத மண்ணினில் சுத்தாசுத்த பூத மண்ணும் அந்தச் சுத்தாசுத்த பூத மண்ணினிடையில் அசுத்த பூத மண்ணும் (அவை) பொருந்த ஓங்கும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

178 புவிஉறு புவிஆய்ப் புவிநிலைப் புவிஆய்
அவை கொள விரிந்த அருட்பெருஞ் ஜோதி

அசுத்தபூத மண்ணினுள்ளே பொருந்தும் சுத்தாசுத்த பூத மண்ணும் அந்தச் சுத்தாசுத்த பூத மண்ணினிடையில் நிலை பெறும் சுத்த பூத மண்ணும் பொருந்தும்படி விளங்கும் எம் அருட்பெருஞ் ஜோதியே!



179 விண்நிலை சிவத்தின் வியன்நிலை அளவி
அண்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

முழு முதலாகிய சிவ பரம்பொருள் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது போல் வானத்தின் நிலையும் அவ்வாறு எங்கும் நீக்கமறப் பொருந்துமாறு அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

180 வளிநிலை சத்தியின் வளர்நிலை அளவி
அளிஉற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பரம் பொருளினது பிரிவுபடாத அம்மையாகிய சிவசத்தியின் கருணை உள்ளம்போல் காற்றினது நிலையும் வானத்தினின்று பிரிவு படாது ஒன்று கலந்து வளரும்படிக் கருணை கூர்ந்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

181 நெருப்பது நிலைநடு நிலைஎலாம் அளவி
அருப்பிட வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தீயாகிய அனலின் நிலையைச் சிவமும் சத்தியும் ஒன்றுபட்டு ஓங்கும் தன்மைபோல் எங்கும் கலந்து அரும்பிடும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

182 நீர்நிலை திரைவளர் நிலைதனை அளவி
ஆர் உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நீராகிய புனலின் நிலையை மாயையின் நிலை அமைத்துள்ளது போல் அலைகள் எழும்படிக் கலந்து நிறைவுற வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

183 புவிநிலை சுத்தமாம் பொற்பதி அளவி
அவை உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணாகிய நிலத்தினது நிலையைப் பரம் பொருளை நாடும் தூய அடியவர் உள்ளம்போல் பயனுடன் கலந்து ஒளிரும் இடம் எனப் பொருந்த வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

### *மண் பூதம் விளங்கும் வகை*

184 மண்ணினில் திண்மையை வகுத்து அதில் கிடக்கை
அண்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியில் கடினத் தன்மையை உண்டாக்கி, அப்பூமியில் உயிர்க் குலம் நின்று இருந்து கிடந்து ஆறுதலைப் பெறத் தேவையான வற்றைப் பொருந்தும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

185 மண்ணினில் பொன்மை வகுத்து அதில் ஐமையை
அண்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியில் சுத்த உஷ்ணப் பகுதியாய் பொன்னிறம் உண்டாக்கி அந்நிறம் பொன்மையில் வெண்மை, பொன்மையில் செம்மை, பொன்மையில் பசுமை, பொன்மையில் கருமை, பொன்மையில் பொன்மை என்று ஐந்து வகையாய்ப் பொருந்துமாறு வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

186 மண்ணினில் ஐம்பூ வகுத்து அதில் ஐந்திரம்
அண்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியில் நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் ஐம்பூத அணுக் கூறுகளும் கலந்து கொள்ளும்படி வகுத்தருளியதுடன் அப் பூமியின் மூலம் ஐந்து வகையான பொறி புலன் ஆற்றல்களை யும் பொருந்தும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

187 மண்ணினில் நாற்றம் வகுத்து அது பல்வகை
அண்உறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

பூமியில் ஐம்பொறி அறிவுக் கூறுகளுடன் ஒன்றாகிய வாசனை என்னும் நாற்ற அறிவினை (கூறு) உண்டாக்கி அதுவும் பலப்பல வகையாகி மலரும்படிச் செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

188 மண்ணினில் பற்பல வகை கரு நிலை இயல்
அண்உறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

பூமியில் ஓரறிவு முதலாக ஆறறிவு வகையாகிய உயிர் தோன்றும் கருக் கூறுகளின் தன்மை நிலைகளை இயல்புறப் பொருந்தும்படிச் செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



189 மண்ணினில் ஐந்து இயல் வகுத்து அதில் பல்பயன்
அண்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியில் ஐந்து வகையான நாறுதல், கிடத்தல், வலித்தல், பெருக்குதல், நெருக்குதல் என்னும் தன்மைகளை வகுத்த ருளியதுடன் அதன் மூலம் பல்வகையான பயன்களையும் பொருந்தும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

190 மண்ணிடை அடிநிலை வகுத்து அதில் பல்நிலை
அண்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியில் நிலத்திற்கான கனிம, உலோக முதலாய அடிநிலை அமைப்புகளையும் வகைப்படுத்தி அந்த அடி நிலைகள் பலப்பலவாகப் பொருந்தும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

191 மண்ணில் ஐந்தைந்து வகையும் கலந்துகொண்டு
அண்உறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

பூமியில் ஐம்பூத அமைப்புகள் ஐம்பூதத் தன்மைகள் ஆகியவை இருபத்தைந்து நிலையாகிடச் செய்து அதன் மூலம் பல்வகைப் பயன்களையும் பொருந்தும்படிச் செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

192 மண்இயல் சத்திகள் மண்செயல் சத்திகள்
அண்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியின் தன்மையை வெளிப்படுத்தும் சத்திகள், பூமியின் தன்மையைச் செயல்படுத்தும் சத்திகள் ஆகிய சத்திக் கூட்டங்கள் பொருந்தும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

193 மண் உருச் சத்திகள் மண்கலைச் சத்திகள்
அண் உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியின் அமைப்பினை உருவாக்கும் சத்திகள் பூமியில் அமைப்பினை விளக்கம் செய்யும் சத்திகள் ஆகிய சத்திக் கூட்டங்களைப் பொருந்தும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

194 மண் ஒளிச் சத்திகள் மண் கருச் சத்திகள்
அண் உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியை ஒளிர்விக்கும் சத்திகளையும், பூமியில் உயிர்க்கருக் கூறுகளை உண்டாகும்படிச் செய்யும் சத்திகளையும் பொருந்தும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

195 மண் கணச் சத்திகள் வகை பல பலவும்
அண்கொள அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியில் தொகுதி தொகுதியாகத்தோன்றும் பல்வகை உயிர்க் கூறுகளுக்கான சத்திகள் நிலைபெறும்படிச் செய்து அவை பலவும் சீருறப் பொருந்தி இயங்கும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

196 மண் நிலைச் சத்தர்கள் வகை பல பலவும்
அண்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியையும் உயிர்க் கூறுகளையும் நிலைபெறச் செய்திடும் சத்திமார்களுக்கு உபகரிக்கும் சத்தர்களின் வகையமைப்பு களையும் பலப்பலவாகப் பொருத்தமுற செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

197 மண் கரு உயிர்த்தொகை வகை விரி பலவா
அண்கொள அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியில் தோன்றும் உயிர்த் தொகுதிகளின் கருக்கூறுகளின் தொகுப்பும், வகுப்பும், விரிப்பும் பலப்பலவாகப் பொருந்தும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

198 மண்ணினில் பொருள் பலவகை விரி வெவ்வேறு
அண்உறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

பூமியில் உண்டாகும் பல்வேறு உலோகம், கனிமம், மணிகள், திரவம் முதலிய பல்பொருள் வகைகளின் வகையிருப்பும் விரிவுகளும் உண்டாக்கி அவை பயன்தரும்படிச் செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



199 மண் உறு நிலைபல வகுத்து அதில் செயல் பல
அண்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியில் அடி நடு முடி நிலைகள் மென்மை, மிருது, கடினம் முதலிய பல்வேறு நிலைகளை வகுத்தருளி அதன் மூலம் பல்வேறு வகையான செயல்பாடுகளையும் பொருத்தமுற அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

200 மண்ணிடைப் பக்குவம் வகுத்து அதில் பயன்பல
அண்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியில் வாதம் பித்தம் சிலேட்டுமம் கூடிய மண்ணின் தகுதிப்பாடுகளை வகுத்தருளியதுடன் அதன் மூலம் பல்வேறு வகையான பயன்களையும் பொருந்தும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

201 மண்இயல் பல பல வகுத்து அதில் பிறவும்
அண்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பூமியின் இயல்பாகிய விளைவுத் தன்மைகள், உபயோகத் தன்மைகள் ஆகியவற்றைப் பலப்பலவாக வகைப்படுத்தி அவ்விளைவு முதலியவைகளால் பல்வேறு பயன்பாடுகளை யும் பொருந்தும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

***நீர் பூதம் விளங்கும் வகை***

202 நீரினில் தண்மையும் நிகழ் ஊர் ஒழுக்கமும்
ஆர்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புனலினில் குளிர்ச்சியை உண்டாக்கி அத்துடன் நெகிழ்வுற்று ஊர்ந்து ஓடுகின்ற பண்பியலையும் நிறைவுடன் பொருந்த வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

203 நீரினில் பசுமையை நிறுத்தி அதில் பல
ஆர்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புனலினில் பசுமை நிறத்தை உண்டாக்கி நீர் வாழ் உயிர்கள், தாவரம், பவழம், முத்து, உப்பு முதலியவைகளை (அப்பசுமை நிறமும் பலப்பல வகையாகி) நிறைவுடன் பொருந்துமாறு வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

204 நீரிடைப் பூ இயல் நிகழ் உறு திறஇயல்
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புனலினில் நான்காம் பூதமாகி விளங்கும் தன்மையும் அதுநெகிழ்ந்து ஊர்ந்து ஓடி இயங்கும் வலிமைத் தன்மையும் நிறைவுடன் வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

205 நீரினில் சுவை நிலை நிரைத்து அதில் பல்வகை
ஆர்உறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

புனலினில் ஆறுவகையான சுவை நிலைகள் உருவாகும் தகைமையை வரிசைப்பட நிலை நிறுத்தி அந்தச் சுவைகளும் பல்வேறு வகையாகிப் பயன்தரும்படி நிறைவுடன் வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

206 நீரினில் கருநிலை நிகழ்த்திய பற்பல
ஆர்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புனலின் இடையில் உண்டாகும் நீர்வாழும் உயிர்களும் அவை தோன்றி விளங்குவதற்கான கருக்கூறுகளும் நிலவும்படிச் செய்து அக் கருக்கூறுகளும் பலப்பலவாகி நிறைவுடன் விளங்க என்றே வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

207 நீரிடை நான்கு இயல் நிலவுவித்து அதில் பல
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புனலினில் சுவை, ஒளி, ஊறு, நாற்றம் என்னும் நான்கு பூத இயல்களும், நெகிழ்தல், குளிர்தல், ஊருதல், ஓடுதல் என்னும் இயல்புகளும் விளங்கும்படிச் செய்வித்து அதன் மூலம் பல்வகைப் பயன்பாடுகளை நிறைவோடு வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

208 நீரிடை அடிநடு நிலைஉற வகுத்து அனல்
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

ஐம்பூத நிலைகளின் அடிநிலையாகிய நிலத்தினைச் சார்ந்தும் அதற்கு மேல் உள்ள அடி நடுநிலை நீரினைச் சார்ந்து விளங்கும்படியும் வகுத்து அத்துடன் வெப்பமும், நிறைவுடன் பொருந்த அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



209 நீரிடை ஒளியியல் நிகழ்பல குண இயல்
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நீரின் இடையில் ஒளி விளங்கும் தன்மைகள் நிகழும்படிப் பலவகை சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் முதலிய பண்பின் இயல்புகளையும் நிறைந்திடுமாறு வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

210 நீரிடைச் சத்திகள் நிகழ்வகை பலபல
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புனலின் இடையில் தோற்றம் முதல் பயன்பாடுகள் வரை சிறந்து விளங்கும்படிச் செய்யும் பலப்பலவாகிய சத்திகள் வரிசையை நிறையுமாறு வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

211 நீரினில் சத்தர்கள் நிறைவகை உறைவகை
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

புனலின் இடையில் செயல்படும் சத்திகளை இயக்கும் சத்தர்களின் தொகுதி வகைகளையும் அவர்கள் வாழும் நடைமுறை வகைகளையும் அப்புனலின் இடையில் நிறைவுடன் திகழும்படிச் செய்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

212 நீரிடை உயிர் பல நிகழுறு பொருள்பல
ஆர்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

புனலின் இடையில் நீர்வாழும் பல்வகை உயிர்களும், தாவர உயிர்களும் தோன்றி வாழும்படிச் செய்தும் அவ்வாறே கிளிஞ்சல், முத்து, பவழம் முதலிய பல்வகை பொருள்களும் உருவாகும்படிச் செய்தும் அவை நிறைவுடன் பொருந்த அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

213 நீரிடை நிலைபல நிலையுறு செயல்பல
ஆர்கொள வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புனலின் இடையில் பல்வேறு கடினம், மென்மை, கலங்கல், தெளிதல் முதலிய நீரியல் நிலைகளையும் அதன்வழி பல்வேறு செயல்பாடுகளையும் நிறைந்திடும்படி வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

214 நீர் உறு பக்குவ நிறை உறு பயன்பல
ஆர்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

புனலின் இடையில் தகுதி வாய்ந்த பிராண சக்தியான அமுதம், பூதம், விஷம் முதலிய பக்குவத் தன்மைகளை நிறையும்படிச் செய்ததும் அன்றி அதனால் பல்வகைப் பயன்களையும் நிறைவுறும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

215 நீர் இயல் பலபல நிறைத்து அதில் பிறவும்
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

புனலின் இயல்புகளில் உப்பு, துவர்ப்பு, இனிப்பு முதலிய அசுத்தம், சுத்தாசுத்தம், சுத்தம் என மூவகை இயல்புகள் நிறையும்படிச் செய்தும் அவை மூலம் தாவர, பிற வகையான உயிர்கள் வளர்வதற்கான பயன்களையும் நிறையும்படிச் செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

### *நெருப்பு பூதம் விளங்கும் வகை*

216 தீயினில் சூட்டு இயல் சேர்தரச் செலவு இயல்
ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையில் வெப்பத்தன்மை சேரும்படிச் செய்தும் அந் நெருப்பு மேல் எழுந்து ஓடும் இயல்பினையும் அறிவுற வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

217 தீயினில் வெண்மைத் திகழ்இயல் பலவா
ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையில் வெண்மை நிறம் விளங்கும் இயல்பினை வகுத்ததுடன் அவ் வெண்மை நிறமும் பலவாகிப் பொருந்தும்படி வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

218 தீயிடைப் பூ எலாம் திகழுறு திறம் எலாம்
ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையில் வான், வளி, தீ என்னும் மூன்று வகைப் பூத இயல்புகளும் விளங்கும்படி வகுத்ததுடன் அதன் மூலம் பல்வகை ஆற்றல்களையும் பொருந்தும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



219 தீயிடை ஒளியே திகழுற அமைத்து அதில்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையில் வெளிச்சம் விளங்கும்படி அமைத்ததுடன் அவ்வெளிச்சமும் பல்வேறு வகையாகி நெருப்பினுள் ஒளிரும்படி வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

220 தீயிடை அருநிலை திருநிலை கருநிலை
ஆயுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையில் அருவ இயல்பினையும் பிரகாச இயல்பினையும் உயிர்க்கரு ஆற்றல் உருவாகும் இயல்பினையும் அறிவுற விளங்கும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

221 தீயிடை மூஇயல் செறிவித்து அதில் பல
ஆய்வகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையில் வானின் வியாபக இயல்பும், வளியின் உலவும் இயல்பும், தீயின் வெப்ப இயல்பும் கலந்து கொள்ளும்படி நிறைவித்து அந்நெருப்பின் மூலம் பல்வகைப் பயன்கள் உண்டாகும்படி ஆய்வுடன் வகைப்படுத்தி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

222 தீயிடை நடுநிலை திகழ்நடு நடுநிலை
ஆயுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையில் சுத்த பூத நடுநிலை இயல்பு விளங்கும்படிச் செய்தும் அச் சுத்தபூத நடுநிலையில் சுத்தாசுத்த பூத நடுநிலை இயல்பு விளங்கும்படிச் செய்தும் அச் சுத்தாசுத்த பூத நடுநிலையில் அசுத்தபூத நடுநிலை இயல்பு விளங்கும்படிச் செய்தும் ஆராய்வுடன் பொருந்தும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

223 தீயிடைப் பெருந்திறல் சித்திகள் பலபல
ஆயுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையில் பெரிய நிலையதாகிய கர்ம சித்திகள், யோக சித்திகள், ஞான சித்திகள் எனப் பலப்பலவாகிய சித்தி வகைகளின் ஆற்றல்கள் பொருந்தும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

224 தீயிடைச் சித்துகள் செப்புறும் அனைத்தும்
ஆயுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையில் புகழ்ந்து பேசும் சித்துகள் யாவும் பொருந்தி விளங்கும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

225 தீயிடைச் சத்திகள் செறிதரு சத்தர்கள்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையில் அது இயங்கும்படிச் செய்யும் சத்திகள் கூட்டத்தையும், அச் சத்திகளை இயக்க நிறைந்து விளங்கும் சத்தர்கள் கூட்டத்தையும் பலப்பலவாகப் பொருந்தும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

226 தீயிடை உயிர்பல திகழுறு பொருள் பல
ஆய்வகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையிலும்கூட வாழ்கின்ற பலவகை உயிர்களையும் உருவாக்கி அவை விளங்கும்படிச் செய்தும் அவற்றின் மூலம் பல்வகைப் பொருட் சிறப்புகளும் உருவாகும்படித் தேர்ச்சியுடன் அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

227 தீயிடை நிலைபல திகழ்செயல் பல பயன்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையில் உருவாகும் பதம் செய்தல், எரியச் செய்தல், வேகச் செய்தல், உருகச் செய்தல் முதலிய பல்வகைப் பயன்பாட்டு நிலைகளை விளங்கும்படிச் செய்தும் அதன்மூலம் பல்வகையான பயன்களைப் பொருந்துமாறும் அமைத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

228 தீயினில் பக்குவம் சேர்குணம் இயல்குணம்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையில் சுட்டுப் பக்குவப்படுத்தும் பக்குவத் தன்மைகள் பல சேர்ந்திடும் குணச் சிறப்புகளையும் அதன் மூலம் பயன்படும் பல்வகைச் சீர்மை இயல்புகளையும் தேர்ச்சி பெற அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



229 தீயிடை உருக்குஇயல் சிறப்பு இயல் பொதுஇயல்
ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இடையில் பொருள்களை உருக்கும் இயல் பாற்றலையும், அது சிறப்பு இயல்புகளுடன் திகழும் தன்மையையும், பொது இயல்புகளுடன் திகழும் தன்மையையும், தேர்ந்து பொருந்துமாறு அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

230 தீ இயல் பலபல செறித்து அதில் பலவும்
ஆயுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பின் இயல்போ,வெண்ணெருப்பு, தண்ணெருப்பு, செந்நெருப்பு எனப் பலவேறு பலவேறு வகைகளாகவும், அவ்வகை இயல்புகளை நெருப்பின் இடையில் நிறைவித்ததும் அல்லாமல் அதன் மூலம் பல்வகைப் பயன்களையும் ஆய்வுடன் அமையும்படிச் செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

***காற்று பூதம் விளங்கும் வகை***

231 காற்றிடை அசைஇயல் கலைஇயல் உயிர்இயல்
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இடை அசைகின்ற இயல்பினையும், அதன் பரிபாக நிலையாகிப் பிரகாசிக்கும் (பிராணனது) கலைக்கூறுகளையும் அதன்பால் ஓங்கும் உயிரின் இயல்பினையும் திறம்பட வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

232 காற்றிடைப் பூஇயல் கருதுறு திறஇயல்
ஆற்றலின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இடையில் வானம் காற்று என்னும் இரண்டு பூதங்களும் கலந்திடும் இயல்பினையும், ஆழ்ந்து கருதும்படியான வலுவாற்றலையும் வளமுற வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

233 காற்றினில் ஊறுஇயல் காட்டுறு பலபல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இடையில் மென்மை, தகைமை, வன்மை முதலிய பரிச இயல்புகள் தோன்றிப் பலப்பலவாக விளங்கும்படித் திறம்பெற வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

234 காற்றினில் பெருநிலை கருநிலை அளவு இல
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இடையில் வானுடன் நிற்கும் பெருமைக்குரிய இயல்பும் உயிர்க்கருக் கூறுகள் உருவாகும் இயல்பும் கணக்கில்லாத வகையில் திறம்பட வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

235 காற்றிடை ஈர்இயல் காட்டி அதில் பல
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இடையில் அசைகின்ற இயல்புடன் அதனது ஊக்கமுறு இயல்பும் ஆகிய இரண்டு இயல்புகள் வெளிப்படச் செய்து அவ்விரண்டினால் அமுதக் காற்று முதலாகப் பல்வகைப் பயன்பாடுகள் வலுவுடன் செயலாற்றவும் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

236 காற்றினில் இடை நடு கடை நடு அகம் புறம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வளியினில் நெருப்பு என்னும் இடை பூதத்திற்கு மேல் விளங்கும் நடு நிலையையும் வானம் என்னும் முதல் பூதத்திற்குக் கீழ் விளங்கும் நடு நிலையையும் புறமாகிய அண்டத்தினிடத்தும் அகமாகிய பிண்டத்தினிடத்தும் வலிமையுடன் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

237 காற்றினில் குணம்பல கணம்பல வணம்பல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வளியினில் மென்மை வன்மை முதலிய பல்வகைக் குணத் தன்மைகளையும், உயிர்வளி கரிவளி முதலிய தொகுதித் தன்மைகளும், செம்மை பசுமை வெண்மை முதலிய நிறத் தன்மைகளும் உறுதி பெற்று ஓங்கும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

238 காற்றிடைச் சத்திகள் கணக்குஇல உலப்புஇல
ஆற்றவும் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இடையில் அதனை (மண்ணியலில் விரித்தபடி) ஏழு வகையாகவும் பிறவாகவும் ஆற்றல்படுத்தும் கணக்கற்ற அழிவற்ற சக்திமார்களின் தொகுப்பினை வளமையுடன் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



239 காற்றிடைச் சத்தர்கள் கணிதம் கடந்தன
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இடையில் அளவுகடந்த சத்திமார்களின் தொகுப்பினைச் செயலாக்கிடும் சத்தர்களைக் கணக்கும் கடந்திட்ட நிலையில் ஆற்றல்படுத்த வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

240 காற்றிடை உயிர்பல கதிபல கலைபல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இடையில் பல்வகை உயிர்த் தொகுதிகளையும் அவை சுகம் பெறும் பல்வகை நடை (கதி) இயல்புகளையும் அவை இயக்கம் பெறும் சந்திர, சூரிய, அக்கினி, பிராணன் என்பனவாகும் பல்வகைக் கலைக் கூறுகளையும் வளமுடன் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

241 காற்றிடை நால்நிலைக் கருவிகள் அனைத்தையும்
ஆற்றுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இடையில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு வகையில் உருவாகும் சூக்குமக் கருவிகள் யாவற்றையும் வளமையுடன் வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

242 காற்றிடை உணர்இயல் கருதுஇயல் ஆதிய
ஆற்றுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இடையில் பொறி - கரண - ஜீவ உணர்வுகள் முதலியவற்றையும் தகுதிக்கேற்பக் கருதும் கருத்து இயல்புகள் முதலியவற்றையும் வளமுடன் செயல்பட வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

243 காற்றிடைச் செயல் எலாம் கருதிய பயன் எலாம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இடையில் உட்கருவிகள் செயல்படும் ஆற்றல்கள் யாவற்றையும் அதனால் கருதும் பயன் உண்டாகும் நிலைகள் யாவற்றையும் வளமுடன் வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

244 காற்றினில் பக்குவக் கதிஎலாம் விளைவித்து
ஆற்றலின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இடையில் பரிபாகம் அடைந்த அமுதக் காற்றின் பயன் நிலைகள் யாவும் உருவாக்கி 'மெல்லிய பூங்காற்றே, மென் காற்றின் விளை சுகமே, சுகத்தில் உறும் பயனே' என்றபடி வளமையுடன் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

245 காற்றினில் காலம் கருதுறு வகை எலாம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இடையில் விநாடி, நொடி, நிமிடம், மணி, நாள் முதலிய காலக் கணக்குகளைக் கருதிடப் பொருந்தும் வகைகள் யாவும் வளமுடன் வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

246 காற்று இயல் பலபல கணித்து அதில் பிறவும்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வளியின் இயல்புகள் மேலும் பலப்பலவாக விளங்கும்படிக் கணக்கீடு செய்து அவ்வளியின் இடையில் நெருப்பும், நீரும், நிலமும் உருவாகும் ஆற்றல்களையும் வகைப்படுத்தி அருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

***வான்பூதம் (ஆகாயம்) விளங்கும் வகை***

247 வெளியிடைப் பகுதியின் விரிவுஇயல் அணைவு இயல்
அளிஉற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வான் வெளி இடையில் பிரகிருதி மாயையாய் விரிவுபெறும் இயல்பினையும் அவ்விசித்திர மாயை உயிர்த் தொகுதியை அணைந்திடும் இயல்பினையும் கருணைகூர்ந்து அமைத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

248 வெளியிடைப் பூஎலாம் வியப்புறு திறன் எலாம்
அளிஉற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வான்வெளி இடையில் பூதங்கள் யாவும், வியப்புறப் பொருந்தி வெளிப்படும் ஆற்றல்கள் யாவையும் தயையுடன் அமைத்தருளிய எம் தனிப் பெருங் கருணையே!



249 வெளியினில் ஒலிநிறை வியன்நிலை அனைத்தும்
அளிஉற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வான் வெளியகத்து அகம்புறமாகி நிறைந்து ஓங்கும் நாதம், அபர நாதம், பர நாதம் முதலிய ஓசையாம் வெளித் தொகுதிகளின் பரந்த இயல்புகள் யாவையும் கருணைகூர்ந்து அமைத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

250 வெளியிடைக் கருநிலை விரிநிலை அருநிலை
அளிகொள வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வானின் இடையில் உயிர்களது கருக்கூறுகள் உருவாகி ஓங்கும் நிலைகளையும், அவை அருவமாகி விளங்கும் அனுபவ நிலைகளையும் தயை கூர்ந்து அமைத்தருளிய எம் தனிப் பெருங் கருணையே!

251 வெளியிடை முடிநிலை விளங்குற வகுத்தே
அளிபெற விளக்கும் அருட்பெருஞ் ஜோதி

வான்வெளி இடையில் முடிவு எல்லை நிலைகளையும் மிக விளங்கும்படி வகுத்தளித்து அவற்றைத் தயவு கூர்ந்து விளங்கும்படி அமைத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

252 வெளியினில் சத்திகள் வியப்புஉற, சத்தர்கள்
அளிஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வான் வெளியகத்தே ஒளிரும் சத்திமார் தொகுதிகளையும் அச்சத்திகளை இயக்கும் வியப்புக்குரிய சத்தர்களின் தொகுதிகளையும் இரக்கத்துடன் நுட்பமுற வகுத்தருளிய எம் தனிப் பெருங் கருணையே!

253 வெளியிடை ஒன்றே விரித்து அதில் பற்பல
அளிஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

சுத்தபூத வானகம் ஒன்றேயாகி விளங்கும்படி விரிவடையச் செய்து அவ்வொன்றே ஆன சுத்தபூத வெளியின் மூலம் பல்வேறு பூத வெளிவகை வகைகளையும் இரக்கத்தோடு வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

254 வெளியிடைப் பலவே விரித்து அதில் பற்பல
அளிதர அமைத்த அருட்பெருஞ் ஜோதி

ஒன்றே ஆன சுத்தபூத வெளியின் ஊடே பகுதி வெளி, பூத வெளி, கரணவெளி, குணவெளி, கலை வெளி, உயிர்வெளி, சுத்த வெளி முதலிய வெளி வகைகளை ஒன்றினொன்று விரிவடையும்படிச் செய்து அவற்றின் மூலம் பல்வேறு பயன்பாடுகள் ஓங்கும்படிக் கருணை கூர்ந்து அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

255 வெளியிடை உயிர்இயல் வித்துஇயல் சித்துஇயல்
அளிபெற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வான்வெளியதில் உயிர்த்தொகுதிகள் உருவாகும் அமைப்பி னையும் விதைகளில் உயிர் ஏறி முளைக்கும் அமைவுகளையும் கர்ம சித்தி, யோக சித்தி, ஞானசித்தி முதலிய சித்திகளின் அமைவுகளையும்கூட கருணைகூர்ந்து விளங்கும்படி அமைத் தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

256 வெளியின் அனைத்தையும் விரித்து அதில் பிறவும்
அளிஉற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வான் வெளியதின் இடையில் பிற பூத இயல்புகளையும், வெளி இயல்புகளையும், உயிர் இயல்புகளையும், சித்திபேறு இயல்புகளையும் விளங்கும்படி வியாபகம் செய்ததுடன் அவ் வானகத்துக் கூறுகளால் உயிர்த் தொகுதிகள் ஊக்கமும் ஆக்கமும் பெறும்படியும் இரக்கத்தோடு அமைத்து அருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

***அண்ட கோடிகள் அகம்புறமாய் விளங்கும் வகை****

257 புறநடுவொடு கடை புணர்ப்பித்து ஒருமுதல்
அறம்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புறமாகிய சந்திரச் சுடர் நடுவே சந்திர ஒளியனைச் சேர்ப்பித்து அந்த ஒப்பற்ற சந்திரப் பிரகாச விளக்கம் அறநெறியின்படி பொருந்த வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

* அண்ட அமைவின்படி அகம் - அக்னி; அகப்புறம் - சூரியன்; புறம் - சந்திரன்; புறப்புறம் - நட்சத்திரங்கள் எனவும் அவ்வாறே பிண்ட அமைவின்படி அகம் - ஆன்மா; அகப்புறம் - ஜீவன் (புருடன்); புறம் - மனம்; புறப்புறம் - ஐம்பொறிகள் எனவும் மேலும் அந்த அண்ட பிண்ட ஒளி அமைவுகளின்படி முதன்மை நிலைப் பிரகாசம் (ஜோதி), இடைநிலைச் சோபை (சுடர்), கடைநிலை ஒளி (விளக்கு) எனவும் வழங்கப் பெறும். இங்கு அந்த அமைவுகளின்படி இப்பகுதிக்குப் பொருள் காணப் பெற்றுள்ளது. சான்றாகக் கிழமைகள் பிறக்கும் வகையிருப்பு போன்றது இவ்வமைப்பு எனலாம்.



258 புறம்தலை நடுவொடு புணர்ப்பித்து ஒருகடை
அறம்பெற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புறமாகிய சந்திரப் பிரகாச தலைமைப் பண்பு நடுவே, சந்திர சோபையாம் இடைநிலைப் பண்பினைக் கலக்கும்படிச் செய்து சீரிய சந்திர ஒளி என்னும் கடைநிலைப் பண்பினை நெறிப்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

259 அகப்புற நடுக்கடை அணைவால் புறமுதல்
அகப்பட வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகப்புறம் நடுக்கடை என்னும் சூரியனின் சுடரோடு சூரியனின் ஒளி சேர்வதனால் புறமுதலாகிய சந்திரப்பிரகாச இயல்பினை முறைப்பட வகுத்து அருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

260 அகப்புற நடுமுதல் அணைவால் புறக்கடை
அகப்பட அமைத்த அருட்பெருஞ் ஜோதி

அகப்புறமாகிய சூரியச் சுடரோடு சூரியப் பிரகாசத்தைச் சேர்ந்திடச் செய்து புறக்கடையாகிய சந்திர ஒளியை முறைப்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

261 கருது அக நடுவொடு கடை அணைந்து அகமுதல்
அருள்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

சிறந்து எண்ணப்படுகின்ற அக்னிச் சுடரோடு அக்னி ஒளியைச் சேர்த்து அக்னி பிரகாசத்தை அருள் பெறுதற் கென்றே அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

262 தணிஅக நடுவொடு தலைஅணைந்து அகக்கடை
அணிஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர் இரக்கமாகிய ஜீவ தயவுக்கென்றே தகுதி பெற்ற அக்னிச் சுடரொடு அக்னிப் பிரகாசம் சேர்ந்திட அக்னி ஒளியை நேர்த்தி - பொருந்த வகைப்படுத்திய எம் அருட்பெருஞ் ஜோதியே!

263 அகநடு புறக்கடை அணைந்து அகப் புறமுதல்
அகம்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அக நடுவாகிய அக்னிச் சுடர் புறக்கடையாகிய சந்திர ஒளியுடன் சேர்ந்திடச் சூரியப் பிரகாசத்தை அண்ட பிண்டத்திற்குள்ளே வகைப்படுத்தி யருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

264 அகநடு புறத்தலை அணைந்து அகப் புறக்கடை
அகல்இடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகமாகிய அக்னிச் சுடரொடு புறமாகிய சந்திரப் பிரகாசம் பொருந்திட சூரிய ஒளி தோன்றும் தகைமையினை அண்டங்களின் ஊடே வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

265 அகநடு அதனால் அகப்புற நடுவை
அகம்அற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகமாகிய அக்னிச் சோபை தன்னால் அகப்புறமாகிய சூரியனின் சோபையைக் குறைவு அற வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

266 அகப்புற நடுவால் அணிபுற நடுவை
அகப்பட அமைத்த அருட்பெருஞ் ஜோதி

அகப்புறம் என்னும் நடுவாகிய சூரியச் சோபையினால் அழகுடைய சந்திரச் சோபை பொருந்தும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

267 புறநடு அதனால் புறப்புற நடுவை
அறம்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புறமாகிய சந்திரனின் நடுவாகிய சோபை என்பதனைக் கொண்டு புறப்புறமாகிய நட்சத்திரங்களின் நடுவாகிய சோபையை நெறிமுறைப்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

268 புகல் அரும் அகண்ட பூரண நடுவால்
அகநடு வகுத்த அருட்பெருஞ் ஜோதி

இன்னதென்று கூறுவதற்கு அரிய அகண்ட பரிபூரணம் என்னும் பரை நிலைச் சுடரினால் அக்னிச் சுடரினை வகைப்படுத்தியருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

269 புறப்புறக் கடைமுதல் புணர்ப்பால் புறப்புறம்
அறக்கணம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புறப்புறம் என்னும் நட்சத்திரப் பிரகாச சேர்க்கையினால் புறப்புறம் என்னும் அந் நட்சத்திர ஒளித் தொகுதி நிலைகளை வகைப்படுத்தி அருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



270 புறத்துஇயல் கடைமுதல் புணர்ப்பால் புறத்துஉறும்
அறக்கணம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புறமாகிய சந்திர ஒளி இயல்பினுடன் சந்திரப் பிரகாசம் சேர்ந்திடுவதனால் புறமாகிய அச் சந்திர சோபையாகிய நெறிமுறைகளை வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

271 அகப்புறக் கடை முதல் அணைவால் அக்கணம்
அகத்து உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகப்புறமாகிய சூரிய ஒளியுடன் சூரியனின் கடைநிலை ஒளியாகிய பிரகாசத்தைச் சேர்ந்திடும்படிச் செய்வித்து அச்சூரியச் சுடராகிய அழகுக் கூட்டங்களைப் பொருந்தும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

272 அகக் கடை முதல் புணர்ப்பு அதனால் அகக்கணம்
அகத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகமாகிய அக்னி ஒளியுடன் அக்னியின் கடைநிலையாகிய பிரகாசம் சேர்ந்திடச் செய்து அதனால் அக்னிச் சுடர் தொகுதிகளைப் பெருவெளியின் இடையில் வகைப்படுத்தி அருளிய எம் தனிப் பெருங் கருணையே!

### பஞ்ச பூத இருப்பின் வகை

273 வானிடைக் காற்றும் காற்றிடை நெருப்பும்
ஆன் அற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

விண் வெளியின் இடையே இடையீடின்றி வளி தோன்றவும் அந்த வளியின் இடையே நெருப்பு தோன்றவும் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

274 நெருப்பிடை நீரும் நீரிடைப் புவியும்
அருப்பிட வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அனலின் இடையில் நீர் தோன்றவும் நீரின் இடையில் மண் தோன்றவும்படியான மலர்ச்சி நிலைகளை வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

275 நீர்மேல் நெருப்பும் நெருப்பின்மேல் உயிர்ப்பும்
ஆர்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புனலின் மேல் நிலையில் அனலும் அனலின் மேல் நிலையில் காற்றும் எழுச்சியுறப் புரிந்திட என்றே வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

276 புனல்மேல் புவியும் புவிமேல் புடைப்பும்
அனல்மேல் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நீரினுக்கு மேலே பூமியும் பூமியின் மேல் வளர்பொருள் நிலைகளும் நெருப்புக்குப் பின்பாகத் தோன்ற வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

***வெளிகள் விளங்கும் வகை***

277 பகுதிவான் வெளியில் படர்ந்த மா பூத
அகல்வெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அசுத்த மாயை என்னும் பிரகிருதி மாயா வெளியில் படர்ச்சி உறும் பெரும் பூதங்கள் விரிவடைந்து சிறந்திட வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

278 உயிர்வெளி இடையே உரைக்க அரும் பகுதி
அயவெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி

ஜீவ வெளியின் இடையே சொல்லுதற்கு அருமையாகிய சிறப்புடைய அதிகாரணம், காரணம், அதிசூக்குமம், சூக்குமம் என்னும் மாயை வெளியை வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

279 உயிர்வெளி அதனை உணர்கலை வெளியில்
அயல்அற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர் வெளி என்னும் ஜீவாகாசத்தை உணர்ந்து உயர்வதற்குரிய வித்தியாகலை முதல் சாந்தியாதீத கலைவரையான வெளியில் நீக்கமில்லாமல் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

280 கலைவெளி அதனைக் கலப்பு அறு சுத்த
அலர்வெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புலன்கள் ஆகும் நட்சத்திரங்கள், மனம் ஆகும் சந்திரன், ஜீவன் ஆகும் சூரியன், ஆன்மா ஆகும் அக்னி ஆகிய கலை வெளிகளை (ஒளியின் பல கலைகளாய் விரிகின்ற வெளியை) தூயதாகி மலர்கின்ற சுத்த மாயா வெளியின் ஊடே வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



281 சுத்தநல் வெளியைத் துரிசுஅறு பரவெளி
அத்துஇடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

சீரியதாகும் சுத்த மாயா வெளியைக் குறைவற்ற மேல்வெளி என்னும் பரவெளி இடையே பொருந்துமாறு வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

282 பரவெளி அதனைப் பரம்பர வெளியில்
அரசுஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பரவெளியாகிய மேல்வெளியதனை, அதனை உருவாக்கி இயக்கும் பரம்பர வெளியின் ஊடே ஆளுமையுற வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

283 பரம்பர வெளியைப் பராபர வெளியில்
அரம்தெற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பரம்பரம் என்னும் உயரிய வெளியைப் பராபரம் என்னும் உத்தம வெளியில் தேய்வு இல்லாதபடி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

284 பராபர வெளியைப் பகர் பெரு வெளியில்
அராவுஅற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பராபரம் என்னும் உத்தம வெளியைப் போற்றி வணங்கும் அருட்பெரு வெளியில் தேய்வுறாதபடி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

285 பெருவெளி அதனைப் பெரும் சுக வெளியில்
அருள்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அருட்பெரு வெளி என்னும் அந்த உத்தமோ உத்தம வெளியைக் கடவுளின் பேரின்பச் சுகமாம் பெருவெளியில் கருணை கூர்ந்து வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

286 குண முதல் கருவிகள் கூடிய பகுதியில்
அணைவுஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

சத்துவம், இராஜசம், தாமசம் என்னும் மன முதலிய கரணங்களுக்குத் தலைமையாகிய குணக் கருவிகளையும்

உடல், கருவி, உலகம், இன்பம் ஆகியவைகளை உருவாக்கும் பிரகிருதி மாயையிலிருந்து தோன்றிடும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

287 மன முதல் கருவிகள் மன்னுயிர் வெளியிடை
அனம்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் சூக்கும உள்கருவிகளை நிலைபெற்ற ஜீவ ஆகாசத்தின் இடையில் பொருத்தித் தோன்றும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

288 காலமே முதலிய கருவிகள் கலைவெளி
ஆலுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்னும் இடைப்பாட்டு வித்தியா தத்துவக் கருவிகளைக் கலை வெளியினிடையில் பொருந்தும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

289 துரிசுஅறு கருவிகள் சுத்த நல்வெளியிடை
அரசுஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

சுத்த வித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் சுத்த தத்துவக் கருவி நிலைகளைப் புனித நல் வெளியினிடையில் ஆட்சி பெற வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

***அண்டங்கள் விளங்கும் வகை***

290 இவ்வெளி எல்லாம் இலங்க அண்டங்கள்
அவ் வயின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பிரகிருதி வெளி முதலாகச் சுத்த மாயா புவன வெளியும், அதற்கு மேல் பெருவெளி முடிவாக விளங்கும் வெளிகள் எல்லாம் சிறப்புற்று ஓங்கி விளங்கும்படி அவற்றிற்கு ஆதாரமாகிய அண்டப் பரப்புகளை ஆங்காங்கே அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

291 ஓங்கிய அண்டம் ஒளிபெற முச்சுடர்
ஆங்கிடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

சிறப்புற்று ஓங்கும் பிரமாண்டம் பிரகாசம் பெற்றுத் திகழும்படிச் சந்திர சூரிய அக்னிச் சுடர்களை அவ் வண்டத்தினிடையில்



விளங்கி இயங்கும்படி வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

292 சிருட்டித் தலைவரைச் சிருட்டி அண்டங்களை
அருள்திறல் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர்த் தொகுதிகளைப் படைத்திடும் நான்முகர்களையும் அவர்கள் இருந்து படைத்தற்கான நான்முகர்கள் அண்டங்களையும் அருள் வல்லபத்துடன் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

293 காவல்செய் தலைவரைக் காவல் அண்டங்களை
ஆ வகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர்த் தொகுதிகளைக் காத்திடும் திருமால்களையும் அவர்கள் இருந்து காத்தலுக்கான திருமால்களின் அண்டங்களையும் பொருந்தும் வகையில் அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

294 அழித்தல்செய் தலைவரை அவர் அண்டங்களை
அழுக்கற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர்த் தொகுதிகளின் துரிசுகளையும் பிறவற்றையும் அழித்திடும் உருத்திரர்களையும் அவர்களிருந்து அழித்தலுக்கான உருத்திரர்கள் அண்டங்களையும் குற்றமற அமைத்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

295 மறைத்திடு தலைவரை மற்றும் அண்டங்களை
அறத்தொடு வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர்த் தொகுதிகளுக்குப் பக்குவம் வருவிக்க வேண்டி அவற்றின் குறை அறிவு நிலைகளை மறைக்கின்ற ஆற்றல் வாய்ந்த மகேச்சுரர்களையும் அவர்கள் இருந்து மறைத்தற்கான மயேச்சுரர்கள் அண்டங்களையும் அற நெறியின்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

296 தெளிவுசெய் தலைவரைத் திகழும் அண்டங்களை
அளிபெற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர்த் தொகுதிகளுக்குப் பயன் கொடுத்திட வேண்டி அவற்றிற்குப் பக்குவத் தெளிவு செய்கின்ற சதாசிவர்களையும்

அவர்களிருந்து அநுக்கிரகம் செய்வதற்கான அண்டங்களையும் தயவுகூர்ந்து வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

297 விந்துவாம் சத்தியை விந்தின் அண்டங்களை
அந்திறல் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மேற்கூறிய நான்முகன், திருமால், உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் ஆகியவர்களை நடைமுறைப்படுத்தும் சுத்த மாயையின் அங்கமாகிய விந்து என்னும் சக்திகளையும் அவர்களிருந்து நடைமுறைப் படுத்தும் விந்து அண்டங்களையும் பொலிவுறும் வலிமையுடன் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

298 ஓங்கார சக்திகள் உற்ற அண்டங்களை
ஆங்கு ஆக அமைத்த அருட்பெருஞ் ஜோதி

ஓங்காரம் என்னும் நாத நிலைக்குரிய சத்திமார்களையும் அவர்களிருந்து விந்து சத்திகளை நடைமுறைப்படுத்தும் நாத அண்டங்களையும் ஆங்காங்கு நிலைக்கும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

299 சத்தத் தலைவரைச் சாற்றும் அண்டங்களை
அத்தகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

விந்து சத்திகள், நாத சத்திகளைச் செயற்படுத்தும் பரவிந்து சத்தர்களையும் அவர்களிலிருந்து நடைமுறைப்படுத்தப் படுவதும் பெரியோரால் புகழப்படுவதுமாகிய பரவிந்து அண்டங்களையும் சீரிய தகைமையுடன் வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

300 நாதம்ஆம் பிரமமும் நாத அண்டங்களும்
ஆதரம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பரவிந்து சத்தர்களைச் செயற்படுத்தும் நாத பிரமம் என்னும் பரநாத சத்தர்களையும் அவர்களிலிருந்து நடைமுறைப்படுத்தும் பரநாத அண்டங்களையும் மேற்கூறிய எல்லாவற்றிற்கும் ஆதாரம் ஆகும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



301 பகர் பரா சக்தியைப் பதியும் அண்டங்களை
அகம்அற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மேற்கூறிய ஒன்பது நிலைத் தலைவர்களையும் செயல்படுத்தும் ஆற்றல் வாய்ந்தவள் என்று ஆன்றோர் புகழ்கின்ற பரை என்னும் பராசத்திகளையும் அவர்கள் இருந்து நடைமுறைப் படுத்தும் பராசத்தி அண்டங்களையும் குற்றம் ஏதுமின்றி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

302 பரசிவ பதியைப் பர சிவாண்டங்களை
அரசுஉற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

நவநிலைத் தலைவர்களுக்கும் தலைமையாகிய பராசக்தியைச் செயற்படுத்தும் பரசிவம் என்னும் கடவுளரையும் அன்னவர்கள் நடைமுறைப்படுத்தும் பரசிவ அண்டங்களையும் ஆளுமை பெறும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

303 எண்இல் பல் சக்தியை எண்இல் அண்டங்களை
அண்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அளவற்ற அபரத்துவ, பரத்துவ சத்திமார்களையும் அவர்கள் இருந்து செயல்படும் அளவற்ற சத்திகளின் அண்டங்களையும் நெருங்கிப் பொருந்தும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

304 அளவுஇல் பல் சத்தரை அளவுஇல் அண்டங்களை
அளவுஅற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

கணக்கற்ற அபரத்துவ, பரத்துவ சத்தர்களையும் அவர்கள் இருந்து செயல்படும் கணக்கற்ற சத்தர்களின் அண்டங்களையும் எண்ண இயலாத நிலையில் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

305 உயிர்வகை அண்டம் உலப்புஇல எண்இல
அயர்வுஅற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர்க் கூட்டங்கள் இயங்கி வாழும் வகையுள்ள அண்டங்கள் அழியக்கூடியன அல்ல; அத்துடன் எண்ணிக்கை உடையனவும் அல்ல; அத்தகைய உயிர்க்கூட்டங்கள் வாழ்ந்து வரும் அண்டங்களைத் தளர்வு சிறிதுமின்றி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

### கடல்கள் விளங்கும் வகை

306 களவுஇல கடல்வகை, கங்குஇல கரைஇல
அளவுஇல வகுத்த அருட்பெருஞ் ஜோதி

கடலின் வகைகள் மறைப்பு இயல்பு இல்லாதனவாய், வரையறை யற்றனவாய், வரம்பில்லாதனவாய், மேலும் கணக்கு இல்லாதனவாய் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

307 கடல்அவை அனைத்தும் கரைஇன்றி நிலைஉற
அடல்அனல் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

கடல்கள் எல்லாவற்றையும் கரைகள் இல்லாதபடியும் நிலைபேறு உடையனவாகவும் வடவைத் தீயின் ஈர்ப்பினில் பொருந்த அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

308 கடல்களும் மலைகளும் கதிகளும் நதிகளும்
அடல்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

கடல்கள் யாவற்றையும் மலைகள் யாவற்றையும் ஓடிப்பாயும் வழி இடங்கள் ஆறுகள் யாவற்றையும் வடவைத் தீயின் ஈர்ப்பில் பொருந்தும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

309 கடலிடைப் பல்வளம் கணித்து அதில் பல்லுயிர்
அடல்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

கடல்களின் இடையில் முத்து, பவழம் போன்ற பல்வகை வளங்களும் பொருந்தும்படி அளவிட்டு அக்கடல்களில் பல் வகை உயிர்த் தொகுதிகளையும் வடவைத் தீயின் ஈர்ப்பினில் பொருந்த வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

### மலைவளம் விளங்கும் வகை

310 மலையிடைப் பல்வளம் வகுத்து அதில் பல்லுயிர்
அலைவுஅற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மலைகளின் இடையில் பல்வகை வளப்பங்களும் தோன்றி விளங்கும்படி வகுத்தருளி அம் மலைகளில் பல்வகை உயிர்க் கூட்டங்களை அலைவு ஒழியும்படி வாழ்ந்திட வகைப்படுத்தி அருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



### ஒன்று பலவாகி விளங்கும் வகை

311 ஒன்றினில் ஒன்றே ஒன்றிடை ஆயிரம்
அன்றுஅற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

கடல், மலை, கதி, நதி ஆகிய ஒவ்வொன்றினில் ஒவ்வொரு சிறப்புத் தன்மை வாய்ந்த உயிர் தோன்றவும் அச் சிறப்புத் தன்மை ஒன்றினைச் சார்ந்து ஆயிரக் கணக்கான பொதுத் தன்மை வாய்ந்த உயிர்கள் உருவாகவும் அப்படி எதிர்ப்பு இல்லாதவாறு வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

312 பத்திடை ஆயிரம் பகர் அதில் கோடி
அத்துஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மேற்கூறியபடி ஒன்றினில் பத்தாகவும் பத்தினில் ஆயிரமாகவும் ஆயிரத்தில் கோடியாகவும் உயிர்கள் தோன்றி விளங்கும்படிப் பொருத்தமுற வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

313 நூற்றிடை இலக்கம் நுவல் அதில் அனந்தம்
ஆற்றிடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மேற்கூறியபடி நூற்றினில் இலக்கக் கணக்கிலும் சிறந்து கூறுகின்ற இலட்சத்தில் அளவற்ற கோடிக்கணக்கான உயிர்களும் தோன்ற நெறிமுறையின்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

314 கோடியில் அனந்த கோடி, பல்கோடி
ஆடுஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன, விலங்கு, நரகர், தேவர், ஐந்தொழில் கர்த்தர்கள், சத்திகள், சத்தர்கள், அண்டங்கள் ஆகிய யாவும் கோடான கோடியாகவும் அளவிறந்த கோடி யாகவும் பலப்பல கோடியாகவும் திருவருள் விளக்கத்தின்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

### விதையும் விளைவும்

315 வித்துஇயல் ஒன்றா விளைவுஇயல் பலவா
அத்தகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி

விதையின் இயல்பு ஒன்றாகவும் அதன் மூலம் விளைந்திடும் பயனின் இயல்பு பலவாகவும் விளங்கப் பொருந்துமாறு அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

316 விளைவு இயல் அனைத்தும் வித்திடை அடங்க
அளவுசெய்து அமைத்த அருட்பெருஞ் ஜோதி

தாவர இனத்து விளைவின் இயல்புகள் எல்லாம் வித்துகளின் இடையில் அடங்கி வளரும்படி வரையறை செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

317 வித்தும் பதமும் விளை உபகரிப்பும்
அத்திறல் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

விதைகளின் தன்மையும் அவ் விதைகளிடம் தாவர உயிர்கள் தோன்றும் தகுதிகளின் இயல்பும் அத் தாவர உயிர்கள் தோன்றுவதற்கு உதவி செய்யும் பக்குவ சத்திகளின் ஆதரவும் அருளாற்றலின்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

318 வித்திடை முளையும் முளையிடை விளைவும்
அத்தக அமைத்த அருட்பெருஞ் ஜோதி

விதைகளாகிய உடம்பில் அருள் நியதியின்படித் தாவர ஆன்மாக்கள் அணு தேகத்தோடு கூடி நிலத்தில் கலந்து அந்நிலத்தின் பக்குவ சத்தியோடு கலந்து தோன்றுகின்ற உயிராகிய முளைகளும், அந்த முளைகளை ஆதாரமாக்கி உண்டாகும் விளைவுகளும் அருள் நியதியின்படி அமைத் தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

319 வித்தினுள் வித்தும் வித்து அதில் வித்தும்
அத்திறம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

விதைகளின் மூலம் மீண்டும் உருவாகும் விதைகளும் அவ் விதைகளின் ஊடே உண்டாகும் மீள் வகை விதைகளும் அருளாற்றலின்படி (காரியம் - காரிய காரணம் - காரணம் - மாகாரணம் என்னும்படி) வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

320 விளைவினுள் விளைவும் விளைவு அதில் விளைவும்
அளைஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

விதைகளை உடலாகக் கொண்டு உண்டாகிய தாவர இனத்து உயிர் விளைவுகளுள் மேலும் விளைவுகள் உருவாகவும் அத்தகைய விளைவுகளின் ஊடே அடுத்தடுத்து உண்டாக வேண்டிய உயிர் விளைவுகளும் அருள் நியதியின்படி கலந்திட என்றே வகுத்தருளிய எம் தனிப் பெருங் கருணையே!



321 முளைஅதின் முளையும் முளையினுள் முளையும்
அளைதர அமைத்த அருட்பெருஞ் ஜோதி

விதைகளாகிய ஜட தேகத்தில் தோன்றும் சித்தாகிய முளை உயிர்களின் மூலம் மேலும் முளை உயிர்கள் உருவாகவும் அந்த முளைகளின் இடையே பின்னும் தொடர்ந்து முளை உயிர்கள் கலந்து தோன்றும் படியும் அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

322 வித்திடைப் பதமும் பதத்திடை வித்தும்
அத்துஉற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

விதைகளாகிய தேகத்தினுள் தாவர உயிர்கள் தோன்றி விளங்கும் பக்குவமும், அப்பக்குவத்திடையில் பின்பு உருவாகும் விதைகளின் கூட்டமும் அருள் நியதியின்படிப் பொருந்துமாறு அமைத்தருளிய எம் தனிப் பெருங் கருணையே!

323 பதம் அதில் பதமும் பதத்தினுள் பதமும்
அதிர்வு அற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வித்துகளாகிய உடலின் இடையில் விளைவுகளாகிய பயன்கள் தோன்றக்கூடிய பக்குவமும் அந்நிலைகளின் இடையில் மேலும் பக்குவ நிலைகள் தொடரவும், தொடரும் அப்பக்குவ நிலைகளே அக நிலை அமைவாகவும் அலைவின்றி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

***ஒற்றுமை வேற்றுமை இயல்***

324 ஒற்றுமை வேற்றுமை உரிமைகள் அனைத்தும்
அற்றுஎன வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர்க் கூட்டுறவால் ஒற்றுமையாகும் உரிமை, உடல், மனம், குணம் முதலிய கூட்டுறவால் வேற்றுமையாகும் உரிமை ஆகிய யாவற்றையும் அடிமை, பிள்ளை, நேயன், தான் என்னும் நால்வகை நடைமுறை என வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

325 பொருள் நிலை உறுப்பியல் பொதுவகை முதலிய
அருள்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உறுதிப் பொருள் நான்கினையும் (அறம் பொருள் இன்பம் வீடு) அது பெறுவதற்கான பீடங்கள் ஒன்பதினையும் வகத்து அதன் வழி பொதுவும் சிறப்புமாகிய அனுபவங்களை வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

326 உறவினில் உறவும் உறவினில் பகையும்
அறன்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

ஜீவத் தன்மையும் ஆன்மத் தன்மையும் உறவினுள் உறவாகும் படியும் அத்தகைய ஜீவ ஆன்மத் தன்மையுடன் அதற்கு உபகார மாகிய மனம் முதலிய மாயா கருவிகள் பரிபாக நிலைக்குப் பகையாகும்படியும் மேலாம் அறப் பயன்கள் பொருந்த என்றே அவற்றை வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

327 பகையினில் பகையும் பகையினில் உறவும்
அகைவுஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மாயையின் இயக்கமான மன முதலிய உட்கருவிகளாகிய பகையும் அதனுடன் சேர்ந்து இயங்கும் ஐம்புலன்களாகிய புறப்பகையும் வகுத்து அவ்வவ் எதிர்ப்பண்புகளுக்கு உள்ளே உயிர் நேய உறவாம் உணர்வு ஓங்கும்படிக் கூறுபடுத்தி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

328 பாதியும் முழுதும் பதிசெயும் அந்தமும்
ஆதியும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

இடையில் உருவாகும் காம வெகுளி மயக்கமும் அதற்குமேல் அனாதியே முழுமையான மும்மலமும் அம்மலக் கூட்டு றவினை நசித்திடச் செய்யும் ஒடுக்கமாம் கடவுள் செயலும் அவை தோன்றுவதற்கான நல்வினை தீவினைக் கட்டுகளையும் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

329 துணையும் நிமித்தமும் துலங்கு அதின் அதுவும்
அணைவுஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உடல், கருவி, உலகம், இன்பம் இவைகளை உருவாக்கித் தந்திட முதற்காரணமாகிய மாயையும் துணைக் காரணமாகிய



பஞ்ச கிருத்திய கர்த்தர்களையும் நிமித்த (நிகழ்ச்சிக்கு) காரணமாகிய கடவுளின் அருள்தன்மையும் விளங்கும்படிச் செய்ததுடன் அவை ஒன்றுடன் ஒன்று கலந்து பொருந்திட வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

330 உருவதின் உருவும் உருவினுள் உருவும்
அருள்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

நவ பேதங்களில் உரு நிலையாம் மயேச்சுர வடிவில் உருத்திர வடிவும், அவ் உருத்திர வடிவினில் திருமால் வடிவும், அத்திருமால் வடிவினுள் நான்முகன் வடிவும், கருணையுடன் பொருந்தி விளங்கும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

331 அருவினுள் அருவும் அரு அதில் அருவும்
அருள்இயல் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பரநாத நிலையில் பரவிந்து நிலையும், பரவிந்து நிலையில் பரநாத நிலையும், அருவக் கூறுகளாக அருளின் இயல்பின்படி விளங்கிட வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

332 கரணமும் இடமும் கலைமுதல் அணையும்ஓர்
அரண்நிலை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மன முதலிய நான்கு வகை அந்தக் கரணங்களும், அவை இருந்து செயல்படும் இடங்களும், கலை முதலிய ஏழு வகை வித்தியா தத்துவங்களும், அவை சேர்ந்து செயல்படும் எல்லை நிலைகளையும் அருள் கூர்ந்தமைந்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

333 உருவதில் அருவும் அரு அதில் உருவும்
அருள்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பிரம்மா விஷ்ணு உருத்திரன் மயேச்சுரன் என்னும் நால்வகை உரு வடிவில் விந்து நாதம் பரவிந்து பரநாதம் என்னும் அருவத் தோற்றங்களும், அந்தப் பரநாதம் பரவிந்து நாதம் விந்து என்னும் அருவ நிலைகளை ஆதாரமாகக் கொண்டு மயேச்சுரன் முதலிய நான்கு வகை வடிவங்களும் தோன்றிடக் கருணை கூர்ந்து அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

334 வண்ணமும் வடிவும் மயங்கிய வகை பல
அண்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வெண்மை, செம்மை, பசுமை, கருமை, பொன்மை என்னும் ஐந்து வகை நிறங்களும் தாவர யோனி, ஊர்வன நீர்வாழ்வன யோனி, பறவை யோனி, விலங்கு யோனி, தேவ யோனி, நரக யோனி, மனித யோனியாம் ஏழுவகை வடிவுகளும் கலந்து உருவாகும் உயிர்த் தோற்றவகை பலப்பலவாகப் பொருந்துமாறு வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

335 சிறுமையில் சிறுமையும் சிறுமையில் பெருமையும்
அறிதர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அணு அளவினதாகிய ஆன்மாவினுள் மலக்கலப்பாகிய சிறுமைத் தன்மையும் அச் சிறுமை நீங்கின அளவில் கோடி சூரியப் பிரகாசமாகிய அருமைத் தன்மையும் பக்குவமடைந்த உயிர் அறிந்து அனுபவிக்கும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

336 பெருமையில் பெருமையும் பெருமையில் சிறுமையும்
அருள்நிலை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

ஆன்மப் பிரகாசச் சீர்மையில் அருட்பிரகாச மாட்சிமையும் - அந்த ஆன்மப் பிரகாசத் தன்மையுடன் ஆணவமல வாசனையாம் சிறுமையும் கருணைநிலை விளங்க என்றே வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

337 திண்மையில் திண்மையும் திண்மையில் நேர்மையும்
அண்மையின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மன உறுதியைக் கொண்டு ஆன்ம உறுதியும் அந்த ஆன்ம வலிவினால் ஆன்ம நேயம் என்னும் நேர்மையும் அணிமை பெறும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

338 மென்மையில் மென்மையும் மென்மையில் வன்மையும்
அன்மை அற்று அமைத்த அருட்பெருஞ் ஜோதி

மன நெகிழ்வின் வழியே ஆன்ம நெகிழ்ச்சியும் அந்த ஆன்ம நெகிழ்ச்சியின் மூலம் அருள் வலிமையும் இடையீடு இல்லாமல் பெற்று விளங்கும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!



339 அடியினுள் அடியும் அடியிடை அடியும்
அடிஉற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

ஆன்ம ஒளியூடே ஜீவஒளியும் ஜீவ ஒளியூடே கரண ஒளியும் கரண ஒளியூடே இந்திரிய ஒளியும் பொருந்திட வகைப்படுத்தி அருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

340 நடுவினுள் நடுவும் நடுவு அதின் நடுவும்
அடர்வுஉற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

அருள் நிலையோடு அன்பு நிலையும் அன்பு நிலையோடு பக்தி நிலையும் பக்தி நிலையோடு பொறி புலன்களின் சுத்த பாவனையும் தொடர்புபட அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

341 முடியினுள் முடியும் முடியினில் முடியும்
அடர்தர அமைத்த அருட்பெருஞ் ஜோதி

சுத்த சிவம் என்னும் தூய பேரிறை அனுபவத்தூடே பரசிவ அனுபவமும் அந்தப் பரசிவ அனுபவத்தூடே பிற சிவ அனுபவமும் தொடர்புறும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

***அகப்புறப் பூ இயல்***

342 அகப்பூ அகஉறுப்பு ஆக்க அதற்கு அவை
அகத்தே வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அண்டத்தில் அகமாகிய அக்னி ஆற்றலால் பிண்டத்தில் ஆன்ம அங்கங்களை உருவாக்கிட என்றே அவை மலர்ந்து வளரும் தன்மையை அந்த ஆன்மாவின் ஊடே வகை செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

343 புறப்பூ புறத்தில் புனைஉருவு ஆக்கிட
அறத்துடன் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அண்டத்தில் புறமாகிய சந்திர ஆற்றலால் பிண்டத்தில் மனம் முதலிய கருவிகள் உருவாக்கிட என்றே அவை மலர்ந்து வளரும் தன்மையை அந்த அந்தக் கரணங்களின் ஊடே வகை செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

344 அகப்புறப் பூ அகப் புறஉறுப்பு இயற்றிட
அகத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அண்டத்தில் அகப்புறமாகிய கதிரவன் ஆற்றலால் பிண்டத்தில் ஜீவ உறுப்புகளை உருவாக்கிட அவை மலர்ந்து வளரும் தன்மையை அந்தச் ஜீவனின் இடையே வகை செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

345 புறப்புறப் பூ அதில் புறப்புற உறுப்புஉற
அறத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அண்டத்தில் புறப்புறமாகிய விண்மீன் ஆற்றலால் பிண்டத்தில் ஐம்பொறி அங்கங்கள் மலர்ந்து வளர்ந்திட அந்த ஐம்பொறிகளினூடே அறப்பாங்குடன் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

*நான்குவகை உயிர்க்கூட்டம் விளங்கும் வகை*

346 பாரிடை வேர்வையில் பையிடை முட்டையில்
ஆர் உயிர் அமைக்கும் அருட்பெருஞ் ஜோதி

உலகத்தில் நிலத்தினைச் சார்ந்தும், வியர்வை போன்ற அழுக்குகளைச் சார்ந்தும், கருப்பையைச் சார்ந்தும், முட்டையைச் சார்ந்தும் உயிர்த் தொகுதிகள் தோன்றும்படி வரையறை செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

347 ஊர்வன பறப்பன உறுவன நடப்பன
ஆர்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நிலத்தில் ஊர்ந்து செல்லும் உயிர்க் கூட்டங்களையும் பறந்து செல்லும் உயிர்க் கூட்டங்களையும் பூமியில் நிலைபெற்று வளரும் உயிர்க் கூட்டங்களையும் கால்கள் மூலம் நடந்து செல்லும் உயிர்க் கூட்டங்களையும் ஊக்கமுடன் வகுத்தளித்த எம் அருட்பெருஞ் ஜோதியே!

348 அசைவுஇல அசைவுஉள ஆருயிர்த் திரள்பல
அசல்அற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நகர்ந்து அசையாத தாவர உயிர்க் கூட்டங்களையும் நடந்து பறந்து ஊர்ந்து அசையும் பிறவகை உயிர்க்கூட்டங்களையும் முற்றும் சீரியதாக வகுத்தளித்த எம் அருட்பெருஞ் ஜோதியே!



349 அறிவு ஒரு வகைமுதல் ஐ வகை அறுவகை
அறிதர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

ஓர் அறிவு உயிர் வகையும், இரண்டு மூன்று நான்கு ஐந்து அறிவு உயிர்வகையும் மற்றும் ஆறறிவு உயிர்வகையும் இவை யாவும் ஆன்ம அறிவு நிலைகளைச் சார்ந்து பரிணாமம் அடைய என்றே அவ்வாறு வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

350 வெவ்வேறு இயலொடு வெவ்வேறு பயன்உற
அவ்வாறு அமைத்த அருட்பெருஞ் ஜோதி

ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை வேறு வேறு வகையான இயல்புகளும், வேறு வேறு வகையான பயன்பாடுகளும் பொருந்தி மேம்பட என்றே அவ்வவ் வகையில் வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

351 சித்திர விசித்திர சிருட்டிகள் பலபல
அத்தகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அழகு நேர்த்தி உடையதும் அதிசயமானதுமான பிறப்புகள் அருள் நியதியின் வண்ணம் பலப்பலவாகத் தோன்றும்படி வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

*பெண் ஆண் இயல்பு முதலியன விளங்கும் வகை*

352 பெண்ணினுள் ஆணும் ஆணினுள் பெண்ணும்
அண்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்ணின் மன அறிவு இயல்பிற்குள் ஆணின் ஆன்ம அறிவு இயல்பும் ஆணின் ஆன்ம அறிவு இயல்புக்குள் பெண்ணின் மன அறிவு இயல்பும் தொடர்பு உறும்படி வகை செய்து அருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

353 பெண்ணினுள் மூன்றும் ஆணினுள் இரண்டும்
அண்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்ணின் உள்ளே மன அறிவு, ஜீவ அறிவு, ஆன்ம அறிவு என்னும் மூன்று அறிவு வகைகளும் ஆணின் உள்ளே ஜீவ அறிவு, ஆன்ம அறிவு என்னும் அறிவு வகைகளும் தொடர்புற்று விளங்கும்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

354 பெண்ணிடை நான்கும் ஆணிடை மூன்றும்
அண்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பெண் தன்மையுடன் பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்னும் நான்கு பூதக் கூறுகளும் ஆண் தன்மையுள் ஆகாயம் பிரகிருதி ஆன்மா என்னும் மூன்று பகுதிகளும் பொருத்தமுற அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

355 பெண்இயல் ஆணும் ஆண் இயல் பெண்ணும்
அண்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்ணின் இயல்புடைய ஆண்மகனையும் ஆணின் இயல்புடைய பெண்மகளையும் பொருத்தமுறும்படி அமைத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

356 பெண்திறல் புறத்தும் ஆண்திறல் அகத்தும்
அண்டுஉற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்ணின் வல்லபம் வெளிப்புறத்து விளங்கும்படியும் ஆணின் வல்லபம் உள் அகத்தே விளங்கும்படியும் பொருத்தமுற வகை செய்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

357 பெண்இயல் மனமும் ஆண்இயல் அறிவும்
அண்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்ணின் தன்மையை மன அறிவுக்கூறுகளுடன் விளங்கும்படிச் செய்தும் ஆணின் தன்மையை ஆன்ம அறிவுக் கூறுகளுடன் விளங்கும்படிச் செய்தும் பொருத்தமுற வகுத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

358 தனித்தனி வடிவினும் தக்கஆண் பெண்இயல்
அனைத்துற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தனிப்பட்ட ஒவ்வொரு உடலின் இடத்திலும் தகுதிபெற்ற ஆணின் இயல்பினையும் அவ்வாறே தகுதிபெற்ற பெண்ணின் இயல்பினையும் முழுவதும் கலந்து பொருத்தமுற வகுத்தருளிய எம் தனிப் பெருங் கருணையே!



***உலகமும் உயிரும் விளங்கும் வகை***

359 உனற்கு அரும் உயிர்உள உடல்உள உலகுஉள
அனைத்தையும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

எண்ணமுடியாத அளவு உயிர்கள் விளங்குகின்றன. அவ்வாறே எண்ண முடியாத அளவு உயிர்களைத் தாங்கும் உடல்களும் விளங்குகின்றன. எண்ண முடியாத அளவு அந்த உயிர்க் கூட்டங்களைத் தாங்கும் உலகங்களும் விளங்குகின்றன. அவை அனைத்தையும் அருள் நியதியின்படி வகுத்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

360 ஒவுறா எழுவகை உயிர்முதல் அனைத்தும்
ஆ வகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தாவரம், ஊர்வன, பறவை, விலங்கு, தேவர், நரகர், மனிதர் எனப்படும் அளவிட்டுச் சொல்லமுடியாத ஏழுவகையான உயிர்த்தொகுதிகள் யாவும் பரிணாமம் பெற்று மேம்பட என்றே வகைப்படுத்தியருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

361 பைகளில் முட்டையில் பாரினில் வேர்வினில்
ஐ பெற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

கருப்பையின் இடமாகவும், முட்டையின் இடமாகவும், பூமியின் இடமாகவும், அழுக்குகளின் இடமாகவும் கொண்டு அழகுபெற அந்தந்த ஏழு வகை உயிர்த் தொகுதிகளையும் அருள் நேர்த்தி பொருந்தும்படி அமைத்தருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

***காத்தல் தொழில் விளங்கும் வகை***

362 தாய் கருப் பையினுள் தங்கிய உயிர்களை
ஆய்வுஉறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

தாயினது கருப்பையினுள் மாதக் கணக்கில் தங்கி வளரும் உயிர்த் தொகுதிகளைக் காலத்திற்கேற்ப அக உறுப்புகள் புற உறுப்புகள் வளர்ச்சி அடையும்படி ஆராய்ந்து அவ்வவ் நிலையில் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

363 முட்டைவாய்ப் பயிலும் முழுஉயிர்த் திரள்களை
அட்டமே காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

முட்டைகளின் உள்ளே காலத்திற்கேற்ப அகப்புற உறுப்பு

வளர்ச்சிகளுடன் வெளிப்படும் முழுமை வாய்ந்த உயிர்த் தொகுதிகளை ஐம்பூதங்கள் முச்சுடர்கள் ஆகியவற்றின் மூலம் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

364 நிலம்பெறும் உயிர்வகை நீள்குழு அனைத்தும்
அலம்பெறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

மண்ணின் உள்ளே தோன்றி வளரும் தாவர உயிர்த்தொகுதிகள் எல்லாவற்றையும் வலிமை பெற்று ஓங்கும்படிக் காத்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

365 வேர்வுஉற உதித்த மிகும்உயிர்த் திரள்களை
ஆர்வுஉறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

வியர்வை முதலிய அழுக்குகளின் இடையே தோன்றிடும் மிகுதியான உயிர்த் தொகுதிகளை ஊக்கமுடன் காத்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

366 உடல்உறு பிணியால் உயிர்உடல் கெடாவகை
அடல்உறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

உடலுக்கு வருகின்ற நோயினால் உயிர் வளர்ச்சியும் உடல் வளர்ச்சியும் கெடாதபடி அருளாற்றல் மூலம் வலிமையுறச் செய்து உயிர்த் தொகுதிகளைக் காத்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

367 சிசுமுதல் பருவச் செயல்களின் உயிர்களை
அசைவு அறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

குழவிப் பருவம் முதலாக முதுமைப் பருவம் முடிவாக உண்டாகும் உயிர்த் தொகுதிகளின் செயல்பாடுகள் யாவற்றையும் கெடுதல் இல்லாமல் கண்ணும் கருத்துமாகக் காத்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

368 உயிர்உறும் உடலையும் உடல்உறும் உயிரையும்
அயர்வுஅறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

உயிருடன் பொருந்திச் செயல்படும் உடலையும் உடலுடன் பொருந்திச் செயல்படும் உயிரையும் தளர்வின்றிக் காத்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!



369 பாடுஉறும் அவத்தைகள் பலவினும் உயிர்களை
ஆடு உறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

துன்பம் உண்டாகும் பிறப்பு, பசி, நோய், மூப்பு, மரணம் முதலிய அவத்தைகள்; கருப்ப வேதனை, ஜனன வேதனை, பாலிய வேதனை, வாலிப வேதனை, மல ஜல வேதனை, மரண வேதனை, நரக வேதனை முதலிய வேதனைகள் பலவற்றி லிருந்தும் உயிர்த் தொகுதிகளை அருள் நியதியின்படிக் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

370 முச்சுடர் ஆதியால் எச்சக உயிரையும்
அச்சு அறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

சந்திரன், சூரியன், அக்னி என்னும் மூவகை ஒளிப் பொருள்கள் முதலியவற்றால் எவ்வகைப்பட்ட உலகத்து உயிர்த் தொகுதிகளையும் அகம், அகப்புறம், புறம், புறப்புறமாகி மலம் மாயை வலிவு நீங்கிட நின்று அருள் வலிமையுடன் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

371 வான்முகில் சத்தியால் மழை பொழிவித்து உயிர்
ஆன்அறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

வானகத்தில் இயங்கும் மேகக் கூட்டங்களின் ஆற்றலினால் மழை பொழியும்படிச் செய்வித்து உயிர்த் தொகுதிகளின் துன்பம் நீங்கும்படிக் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

372 இன்புஉறு சத்தியால் எழில்மழை பொழிவித்து
அன்புஉறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

உயிர்க் கூட்டங்களின் உடலும், உயிரும், அறிவும் வளரும்படிச் செய்வதற்கென்றே பொருந்திடும் இன்பசத்தியின் மூலம், அழகு நிறைவு பெறும் மழையினைப் பொழியும்படிச் செய்து அன்புடன் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

373 எண்இயல் சத்தியால் எல்லா உலகினும்
அண்உயிர் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

வரன்முறையாக உரிய மண்ணியல், நீரியல், தீயியல்,

வளியியல், வானியல் சத்திகளால் எல்லா உலகினிடத்தும் பொருந்திய எல்லா உயிர்களையும் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

***அமுதம் கொண்டு காத்திடல் வகை***

374 அண்டப் புறப்புற அமுதம் பொழிந்து உயிர்
அண்டு உறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

பல்வேறு வெளிகள் விளங்கும் அண்டங்களில் வாழும் உயிர்த் தொகுதிகளைப் புறப்புற அமுதமாம் மழை பொழிவதன் மூலம் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட் பெருஞ் ஜோதியே!

375 தேவரை எல்லாம் திகழ் புற அமுது அளித்து
ஆ வகை காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

எல்லா வகைத் தேவர்களையும் விளக்கம் செய்விக்கும் புற அமுதம் என்னும் சுத்தாமுத மழை பொழிவிக்கும்படிச் செய்து அதன் மூலம் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

376 அகப்புற அமுது அளித்து ஐவர் ஆதிகளை
அகப்படக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

பிரம்மன், விஷ்ணு, உருத்திரன், மயேச்சுரன், சதாசிவன் என்னும் ஐந்தொழில் செய்யும் கர்த்தர்களை அகப்புற அமுதம் என்னும் யோகாமுதம், புவனாமுதம், மண்டலாமுதம், இரகசியாமுதம், மௌனாமுதம் முதலியவை கிடைக்கும்படிச் செய்து காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

377 தரும் அக அமுதால் சத்தி சத்தர்களை
அருளினில் காக்கும் அருட்பெருஞ் ஜோதி

மெய்ஞ்ஞானம் என்னும் அருள் அமுதம் ஆகிய அக அமுத நிலையினால் இறைவனின் திருச் சமுகத்தில் பணி புரியும் சத்தி சத்தர்களைக் கருணையினால் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!



***உயிர்த் தொகுதிகளை மேலும் காப்பாற்றும் வகை***

378 காலமும் நியதியும் காட்டி எவ் வுயிரையும்
ஆலுறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

உயிர்களுக்குப் பக்குவம் வரும் பொருட்டு எவ்வுயிரையும் அவ்வெற்றிக்கேற்ப தனு கரண புவன போகங்களைத் தன் அருள் சக்தியின் நியதிப்படியும் எத்தனை காலம் அவை வாழ வேண்டும் என்னும் வரையறையின்படியும் காத்து அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

379 விச்சையை இச்சையை விளைவித்து உயிர்களை
அச்சு அறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

வித்தை என்னும் அறிவு வளர்ச்சியையும், இச்சை என்னும் விருப்ப முயற்சியையும் உண்டாக்கித் தந்து உயிர்த் தொகுதிகளின் மல ஆற்றல் நீங்கக் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

380 போகமும் களிப்பும் பொருந்துவித்து உயிர்களை
ஆகம் உள் காக்கும் அருட்பெருஞ் ஜோதி

இன்பம் அடைவதற்கு வழியும் இன்பம் அடைவதற்குத் துணையும் ஆகிப் பொருத்தமுறச் செய்வித்து உயிர்த் தொகுதிகளை உள்ளும் புறமும் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

381 கலை அறிவு அளித்துக் களிப்பினில் உயிர் எலாம்
அலைவு அறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

ஞானம் பிரகாசிக்கின்ற வித்தியா தத்துவக் கலை விளக்கத்தைத் தந்து அதன் வழி எல்லா உயிர்த் தொகுதிகளையும் துன்ப அலைவு நீங்கி இன்பம் அனுபவிக்கச் செய்து காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

382 விடய நிகழ்ச்சியால் மிகும் உயிர் அனைத்தையும்
அடைவு உறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

ஐம்புல வேட்கையால் எழும் மண், பெண், பொன் முதலிய

விருப்ப முயற்சியால் அலைகின்ற உயிர் அனைத்தையும் அமைதி பெறுமாறு காத்தருளும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

383 துன்பு அளித்து ஆங்கே சுகம் அளித்து உயிர்களை
அன்பு உறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

மாயையின் கலப்பினால் துன்பம் தந்து, மாயையின் நீக்கத்தால் இன்பம் தந்து உயிர்க் கூட்டங்களை அன்பு பொருந்தக் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

384 கரணேந் தியத்தால் களிப்பு உற உயிர்களை
அரண்நேர்ந்து அளித்துஅருள் அருட்பெருஞ் ஜோதி

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் உள் கருவிகளாலும்; மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புறக் கருவிகளாலும் உயிர்த் தொகுதிகள் இன்பம் அடையப் பாதுகாவலுடன் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

385 எத்தகை எவ்வுயிர் எண்ணின அவ்வுயிர்க்கு
அத்தகை அளித்து அருள் அருட்பெருஞ் ஜோதி

எந்தத் தன்மையால் எந்த உயிர்கள் எவ்வாறு நினைத்தனவோ அந்தத் தன்மையால் அந்த உயிர்கள் இன்பம் அடையும்படிக் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

386 எப்படி எவ்வுயிர் எண்ணின அவ்வுயிர்க்கு
அப்படி அளித்து அருள் அருட்பெருஞ் ஜோதி

எந்த வகையால் எந்த உயிர்கள் எப்படி நினைத்தனவோ அந்த வகையால் அந்த உயிர்கள் இன்பம் அடையும்படிக் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

387 ஏங்காது உயிர்த்திரள் எங்கு எங்கு இருந்தன
ஆங்குஆங்கு அளித்து அருள் அருட்பெருஞ் ஜோதி

இன்பம் அடைவதற்கு என்று ஏக்கம் அடையாமல் இயல்பு நிலைப்படி எங்கெங்கே எந்தெந்த உயிர்த் தொகுதிகள்



வாழ்கின்றனவோ அங்கங்கே அந்தந்த உயிர்கள் இன்பம் அடையும்படிக் காப்பற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

388 சொல்லுறும் அசுத்தத் தொல்லுயிர்க்கு அவ்வகை
அல்லலில் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

இயல்பாகவே ஆணவ மலத்தைப் பற்றியிருக்கின்றன என்று சொல்லப்படுகின்ற பழமையான உயிர்கட்கு அவ்வகையாகவே அல்லலால் காத்தருள் செய்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

389 சுத்தமும் அசுத்தமும் தோய் உயிர்க்கு இருமையின்
அத்தகை காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

மலம் விரவாத சுத்த மாயா புவனத் தத்துவங்களாகிய சுத்தாசுத்த, அசுத்த மாயா புவனத் தத்துவங்களாகிய வித்யா தத்துவங்களும், ஆன்ம தத்துவங்களும் கலந்திருக்கின்ற உயிர்க்கு அவ்விரு தத்துவச் செயல்பாடுகளினின்று அவ்வவ்வாறு காத்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

390 வாய்ந்திடும் சுத்த வகை உயிர்க்கு ஒருமையின்
ஆய்ந்து உறக் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

மலம் நீங்கிச் சுத்தநிலை அடைந்திடும் உயிர்த் தொகுதிகட்கு ஒருமையின்பமாகிய பேரின்பத்தை மட்டும் அனுபவித்திட ஆய்வுடன் காத்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

391 எவை எலாம் எவை எலாம் ஈண்டின ஈண்டின
அவை எலாம் காத்து அருள் அருட்பெருஞ் ஜோதி

எவ்வகை உயிர்க் கூட்டங்கள் எல்லாம், எவ்வகை உயிர்க் கூட்டங்கள் எல்லாம், மாயையினின்று விடுபட முயல்கின்றனவோ மாயை யினின்று விடுபட முயல்கின்றனவோ அவ்வகை முயற்சியுடைய உயிர்க் கூட்டங்கள் யாவற்றையும் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

**அடக்கல் (அழித்தல்) தொழில் விளங்கும் வகை**

392 அண்டத் துரிசையும் அகிலத் துரிசையும்
அண்டுஅற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

உயிர்த் தொகுதிகளுக்குச் சுகம் விளைவிப்பதற்காக என்றே அண்டங்களில் நேரிடும் சோம சூரிய அக்னியின் குறைபாடுகளையும் உலகங்களில் நேரிடும் உற்பாதங்கள் முதலிய குறைபாடுகளையும் தொடராதபடி முழுவதும் நீக்கி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

393 பிண்டத் துரிசையும் பேருயிர்த் துரிசையும்
அண்டுஅற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

நால்வகைத் தோற்றம் அறுவகை அறிவு எழுவகைப் பிறப்புகளுக்கு உட்படும் உயிர்க்கூட்டங்களின் பசி, பிணி முதலிய ஆபத்துக்களையும் பக்குவம் அடைந்த மானுட உயிர்களின் ஆணவம், கன்மம், மாயை என்னும் மலக்குறைகளையும் தொடராதபடி முற்றிலும் நீக்கியருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

394 உயிர்உறு மாயையின் உறுவிரிவு அனைத்தும்
அயிர்அற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

மானுட உயிர்கள்பால் நேரிட்டுள்ள மறைப்பாற்றல் என்னும் திரோதானம், மகா மாயையின் மறைப்புகளாகிய குறைகள் யாவற்றையும் சிறிதும் தலையெடுக்கச் செய்யாமல் நீக்கி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

395 உயிர்உறும் இருவினை உறுவிரிவு அனைத்தும்
அயர்வுஅற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

மானுட உயிர்களின்பால் பொருந்தும் நல்வினை தீவினையின் விளைவுகளாகிய சஞ்சிதம், ஆகாமியம், பிரார்த்த அனுபவங்களாகிற விரிவுகள் யாவற்றையும் தளர்வின்றி நீக்கி அருள்கின்ற எம் அருட் பெருஞ் ஜோதியே!



396 காமப்புடைப்பு உயிர் கண்தொடரா வகை
ஆம்அற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

தாமச குணத்தால் எழும் முறையற்ற ஆசையாகிய காமம் என்கின்ற உட்பகையின் விரிவுகள் உயிர்களினிடத்துத் தொடர்ந்து துன்பம் தராதபடி மெய்யாகவே முழுமையும் நீக்கியருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

397 பொங்குறு வெகுளிப் புடைப்புகள் எல்லாம்
அங்கு அற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

மேன்மேலும் பொங்கி எழுகின்ற கோபம், வெகுளி, சினம் ஆகிய கொடிய எழுச்சிகள் யாவற்றையும் அவ்வப்பொழுதே முற்றிலும் நீக்கியருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

398 மதம்புரை மோகமும் மற்றவும் ஆங்காங்கு
அதம்பெற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

ஒரு பொருளை வசப்படுத்த எழுகின்ற முனைப்புப் போன்ற மோகத்தினையும் மற்றைய தாமசம், உலோபம் ஆகியவற்றையும் அவ்வப்போதே முற்றும் நாசம் அடையும்படி நீக்கியருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

399 வடுஉறும் அசுத்த வாதனை அனைத்தையும்
அடர்புஅற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

களங்கத்தை உண்டாக்கி வைக்கும் அசுத்த மாயையினால் உண்டாகும் துன்பங்கள், பிறவிப் பெரும் அலைவுகள் யாவற்றையும் பற்றற நீக்கி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

400 சுத்தமும் அசுத்தமும் தோய்ந்த வாதனைகளை
அத்தகை அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

சுத்தமும் அசுத்தமும் கலந்த மாயையின் தொடர்பினால் உண்டாகும் சூக்குமப் பிறவி அலைவுகள் யாவற்றையும் அவ்வப்பொழுதே நீக்கியருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

401 நால்வயின் துரிசும் நண்ணுஉயிர் ஆதியில்
ஆலற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

கருப்பையில் தோன்றுதல், முட்டையில் தோன்றுதல், அழுக்குகளில் தோன்றுதல், பூமியில் தோன்றுதல் என்று பொருந்திய நான்கு வகைப்பட்ட உயிர்களின் குற்றங் குறைகளையும் கூடத் தொடக்க முதலாக முற்றிலும் நீக்கியருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

402 நால்வயிற் படைப்பும் நால்வயிற் காப்பும்
ஆலற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

மேற்கூறிய நான்கு வகைப்பட்ட உயிர்களைச் சிருட்டித்த போதும், காப்பாற்றுகின்ற போதும் உண்டாகி விடுகின்ற குற்றம் குறைகளையும்கூட முற்றிலும் நீக்கியருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

403 மூவிடத்து இருமையின் முன்னிய தொழில்களில்
ஆவிடத்து அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

உயிர்கள் அனுபவிக்கும்இம்மை இன்பம் மறுமை இன்பம் எனும் இருவகையாக எண்ணப்பட்ட இன்பச் செயற்பாடுகளின் இடையில் உண்டாகும் குற்றம் குறைகளையும் கூட மண்ணுலகு, விண்ணுலகு, நரகர் உலகு ஆகிய மூவிடத்தி லிருந்து நீக்கி அருள்கின்ற எம் அருட் பெருஞ் ஜோதியே!

404 மூவிடம் மும்மையின் முன்னிய தொழில்களில்
ஆவிடம் அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

மண், விண், நரகம் ஆகிய மூன்று உலகங்களில் இம்மை இன்பம், மறுமை இன்பம், பேரின்பம் அனுபவிக்கும் உயிர்க்கூட்டங்கள் எண்ணிச் செய்யும் செயற்பாடுகளால் உண்டாகும் குற்றங் குறைகளையும் அவ்வவ்விடங்களில் இருந்து நீக்கி அருள்கின்ற எம் அருட் பெருஞ் ஜோதியே!

405 தத்துவச் சேட்டையும் தத்துவத் துரிசும்
அத்தகை அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

முப்பத்தாறு, தொண்ணூற்றாறாகி விரிந்த தூல சூக்கும காரண



தத்துவங்களின் அலைவுகளையும் அந்தந்தத் தத்துவங்களில் உண்டாகும் குற்றங் குறைகளையும் அருள் நியதியின்படி நீக்கியருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

406 சுத்த மா நிலையில் சூழுறு விரிவை
அத்தகை அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

சுத்த மாயையினால் இயங்கும் நிலையில் உண்டாகும் வியாபகத் தன்மையாம் குறையையும் நீக்கி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

*மறைத்தல் தொழில் விளங்கும் வகை**

407 கரைவின் மா மாயைக் கரும் பெரும் திரையால்
அரைசது மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

அளவிட முடியாத அசுத்த மா மாயை என்னும் கரிய பெரிய நிறமுடைய மறைப்பாற்றல் மூலம் திருவருளாட்சியின் மேன்மை நிலையை அறியப் பக்குவப்படுத்தும் எம் அருட் பெருஞ் ஜோதியே!

408 பேர் உறு நீலப் பெரும்திரை அதனால்
ஆர்உயிர் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

பெரும் பெயர் பெற்ற நீல நிறமுடைய அசுத்தா சுத்த மாயை என்னும் மறைப்பாற்றல் மூலம் ஆன்மப் பிரகாசத்தை அறியப் பக்குவப்படுத்தும் எம் அருட் பெருஞ் ஜோதியே!

409 பச்சைத் திரையால் பரவெளி அதனை
அச்சுற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

பச்சை நிறமுடைய சுத்த மாயை என்னும் மறைப்பு ஆற்றலி னால் பரவெளியாம் விளக்கத்தை அறியப் பக்குவப்படுத்தி உயிருடன் பொருந்தி மறைத்தருள்கின்ற எம் அருட் பெருஞ் ஜோதியே!

410 செம்மைத் திரையால் சித்துஉறு வெளியை
அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

செம்மை நிறமுடைய சுத்த மாயை யாகிய பராசக்தி என்னும்

* உயிர்கட்கு நேரும் இம் மறைப்பு நிலைகள் யாவும் அவற்றிற்குப் பக்குவம் வருவிக்கும் பொருட்டேயாம்

மறைப்பு ஆற்றலினால் மெய்ஞ்ஞான விளக்கத்தை அறிந்திட முற்பிறவி முதலாகப் பக்குவப்படுத்தி அருள்கின்ற எம் அருட் பெருஞ் ஜோதியே!

411 பொன்மைத் திரையால் பொருள்உறு வெளியை
அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

பொன்மை நிறமுடைய திரோதான மாயை என்னும் மறைப்பு ஆற்றலினால் அருள் விளக்கமாகும் வெளியினை அறிந்திடப் பக்குவப்படுத்தி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

412 வெண்மைத் திரையால் மெய்ப்பதி வெளியை
அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

வெண்மை நிறமுடைய மகாமாயை என்னும் மறைப்பாற்றலினால் சிவ சுகாதீத வெளியை அறிந்திடப் பக்குவப்படுத்தி அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

413 கலப்புத் திரையால் கருது அனுபவங்களை
அலப்புஉற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

அசுத்தமாயை, அசுத்தா சுத்த மாயை, சுத்த மாயை என்னும் மறைப்பாற்றல்கள் ஒன்றுடன் ஒன்று கலந்திடுவதனால் உயிர் அனுபவம், அருள் அனுபவம், சிவ அனுபவங்களை அலைவுறும்படி மறைக்கின்ற மறைப்பைப் பக்குவப்படுத்தி அருள்கின்ற எம் அருட் பெருஞ் ஜோதியே!

414 விடய நிலைகளை வெவ்வேறு திரைகளால்
அடர்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

மண் ஆசை, பொன்னாசை, பெண்ணாசைகளை இச்சா சக்தி என்னும் மறைப்பாற்றலினால் உண்டாகும்படித் தொடர்பு படுத்திப் பக்குவமாக்கிடும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

415 தத்துவ நிலைகளைத் தனித்தனித் திரையால்
அத்திறம் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

ஆன்ம தத்துவம் 24, வித்தியா தத்துவம் 7, சிவதத்துவம் 5,



ஆதிசக்தி முதலிய மறைப்பாற்றலினால் மறைத்தருள்கின்ற மறைப்பைப் பக்குவப்படுத்தும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

***அருளல் தொழில் விளங்கும் வகை***

416 திரை மறைப்பு எல்லாம் தீர்த்து ஆங்காங்கே
அரைசுறக் காட்டும் அருட்பெருஞ் ஜோதி

அசுத்த மாயை, அசுத்தா சுத்த மாயை, சுத்த மாயை என்னும் சக்திகளைக் கொண்டு ஆன்ம விளக்கத்தை மறைத்த மறைப்புகள் யாவும் நீக்கி வளர்ச்சிக்கு ஏற்ப அவ்வவ் இடத்தில் அருள் பேற்றைக் காண்பித்தருளும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

417 தோற்றமா மாயைத் தொடர்பு அறுத்து அருளின்
ஆற்றலைக் காட்டும் அருட்பெருஞ் ஜோதி

அடியவர்கட்கு அசுத்த, சுத்தாசுத்த மாயையின் தளையினை நீக்கிப் பேர் அருட்பாங்கின் வலிமையைக் காட்டி அருள்கின்ற எம் அருட் பெருஞ் ஜோதியே!

418 சுத்த மா மாயைத் தொடர்பு அறுத்து அருளை
அத்தகை காட்டும் அருட்பெருஞ் ஜோதி

ஆன்ம, வித்தியா தத்துவங்களைக் கடந்து மேம்பட்ட அன்பர்கட்கு சுத்த மகா மாயை என்னும் தளையினை நீக்கி பேரருள் பாங்கினை அங்கைக் கனிபோலக் காண்பித் தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

419 எனைத்து ஆணவம் முதல் எல்லாம் தவிர்த்தே
அனுக்கிரகம் புரி அருட்பெருஞ் ஜோதி

எவ்வகையிலும் வலிவுடையதாகிய ஆணவ மலம், கன்ம மலம், மாயா மலம் ஆகிய மூவகை மலங்களையும் நீக்கியருள்வதுடன் திரோதானம், மகாமாயை என்னும் இருவகைத் தகுமாயைகளையும் நீக்கி அருள்பாலிக்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

420 விடய மறைப்பு எலாம் விடுவித்து உயிர்களை
அடைவு உறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

ஐம்புல வேட்கைகளால் உண்டாகும் மண் விஷய இச்சை, பொன் விஷய இச்சை, பெண் விஷய இச்சைகளில் தோய்வுகள் எல்லாவற்றையும் நீங்கும்படிச் செய்தருளி உயிர்த் தொகுதிகளினிடத்து நெருக்கமாகி நின்று பரிபாகம் வருவித்து அருள்பாலிக்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

421 சொருப மறைப்பு எலாம் தொலைப்பித்து உயிர்களை
அருளினில் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

காமம், குரோதம், மதம், மாச்சரியம், உலோபம், அகங்காரம், கோபம், மோகம், தாமதம் முதலிய தற்போத முனைப்பு எனும் செருக்குகள் யாவும் உள்ளத்திலிருந்து அழிவுறும்படிச் செய்து உயிர்த் தொகுதிகளுக்குக் கருணை கூர்ந்து அனுக்கிரகம் செய்தருளும் எம் அருட் பெருஞ் ஜோதியே!

422 மறைப்பின் மறந்தன வருவித்து ஆங்கே
அறத்தொடு தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

மலம், மாயை, மறைப்புகளால் மறந்தொழிந்த இயல்புத் தன்மைகளாகின்ற தலைவன்பால் பேரன்பும், உயிர்கள்பால் ஜீவகாருண்யப் பேரறமும் பூணும்படிச் செய்து அனுக்கிரகம் செய்தருள்கின்ற எம் அருட் பெருஞ் ஜோதியே!

423 எவ்வகை உயிர்களும் இன்புஉற ஆங்கே
அவ்வகை தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

இம்மை உலக உயிர்களும், மறுமை உலக உயிர்களும், ஒருமை என்னும் பேரின்ப உலகுக்குரிய உயிர்களும் பேரின்ப வளர்ச்சியினை முழுமையும் அடையும்படி அவ்வவ் வகை நிலைகளிலும் விளங்கிப் பரிபாகத் தன்மைக்கேற்பப் பக்குவப்படுத்தி அனுக்கிரகம் செய்தருளும் எம் அருட் பெருஞ் ஜோதியே!



424 கடவுளர் மறைப்பைக் கடிந்தவர்க்கு இன்பம்
அடை உறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

மூவகைத் தொழில் புரிபவர்கள், ஐவகைத் தொழில் புரிபவர்கள் ஆகியோர்கட்கு மலம், மாயை என்னும் தளைகளை நீக்கி அத்தகைய மூர்த்திகட்கும் பேரின்ப நிலையில் வேட்கை அடையும்படி அனுக்கிரகம் செய்யும் எம் அருட் பெருஞ் ஜோதியே!

425 சத்திகள் மறைப்பைத் தவிர்த்தவர்க்கு இன்பம்
அத்துறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

விந்து சத்திகள், பரவிந்து சத்திகள் மற்றைய சத்திகள் முதலான சத்திகட்கும்கூட உண்டாகி மறைக்கின்ற மலம் மாயைத் தளையினை நீக்கி அத்தகையோரும் பேரின்பப் பாங்கினை அடையும்படி அனுக்கிரகம் செய்தருளும் எம் அருட் பெருஞ் ஜோதியே!

426 சத்தர்கள் மறைப்பைத் தவிர்த்தவர்க்கு இன்பம்
அத்தகை தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

நாத சத்தர்கள், பரநாத சத்தர்கள், மற்றைய சத்தர்கள் முதலிய சத்தர்கட்கும் உண்டாகி அலைவுபடுத்தும் மலம் மாயை என்னும் மறைப்பாற்றலை நீக்கி அத்தகையோரும் பேரின்ப நிலைக்கு ஆளாக அனுக்கிரகம் செய்யும் எம் அருட் பெருஞ் ஜோதியே!

### *ஐந்தொழில் கடவுளரை ஐந்தொழில்புரியும் வகை*

427 படைக்கும் தலைவர்கள் பற்பல கோடியை
அடைப்பு உறப் படைக்கும் அருட்பெருஞ் ஜோதி

உலகம் படைத்தல், ஞானம் படைத்தல் ஆகிய சிருட்டித் தொழில் செய்யும் கடவுளர்கள் பலப்பலவாகி விளங்கும் கோடிக் கணக்கானவர்களையும் பேரின்ப எல்லை காண்பதற் கெனச் சிருட்டித்து அருள்கின்ற எம் அருட் பெருஞ் ஜோதியே!

428 காக்கும் தலைவர்கள் கணக்குஇல் பல் கோடியை
ஆக்குறக் காக்கும் அருட்பெருஞ் ஜோதி

உலகம், உலகுயிர்க் காத்தல், உயிர்களுக்கு ஞானம் காத்தல் ஆகிய காத்தல் தொழில் செய்யும் கடவுளர்களைப் பேரின்ப நிலை காண்பதற்கெனக் காப்பாற்றி அருள்கின்ற எம் அருட் பெருஞ் ஜோதியே!

429 அடக்கும் தலைவர்கள் அளவுஇலர் தம்மையும்
அடர்ப்பு அற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

உலகத் துரிசு நீக்குதல், ஞானத் துரிசு நீக்குதல் என்னும் அடக்கும் தொழில் புரிகின்ற கோடிக் கணக்கானவர்களைப் பேரின்ப சீர்மை பெற அவர்களிடத்தும் துரிசு நீக்கும் அடக்குதல் தொழிலைச் செய்து அருள்கின்ற எம் அருட் பெருஞ் ஜோதியே!

430 மறைக்கும் தலைவர்கள் வகை பல கோடியை
அறத்தொடு மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

பக்குவமிலா ஆன்மாக்களுக்கு இறைவனையும் உலகியல் விளக்கத்தையும் பக்குவம் வருவித்தற்காக மறைத்தல் தொழிலைப் புரிகின்ற கோடிக்கணக்கான கடவுளர்களிடத்தும் பேரின்பப் பக்குவம் வருவிக்க அருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

431 தெருட்டும் தலைவர்கள் சேர் பல கோடியை
அருள்திறம் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

உலகினிடத்தும் உலக உயிர்களின் ஞானத்திடத்தும் பரிபாகப் பயனைத் தரும் அனுக்கிரகத் தொழிலைச் செய்கின்ற பலகோடிக் கணக்கான கடவுளர்களிடத்துப் பரிபாகம் செய்தருளிப் பேரின்ப நிலையினை அனுக்கிரகம் செய்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

432 ஐந்தொழில் ஆதிசெய்ஐவர் ஆதிகளை
ஐந்தொழில்ஆதிசெய் அருட்பெருஞ் ஜோதி

பிரகிருதி பட்சம், அணு பட்சம், பரமாணு பட்சம், விபு பட்சம், சம்பு பட்சம் எனச் சொல்லப்படும் ஐந்து பட்சங்களிலும் ஐந்தொழில் செய்கின்ற இருபத்தைந்தாகி விரிந்த ஐந்தொழில் கடவுளர்கள் கோடானு கோடியாகி விரியும் அனைவரையும் ஐந்தொழில் செய்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!



433 இறந்தவர் எல்லாம் எழுந்திட உலகில்
அறம் தலை அளித்த அருட்பெருஞ் ஜோதி

இம்மை உலகிலும் மறுமை உலகிலும் இறந்து போனவர்கள் யாவரையும் மீளவும் உடனுக்குடன் தேகம் பெற்று வரும்படியான முதன்மையாகிய அருள் அறத்தினை எனக்கு அளித்து அருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

434 செத்தவர் எல்லாம் சிரித்தாங்கு எழுதிறல்
அத்தகை காட்டிய அருட்பெருஞ் ஜோதி

இம்மை மறுமை உலகங்களில் செத்துப்போன யாவரையும் உடனுக்குடன் தேகம் பெற்றிட புன்முறுவல் செய்து எழுப்பும் முதன்மை அறத்தொழிலை எனக்குக் காட்டியருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

435 இறந்தவர் எழுக என்று எண்ணியாங்கு எழுப்பிட
அறம்துணை எனக்கு அருள் அருட்பெருஞ் ஜோதி

இம்மை மறுமை உலக போகங்களில் இறந்துபோன சிற்றுயிர்கள் முதல் பேருயிர்கள் வரை நினைத்தபோதே ஆங்காங்கே தேகம் பெற்று எழுப்பும் ஒப்பற்ற அருள் அறத்தினை எனக்கு ஈந்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

436 செத்தவர் எழுக எனச் செப்பியாங்கு எழுப்பிட
அத்திறல் எனக்கு அருள் அருட்பெருஞ் ஜோதி

இம்மை மறுமை இடங்களில் செத்துப் போனவர்களை உடல் பெற்று மீள எழுந்திடுக எனச் சொல்லிய உடனே எழுந்திடச் செய்யும் அற்புத அருள் ஆற்றலை முதன் முதலில் எனக்கு ஈந்தருளிய எம் அருட்பெருஞ் ஜோதியே!

437 சித்து எலாம் வல்ல திறல் அளித்து எனக்கே
அத்தன் என்று ஓங்கும் அருட்பெருஞ் ஜோதி

எல்லாம் வல்ல சித்திப் பேராற்றலை எனக்கே ஈந்தருளி எம்

தலைவன் (தந்தை) என விளங்குகின்ற எம் அருட்பெருஞ் ஜோதியே!

***ஒன்றே தெய்வமாய் விளங்கும் வகை***

438 ஒன்று அது, இரண்டு அது, ஒன்றின் இரண்டுஅது,
ஒன்றினுள் ஒன்று அது, ஒன்று எனும் ஒன்றே

தெய்வம் ஒன்று; அருளுடன் இரண்டு; ஒன்றான தெய்வத்தில் அருளும் உயிர்களும் ஆக இரண்டு; ஒன்றாகிய தெய்வத்தின் அனுபவ நிலை சுத்தசிவ துரியாதீதம். அச் சுத்தசிவ துரியாதீத அனுபவப் பொருளாய் என்றும் விளங்கும் எம் அருட்பெருஞ் ஜோதியே!

439 ஒன்று அல, இரண்டு அல, ஒன்றின் இரண்டு அல,
ஒன்றினுள் ஒன்று அல, ஒன்று எனும் ஒன்றே

தெய்வம் ஒன்று எனச் சுட்டப்படும் நிலையுமல்ல; அருளுடன் இரண்டு என்று சுட்டப்படும் நிலையுமல்ல; ஒன்றான தெய்வத்தில் அருளும் உயிர்களும் ஆக இரண்டுமல்ல; ஒன்றான தெய்வ அனுபவமாகிய சுத்தசிவ துரியாதீத அனுபவமும் அல்ல என்று மேலோரால் துதிக்கப்படும் ஒன்றாகிய சுத்த சிவம் என்னும் ஒன்றாகிய (அருட்பெருஞ்) ஜோதியே!

440 ஒன்றினுள் ஒன்று உள, ஒன்றினுள் ஒன்று இல,
ஒன்று அற ஒன்றிய ஒன்று எனும் ஒன்றே

ஒன்றாகிய சுத்தசிவ நிலையில் சுத்தசிவ துரியாதீத நிலை என்னும் முடிவான அனுபவம் ஒன்றுள்ளது. அச்சுத்த சிவ நிலையின் முடிந்த அனுபவம் ஒன்றாக மட்டும் அல்ல, சுத்த சிவ சாக்கிரம் முதலாகச் சுத்த சிவ துரியம் முடிவாக உள்ளது. அச் சுத்தசிவ துரியாதீத முடிந்த அனுபவ நிலையாகிய ஒரு நிலையுடன் ஒன்றிக் கலந்த ஆன்மாவையும் சுத்தசிவமாக்கித் தந்த ஒரு பெரும் நிலையே!

***மெய்ப்பொருள் விளங்கும் வகை***

441 களங்கம் நீத்து உலகம் களிப்புஉற மெய்ந்நெறி
விளங்க என்உள்ளே விளங்கு மெய்ப்பொருளே

மல இருள், மாயை இருள், வினை இருள் முதலியவற்றை நீக்கி உலகத்து உயிர்கள் மகிழ்வடைய மெய்ம்மையான நெறியாகிய சமரச சுத்த சன்மார்க்க சத்தியம் ஓங்கிட என்றே என் அகத்தே பிரகாசிக்கும் அழியாத பொருளே!



442 மூவிரு நிலையின் முடிநடு முடிமேல்
ஓவற விளங்கும் ஒருமை மெய்ப்பொருளே

வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் என்னும் ஆறந்த அனுபவ நிலையின் முடிபுகளே அடிநிலையாக அதன் மேலும் நடுவாக, அதன் மேலும் முடிவாக ஒழிவின்றிப் பிரகாசிக்கும் பேரின்பப் பொருளே!

443 எழுநிலை மிசையே இன்பு உருவாகி
வழுநிலை நீக்கி வயங்கு மெய்ப்பொருளே

ஆன்ம தரிசனம், பரை தரிசனம், தற்போத ஒழிவு, பரையோக நிலை, அருள் தரிசனம், பரையோக நீக்க நிலை, இன்பப் பேறு என்னும் ஏழுவகை நிலைகளின் மேலாகியும் பேரின்ப உருவாகியும் உயிர்க் கூட்டங்களின் குற்றம் குறைகளை நீக்கி ஓங்கும் அழியாப் பொருளே!

444 நவநிலை மிசையே நடுவுறு நடுவே
சிவமயம் ஆகித் திகழ்ந்த மெய்ப்பொருளே

பிரமன் நிலை, விஷ்ணு நிலை, உருத்திர நிலை, மகேச்சுர நிலை, சதாசிவ நிலை, விந்து நிலை, நாத நிலை, பரவிந்து நிலை, பரநாத நிலை என்னும் ஒன்பது அனுபவ நிலைகளுக்கும் மேலாகி விளங்கும் திருவருள் நிலையின் இடையில் (சிவ துரியாதீத மேனிலையில்) சுத்த சச்சிதானந்த மயமாகித் திகழ்கின்ற அழியாத பொருளே!

445 ஏகாதச நிலை யாது அதின் நடுவே
ஏகாதன மிசை இருந்த மெய்ப்பொருளே

பூதநிலை, கரணநிலை, பிரகிருதி நிலை, மோகினி நிலை, அசுத்த மாயா நிலை, அசுத்த மகா மாயா நிலை, சுத்த மாயா நிலை, சுத்த மகா மாயா நிலை, சர்வ மகா மாயா நிலை, குண்டலி நிலை, பிரணவ நிலை என்னும் பதினொரு

நிலைகட்கும் மேலாகிய அனுபவ நிலை எதுவோ அவ்வனுபவத்தின் இடையில் எட்ட ஒண்ணாப் பேரின்ப அனுபவ நிலையில் வீற்றிருந்தருளும் அழியாத பொருளே!

446 திரையோ தச நிலை சிவவெளி நடுவே
வரை ஓது அருசுக வாழ்க்கை மெய்ப்பொருளே

மேற்கூறிய பதினொரு நிலைகளுடன் மேலாகி ஒளிரும் பன்னிரண்டாம் நிலையாகிய பரிக்கிரகநிலை, பதிமூன்றாம் நிலை ஆகிய திருவருள் நிலையாகிய சுத்த சிவ வெளியின் நடுவில் அளவிட்டுக் கூறமுடியாத நிலைத்த பேரின்ப வாழ்வாகிய அழியாத பொருளே!

447 ஈர்எண் நிலைஎன இயம்பும் மேல்நிலையில்
பூரண சுகமாய்ப் பொருந்து மெய்ப்பொருளே

சுத்த சரியையில் சரியை முதலாகச் சுத்த ஞானத்தில் ஞானம் முடிவாகப் பதினாறு நிலைகள் என்று கூறப்படும் நிலைகட்கும் மேலான நிலையில் பரிபூரணமாகி, பேரின்பச் சுகமாய் பொருந்தும் அழியாத பொருளே!

448 எல்லா நிலைகளும் இசைந்து ஆங்காங்கே
எல்லாம் ஆகி இலங்கு மெய்ப்பொருளே

அறுநிலை, எழுநிலை, நவநிலை, ஏகாதச நிலை, திரையோதச நிலை, ஈரெண் நிலை மற்றும் பிறவகை நிலைகள் என்னும் எல்லா அனுபவ நிலைகளிலும் ஆங்காங்கே பொருந்தி விளங்கி அளவற்ற அனுபவ நிலைகளாகி விளங்கும் அழியாத பொருளே!

449 மனாதிகள் பொருந்தா வான்நடு வானாய்
அனாதி உண்மையதாய் அமர்ந்த மெய்ப்பொருளே

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவைகளால் நினைக் கவோ, விசாரிக்கவோ, தீர்மானிக்கவோ, அகங்கரிக்கவோ முடியாத சிதாகாசத்தில் அருள் வெளியாகி நின்று தொடக்கம் காணமுடியாத உண்மைப் பொருளாய் அமர்ந்த அழியாப் பொருளே!



450 தான் ஒரு தானாய்த் தானே தானாய்
ஊன் உயிர் விளக்கும் ஒரு தனிப் பொருளே

அருட்பெருஞ்ஜோதியே ஒப்பற்ற தனிப்பெருங்கருணையாகி அத் தனிப்பெருங்கருணையே நிகரற்ற அருட்பெருஞ் ஜோதியாகி எல்லா உடல்களையும் எல்லா உயிர்களையும் விளக்கம் செய்தருளும் ஒப்பற்ற மெய்ப் பொருளே!

451 அதுவினுள் அதுவாய் அதுவே அதுவாய்ப்
பொதுவினுள் நடிக்கும் பூரணப் பொருளே

அது என உரைக்கப்படும் ஒன்றான பரம்பொருளில் பரம்பரப் பொருளாய் அப்பரம்பரப் பொருளில் பராபரப் பொருளாய் அப்பராபரப் பொருளில் சுத்த மெய்ப்பொருளாய் உயிர்க்குலமாம் அம்பலத்தில் நடித்தருள்கின்ற பேரின்ப நிலையாகிய அழியாத பொருளே!

452 இயல்பினுள் இயல்பாய் இயல்பே இயல்பாய்
உயல் உற விளங்கும் ஒரு தனிப் பொருளே

பரிபூரண அனாதி இயற்கை உண்மையாய் அவ்வியற்கை உண்மையில் அனாதி இயற்கை விளக்கமாய் அவ்வனாதி இயற்கை விளக்கத்தில் அனாதி இயற்கை இன்பமாய்க் கருணை நன்முயற்சியுடன் மட்டும் பொருந்தி விளங்கும் ஒப்பற்ற அழியாத பொருளே!

453 அருவினுள் அருவாய் அருஅரு அருவாய்
உருவினுள் விளங்கும் ஒரு பரம் பொருளே

அருவ நிலைகளாகும் விந்து நிலையில் நாத நிலையாகி, அந்த நாத நிலையின்மேல் பரவிந்து நிலையாகி, அப்பரவிந்து நிலையின்மேல் பரநாத நிலையாகி மற்றும் பிரமன், விஷ்ணு, உருத்திரன், மயேச்சுரன் என்னும் உருவ நிலைகளிலும் விளங்குகின்ற ஒன்றேயான ஒப்பற்ற அழியாத வஸ்துவே!

454 அலகு இலாச் சித்தாய் அதுநிலை அதுவாய்
உலகெலாம் விளங்கும் ஒரு தனிப் பொருளே

அளவிட முடியாத பேரறிவு விளக்க நிலையாய், அப்பேரறிவு

விளக்க நிலையில் ஓங்கி ஒளிரும் அருட்பெருஞ் ஜோதியாய் எல்லா உலகங்களிலும் நிறைந்து விளங்குகின்ற ஒன்றேயான ஒப்பற்ற அழியாத வஸ்துவே!

455 பொருளினுள் பொருளாய் பொருளது பொருளாய்
ஒருமையின் விளங்கும் ஒரு தனிப் பொருளே

அழியாத வேதப்பரப்பிரமமாய் அத்துடன் அழியாத பரசிவப் பொருளாய் அத்துடன் அழியாத சச்சிதானந்தப் பொருளாய் என்றும் நிலைபேறுடைய சுத்தசிவ பொருளாகி அதன் வழியே ஒருமையாம் பேரின்பத்தினுள் முற்றும் விளங்கி ஓங்கும் ஒன்றேயான ஒப்பற்ற அழியாத வஸ்துவே!

456 ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழு
கோடியும் விளங்கக் குலவு மெய்ப்பொருளே

விளங்குகின்ற கரும சித்தி வகைகள் 647 கோடிகளும் ஓங்கும்படி அவற்றினூடே ஒளிரும் அழியாத வஸ்துவே!

457 கூட்டுறு சித்திகள் கோடி பல்கோடியும்
ஆட்டுற விளங்கும் அரும் பெரும் பொருளே

ஒன்றுபடும் அனுபவத்தால் ஓங்கிடும் நல் யோக சித்திப் பேறுகள் கோடானு கோடிகளும் ஓங்கி ஒளிரும்படி விளக்கம் செய்தருளும் அரியதான பெரியதான அழியாத வஸ்துவே!

458 அறிவுறு சித்திகள் அனந்தகோடிகளும்
பிறிவு அற விளக்கும் பெருந்தனிப் பொருளே

மெய்ஞ்ஞானம் உண்டாக்கும் அளவற்ற கோடிகளாகிய ஞான சித்திகள் யாவற்றிலும் ஒன்றுபட்டு ஒளிரும் உயரிய ஒப்பற்ற அழியாத வஸ்துவே!

459 வீடுகள் எல்லாம் விதிநெறி விளங்க
ஆடல் செய்தருளும் அரும்பெரும் பொருளே

ஆன்மாக்கள் வாழ்கின்ற வீடுகளாகிய எல்லா உடல்களிலும் அடியன், மகன், நேயன், தான் எனும் முறையான காருணிய



ஒழுக்கம் விளங்கிச் சிறக்க அருள் நடனம் செய்தருளுகின்ற அருட் பெரும் பொருளே!

460 பற்றுகள் எல்லாம் பதிநெறி விளங்க
உற்று அருள் ஆடல்செய் ஒருதனிப் பொருளே

உயிர்களின் இம்மை மறுமை ஒருமை வாழ்வு பற்றிய பற்றுகள் யாவும் சன்மார்க்கப் பெருங்கடவுள் வழியில் விளக்கம்பெற அருள்நடம் செய்தருளும் ஒப்பற்ற மெய்ப்பொருளே!

461 பரத்தினில் பரமே, பரத்தின் மேல் பரமே,
பரத்தினுள் பரமே, பரம் பரம் பரமே

மறுமையின் தலைவனே! மறுமைக்கும் மேம்பட்ட தலைவனே! மறுமைப் பயனைத் தரும் தலைவனே! மறுமையினாலும் போற்றப்பெறும் பரம்பரம் என்னும் சிவநிலையே!

462 பரம் பெறும் பரமே பரம் தரும் பரமே
பரம் பதம் பரமே பரம் சிதம்பரமே

மறுமைப்பேறு பெறும்படிச் செய்யும் தலைவனே! மறுமை இன்பம் ஈயும் தலைவனே! மறுமைப் பதங்களில் விளங்கும் தலைவனே! மறுமை நிலையால் போற்றப்படும் மெய்ஞான வெளியே!

463 பரம் புகழ் பரமே பரம் பகர் பரமே
பரம் சுக பரமே பரம் சிவ பரமே

மறுமைப் பதத்தோர் துதிக்கும் தலைவனே! மறுமை நிலையினோர் பாராட்டும் தலைவனே! மறுமையின் இன்பச் சுகமாகும் தலைவனே! மறுமையின் தலைவனான பரசிவ பரம்பொருளே!

464 பரம் கொள் சிற்பரமே பரம் செய் தற்பரமே
தரம் கொள் பொற்பரமே தனிப் பெரும் பரமே

மறுமையின் தகவினோர் புகழ ஒளிரும் மெய்ஞ்ஞானச் செல்வமே! மறுமை உலகம் மறுமை உடல்கள், மறுமை உடற்கருவிகள் மறுமை உயிர்கள் மறுமை இன்பம் ஆகியன செய்தருளும் அருள் தலைவனே! அம்மறுமை அருட்

பேற்றினை விளங்கச் செய்யும் சுத்த பரமே! அதன் காரண மாகும் ஒப்பற்ற பெருந்தகைமை சான்ற தனித்தலைவனே!

465 வரம் பராபரமே வணம் பராபரமே
பரம் பராபரமே பதம் பராபரமே

ஆசீர்வாதம் தந்திடும் மகோன்னதத் தலைவனே! பல்வகை வண்ணமாகி ஓங்கும் ஒப்பற்ற தலைவனே! ஒப்பற்றத் தலைமைக்கும் தலைமையேற்கும் பராபரத் தலைவனே! அப் பராபரப் பதத் தகுதியைப் புண்ணிய சீலர்களுக்கு வழங்கிடும் வள்ளலாம் தலைவனே!

*சிவபதம் விளங்கும் வகை*

466 சத்திய பதமே சத்துவ பதமே
நித்திய பதமே நிற்குண பதமே

சுத்த மெய்ம்மை நிலையே! சுத்த தயவாம் சாத்துவிக நிலையே! என்றும் அழிவுறா நிலையே! குணம் ஏதுமில்லாச் சிவ குண நிலையே!

467 தத்துவ பதமே தற்பத பதமே
சித்துறு பதமே சிற்சுக பதமே

பிரம தத்துவம், விஷ்ணு தத்துவம், உருத்திர தத்துவம், மயேச்சுர தத்துவம், சதாசிவ தத்துவம், விந்து தத்துவம், நாத தத்துவம், பரவிந்து தத்துவம், பரநாத தத்துவம் என்னும் நவநிலைகளில் விளங்கும் நன்னிலையே! நல்ல தத்பதபதமாம் அருட்சிவ நிலையே! மெய் அறிவுருவாய அற்புத நிலையே! சுத்த மெய்ஞ்ஞான விளக்கமாகும் இன்பப் பெரு நிலையே!

468 தம்பரம் பதமே தனிச் சுகம் பதமே
அம்பரம் பதமே அருட்பரம் பதமே

பரசிவ நிலையே! பரசிவசுக நிலையே! பரசிவமாகிய வானப் பெரு நிலையே! அப்பாலாகும் அருட் சிவமாய அற்புத நிலையே!

469 தந்திர பதமே சந்திர பதமே
மந்திர பதமே மந்தண பதமே

சிவ உபாய சிவ நிலையே! சிவசந்திரனாய சிவ நிலையே! மகா சிவ மந்திர நிலையே! மகா சிவ இரகசிய நிலையே!



470 நவம் தரு பதமே நடம் தரு பதமே
சிவம் தரு பதமே சிவசிவ பதமே

ஒன்பதாகும் கீழ் நவ நிலையே! அடுத்து ஒன்பதாகும் மேல் நவ நிலையே! ஆனந்த நடனம் அருள் நடனம் தரும் அற்புத அதிசய நிலையே! பரசிவ நிலைக்கருளும் பரிசுத்த சிவ நிலையே! சுத்த சிவமயம் என்னும் உத்தமோத்துவ நிலையே!

*சுத்த திருவருள் சிவம் விளங்கும் வகை*

471 பிரம மெய்க் கதியே பிரம மெய்ப் பதியே
பிரம நிர்க் குணமே பிரம சிற் குணமே

வேதங்களால் சிறப்பித்துக் கூறப்படும் சுத்த பிரமம் என்னும் உண்மைப் புகலிடமே! சுத்த பிரம்மம் என்னும் உண்மைத் தலைவனே! சுத்த பிரம்மம் என்னும் குணங்களற்ற நிலையே! சுத்த பிரம்மம் என்னும் மெய்யறிவாயாகிய தன்மையே!

472 பிரமமே பிரமப் பெருநிலை மிசை உறும்
பரமமே பரம பதம் தரும் சிவமே

சுத்த பிரம்மமே! சுத்த பிரம்மம் என்னும் உயரிய நிலைமீது பொருந்தும் பரம்பொருளே! அந்தப் பரசிவப் பேற்றினை வழங்கிடும் சுத்த சிவமே!

473 அவனோடு அவளாய் அதுவாய் அலவாய்
நவமா நிலைமிசை நண்ணிய சிவமே

ஆணாகியும், பெண்ணாகியும், அவையிரண்டும் அல்லாத அஃறிணையாகியும் விளங்குவதோடு, பிரமன் பீடம் முதலாக பரநாதபீடம் முடிவாக விளங்கும் ஒன்பது உயர்நிலைக்கும் அப்பால் ஓங்கிப் பொருந்திய சுத்த சிவ பரம்பொருளே!

474 எம்பொருள் ஆகி எமக்கு அருள்புரியும்
செம்பொருள் ஆகிய சிவமே சிவமே

எமது அருள் வாழ்வுக்குரிய மெய்ப் பொருளாகியும், எம் போன்றவர்கட்கும் கருணை வழங்கும் கடவுளுமாகியும் விளங்கும் சுத்த சிவ பரம்பொருளே! சுத்த சிவ பரம்பொருளே!

475 ஒருநிலை இதுவே உயர்நிலை எனும் ஒரு
திருநிலை மேவிய சிவமே சிவமே

சுத்தசிவ துரியாதீதப் பெருநிலைப் பேறுதான் ஒப்பற்ற பெரும் ஜோதி நிலைப்பேறு! அவ்வருட் ஜோதி நிலை எனும் முடிவான பெரும் பாக்கிய நிலையில் வந்து கலந்து கொண்ட சுத்த சிவ பரம் பொருளே!

476 மெய்வைத்து அழியா வெறு வெளி நடுவுறு
தெய்வப் பதியாம் சிவமே சிவமே

என்றும் சத்திய நிலை தன்னிடம் விளங்கும் படி வைத்து ஒருகாலும் நாசமடையாத சுத்த சிவ சுகாதீத வெளி நடுவில் பொருந்தி ஓங்கும் அருட்பெருஞ் ஜோதித் தலைவனாகிய சுத்த சிவ பரம்பொருளே! சுத்த சிவ பரம்பொருளே!

477 புரை தவிர்த்து எனக்கே பொன்முடி சூட்டிச்
சிரம் உற நாட்டிய சிவமே சிவமே

உயிரிடத்துப்பற்றும் காம வெகுளி மயக்கம் முதலிய பழுதுகளை நீக்கியதுடன், அருள் ஆட்சிக்கு எனத் தகுதி வாய்க்கும்படியும் செய்து, என்தனக்கு மட்டும் அழியா அருள் மகுடத்தைச் சூட்டி, என்தன் அருளாட்சி என்றும் எங்கும் ஓங்கி ஒளிரும்படி வைத்த சுத்த சிவ பரம்பொருளே! சுத்த சிவ பரம்பொருளே!

478 கல்வியும் சாகாக் கல்வியும் அழியாச்
செல்வமும் அளித்த சிவமே சிவமே

உலகியல் கல்வி ஞானமும், அழியா அருளியல் கல்வி ஞானமும் என்றும் நாசமடையாத திருவருட் செல்வமும், என் தனக்கே ஈந்தருளிய சுத்த சிவ பரம்பொருளே! சுத்த சிவ பரம்பொருளே!

479 அருளமுது எனக்கே அளித்து அருள்நெறிவாய்த்
தெருள் உற வளர்க்கும் சிவமே சிவமே

ஐவகை, எழுவகை, ஒன்பதுவகை அமுதங்களுக்கும் மேம்பட்ட கருணைத் திருவமுதத்தை எனக்கு மட்டுமே ஈந்து, திருவருட் செந்நெறியில் பரிபாக முற்றுத் தெளிவுடன் விளங்கிட என்னை



வளர்த்தருளும் சுத்த சிவபரம்பொருளே! சுத்த சிவ பரம்பொருளே!

480 சத்து எலாம் ஆகியும் தான்ஒரு தானாம்
சித்து எலாம் வல்லதோர் திருவருள் சிவமே

இயற்கை உண்மைப் பெருநிலை யாவுமாகியும், அவ்வியற்கை உண்மை நிலைக்கான தகுதியுடைய பெரும்பதி தான்ஒருவரேயாகியும், இயற்கை விளக்க வல்லபங்கள் யாவும் பொருந்திய ஒருவரேயாகிய சிவ பரம்பொருளே! சிவ பரம்பொருளே!

### *கொல்லா நெறிவிளங்கும் வகை*

481 எங்கே கருணை இயற்கையின் உள்ளன
அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே

இயல்பாக எவ்விடங்களில் எல்லாம் இரக்கச் செய்றபாடுகள் நடைபெறுகின்றனவோ அவ்விடங்களில் எல்லாம் ஓங்கிய பேரருட் பெருஞ் சிவ பரம்பொருளே!

482 யாரே என்னினும் இரங்குகின் றார்க்குச்
சீரே அளிக்கும் சிதம்பர சிவமே

எத்தகையவரே ஆயினும் ஜீவகாருண்யம் உடையவர்களாயின் அத்தகையோருக்கு அருள் செல்வம் ஈந்தருளும் உத்தர ஞான சிதம்பர சுத்த சிவ பரம்பொருளே!

483 பொய்ந்நெறி அனைத்தினும் புகுத்தாது, எனை அருட்
செந்நெறி செலுத்திய சிற்சபைச் சிவமே

சன்மார்க்கத்திற்குப் புறம்பான பொய்மை மார்க்கங்களில் யாதொன்றிலும் என்னைப் புகுத்திடாமல் கருணையாகிய நன்மார்க்கத்தில் நடப்பித்தருளிய உத்தர ஞான சிதம்பர சுத்த சிவ பரம்பொருளே!

484 கொல்லா நெறியே குருஅருள் நெறி எனப்
பல்கால் எனக்குப் பகர்ந்த மெய்ச்சிவமே

ஏதும் ஓர் உயிரினையும் ஏதும் ஓர் காரணம் குறித்தும் கொல்லாது வாழும் புண்ணியப் புனித வாழ்வு வழியே அருட்

சிவ குருவாழ்வின் வழி எனப் பல முறைகளிலும் எனக்குச் சொல்லியருளிய உத்தர ஞான சுத்த சிவ பரம்பொருளே!

485 உயிர்எலாம் பொதுவின் உளம்பட நோக்குக
செயிர்எலாம் விடுக, எனச் செப்பிய சிவமே

எல்லா உயிர்களும் கடவுள் நடமிடும் திருச்சபையெனத் தெளிந்து பேதமின்றித் தன் போல் நடத்தப்பார்த்திடுக! மற்று அதன் வழியே எல்லாத் துன்பங்களையும் கைவிடுக என எனக்குச் சொல்லியருளிய சுத்த சிவ பரம்பொருளே!

486 பயிர்ப்பு உறு கரணப் பரிசுகள் பற்பல
உயிர்த்திரள் ஒன்று என உரைத்த மெய்ச்சிவமே

அறிந்து உணர்வதற்குத் துணைபுரியும் அகப்புறக் கருவிகளோ பலப் பலவாகும். ஆயினும் எல்லா உயிர்க் கூட்டமும் ஆன்ம நிலையால் ஒற்றுமை உடையனவே ஆகும் என்று கூறியருளிய சுத்த சிவ பரம்பொருளே!

487 உயிருள் யாம், எம்முள் உயிர், இவை உணர்ந்தே
உயிர்நலம் பரவுக என்று உரைத்த மெய்ச்சிவமே

உயிர்த் தொகுதிகளுள் யாமே ஒளிர்கின்றோம்; எம்முள் உயிர்த் தொகுதிகள் ஒளிர்கின்றன; இந்த ஒருமைப்பாட்டினைத் தீர உணர்ந்து உயிர்த்தொகுதிகளின் நன்மையையே போற்றிப் பாடு என்று கூறியருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

488 இயல்அருள் ஒளிஓர் ஏகதேசத்தின் ஆம்
உயிர்ஒளி காண்க என்று உரைத்த மெய்ச்சிவமே

இயல்பாகிய அருட்பேரொளியின் ஒரு பகுதியே எல்லா உயிர்களிடமும் பொருந்தியுள்ள ஒளிநிலையாகும். அந்த ஒற்றுமை நிலையின் மூலம் அனைத்துயிரும் ஓர் உரிமையுள்ள சகோதரப் பொருளே என்பதனை அனுபவத்தில் கண்டு உணர்ந்திடுக எனக் கூறியருளிய சுத்த சிவ பரம்பொருளே!

***திருவருள் விளங்கும் வகை***

489 அருள் அலாது அணுவும் அசைந்திடாது அதனால்
அருள்நலம் பரவுக என்று அறைந்த மெய்ச்சிவமே

அருட்செயலன்றி ஓர் அணுகூட தன் நிலையில் சுழல முடியாது; ஆதலின் உயிர்நேய நன்மைக்கே முயன்று வழிபடுக என எனக்குத் தெரிவித்தருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!



490 அருள் உறின் எல்லாம் ஆகும் ஈது உண்மை
அருள் உற முயல்க என்று அருளிய சிவமே

அருள் நிலை பொருந்திடப் பெற்றால் எல்லாம் செயல்கூடும். இச்செய்தி மெய்ம்மையே! ஆதலின் உயிர்நேய உணர்வு எனும் உன்னத நிலை பெற்றிடவே முயற்சி செய்க எனத் தெரிவித்தருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

491 அருள்நெறி ஒன்றே தெருள்நெறி, மற்று எலாம்
இருள்நெறி என எனக்கு இயம்பிய சிவமே

கருணை வழி ஒன்றுதான் தெளிவுடைய வழி; மற்றைய வழிகள் எல்லாம் இருளுடைய வழிகளே என எளியேனுக்குத் தெரிவித்தருளிய சுத்த சிவ பரம்பொருளே!

492 அருள்பெறின் துரும்பும் ஓர் ஐந்தொழில் புரியும்
தெருள் இது எனவே செப்பிய சிவமே

கருணை வல்லபத்தைப் பெற்றுக்கொண்டால் கேவலம் சிறிய துரும்புகூட அருள் ஐந்தொழிலையும் செய்யும், இது தெளிவு என்றே செப்பியருளிய சுத்த சிவ பரம்பொருளே!

493 அருள் அறிவு ஒன்றே அறிவு மற்று எல்லாம்
மருள் அறிவு என்றே வகுத்த மெய்ச்சிவமே

கருணை வழி கிடைக்கும் ஞானம் ஒன்றுதான் மெய்ஞ்ஞானம். மற்றை வழி கிடைக்கும் ஞானமெல்லாம் அஞ்ஞானமே என வகைப்படுத்தி யருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

494 அருட்சுகம் ஒன்றே அரும்பெறல் பெருஞ்சுகம்
மருட்சுகம் பிற என வகுத்த மெய்ச்சிவமே

கருணைவழி அடையும் இன்பம் ஒன்றுதான் பெறுதற்கரிய பேரின்பம். மற்றை வழி அடையும் இன்பம் எல்லாம் மயக்கந்தரும் இன்பமே யாகும் என வகைப்படுத்தி யருளிய சுத்த சிவ பரம்பொருளே!

495 அருட்பேறு அதுவே அரும்பெறல் பெரும்பேறு
இருட்பேறு அறுக்கும் என்று இயம்பிய சிவமே

கருணை வழி கிடைக்கும் பாக்கியமே பெறுதற்கரிய பேரின்பப் பாக்கியம். அப்பாக்கியமே எல்லா இருள் நிலையையும் நீக்கியருளக் கூடியது என உரைத்தருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

496 அருள்தனி வல்லபம் அதுவே எலாம் செய்
பொருள் தனிச்சித்து எனப் புகன்ற மெய்ச்சிவமே

கருணை வழி கிடைக்கும் ஒப்பற்ற ஆற்றல்தான் யாவும் செய்திட வைக்கும் ஒப்பற்ற சித்தாற்றல், எனக் கூறிய யருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

497 அருள் அறியார் தமை அறியார், எம்மையும்
பொருள் அறியார் எனப் புகன்ற மெய்ச்சிவமே

கருணையின் மேன்மையை உணராதவர் தம் உயிரினது மேன்மையையும் உணராதவர்கள். அத்துடன் அருட்பெருஞ் ஜோதி யாகிய எம்மையும் உணராதவர்கள் என எனக்குச் சொல்லியருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

498 அருள்நிலை ஒன்றே அனைத்தும் பெறும் நிலை
பொருள்நிலை காண்க எனப் புகன்ற மெய்ச்சிவமே

கருணை வழி ஒன்றுதான் எல்லாப் பேறுகளையும் எய்துவிக்கும் மேல்நிலை. ஆதலின் அத்தகைய நிலையை உள்ளபடி உணர்ந்து அறிக என அறிவித்தருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

499 அருள்வடிவு அதுவே அழியாத் தனிவடிவு
அருள்பெற முயலுக என்று அருளிய சிவமே

கருணைத் திருமேனி ஒன்றே, என்றும் அழியாத் திருமேனி ஆதலின் அத்திருமேனியை அடைந்திட எவ்வாறாயினும் முயற்சி செய்திடுக எனத் தெரிவித்தருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!



500 அருளே நம்இயல், அருளே நம்உரு
அருளே நம்வடிவு ஆம் என்ற சிவமே

கருணை ஒன்றே நமது இயற்கை; கருணை ஒன்றே நமது திருமேனி; கருணை ஒன்றே நமது தோற்றம்; என்று தெரிவித்தருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

501 அருளே நம் அடி, அருளே நம் முடி,
அருளே நம் நடு ஆம் என்ற சிவமே

கருணைதான் நமது திருவடி. கருணைதான் நமது திருமுடி. கருணைதான் நமது திருநடு என்று தெரிவித்தருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

502 அருளே நம் அறிவு, அருளே நம் மனம்
அருளே நம் குணம், ஆம் என்ற சிவமே

கருணைதான் நமது மெய்யறிவு. கருணைதான் நமது திருவுளம். கருணைதான் நமது திருக்குணம் என்று தெரிவித்தருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

503 அருளே நம் பதி, அருளே நம் பதம்
அருளே நம் இடம், ஆம் என்ற சிவமே

கருணைதான் நமது திருத்தலம்; கருணைதான் நமது திருநிலை; கருணைதான் நமது திருச்சந்நிதி என்று தெரிவித்தருளிய சுத்த சிவ பரம்பொருளே!

504 அருளே நம் துணை, அருளே நம் தொழில்
அருளே நம் விருப்பு ஆம் என்ற சிவமே

கருணைதான் நமது திருத்துணை; கருணைதான் நமது திருச்செயல்; கருணைதான் நமது பெருவிருப்பம் என்று தெரிவித்தருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

505 அருளே நம்பொருள் அருளே நம்ஒளி
அருளே நாம்; அறிவாய் என்ற சிவமே

கருணைதான் நமது பெருஞ்செல்வம்; கருணைதான் நமது பெருவிளக்கம்; கருணைதான் யாம் என்று தெரிவித்தருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

506 அருளே நம்குலம், அருளே நம் இனம்
அருளே நாம் அறிவாய் என்ற சிவமே

கருணைதான் நமது திருச்சந்நிதி; கருணைதான் நமது திருக்கூட்டம்; ஆதலின் நம் நிலையும் கருணைதான் என்று தெரிவித்தருளிய சுத்த சிவ பரம்பொருளே!

507 அருளே நம் சுகம், அருளே நம் பெயர்
அருளே நாம் அறிவாய் என்ற சிவமே

கருணைதான் நமது பேரின்பம்; கருணைதான் நமது திருப்பெயர்; ஆதலின் யாமும் பெருங்கருணையாளனே எனத் தெரிவித்தருளிய சுத்த சிவ பரம்பொருளே!

508 அருள் ஒளி அடைந்தனை, அருள் அமுது உண்டனை
அருள்மதி வாழ்க என்று அருளிய சிவமே

கருணையாம் விளக்கத்தினை அடைந்துவிட்டாய்! கருணையாம் திருஅமுதினை உட்கொண்டுவிட்டாய்! ஆதலின் கருணையாம் நும் பேரறிவு என்றும் வாழ்க என எம்மை வாழ்த்தியருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

509 அருள்நிலை பெற்றனை அருள்வடிவு உற்றனை
அருள் அரசு இயற்றுக என்று அருளிய சிவமே

பெருங்கருணைப் பேற்றினை அடைந்துவிட்டாய்; பெருங்கருணைப் பேருடலும் பெற்றுவிட்டாய் ஆதலின் பெருங்கருணைப் பேராட்சியினை இது தொடங்கி நடத்தி வருக என்று அனுக்கிரகம் செய்தருளிய எமது சுத்த சிவ பரம்பொருளே!

### *பேரருள் நாயகனாய் விளங்கும் வகை*

510 உள் அகத்து அமர்ந்து என் உயிரில் கலந்தருள்
வள்ளல் சிற்றம்பலம் வளர் சிவபதியே

எனது உள்ளத்தகத்தே வீற்றிருந்து எனது உயிரின் ஊடே கலந்து கொண்டு, அனுக்கிரகிக்கும் சத்திய ஞானசபை அருட்கொடை வள்ளலாய் வளரும் எம் அருட்பெருஞ்ஜோதி நாயகனே!



511 நிகர்இலா இன்ப நிலை நடுவைத்து எனைத்
தகவோடு காக்கும் தனிச் சிவ பதியே

ஈடு இணையற்ற பேரின்ப நிலையில் வைத்தருளி உரிமை நாயகியாக என்னைப் பெருங்குணத்துடன் காத்தருள்கின்ற எம் அருட்பெருஞ் ஜோதி நாயகனே!

512 சுத்த சன்மார்க்க சுகநிலை தனில் எனைச்
சத்தியன் ஆக்கிய தனிச் சிவ பதியே

புனித உயிர் நேய நெறியாகிய பேரின்ப நிலையில் என்னையும் நிலைபேறு உடைய மெய்யடியனாக்கிய எம் அருட்பெருஞ்ஜோதி நாயகனே!

513 ஐவரும் காண்டற்கு அரும்பெரும் பொருள் என்
கைவரப் புரிந்த கதி சிவ பதியே

அணுபட்சம், பரமாணுபட்சம், சம்புபட்சம், பிரகிருதிபட்சம், விபுபட்சம் என்னும் ஐந்தொழில்செய் கர்த்தர்களும் ஐந்து வகையான பஞ்ச கிருத்தியக் கடவுளரும் கனவினும் காண்பதற்கு அரிய பெரிய அருள் நிதியை என்தன் கைவசம் பொருந்தும்படி அனுக்கிரகம் செய்தருளிய அடைக்கலப் பொருளாம் எம் அருட்பெருஞ்ஜோதி நாயகனே!

514 துன்பம் தொலைத்து அருட் ஜோதியால் நிறைந்த
இன்பம் எனக்கு அருள் எழில்சிவ பதியே

பிறவிப் பெரும் துன்பம் யாவும் நீக்கியும் பேரருள் பிரகாசத்தால் முழுமையாய் இன்ப நிலையை எனக்குக் கிருபை செய்துமருளிய எமது அழகிய அருட்பெருஞ்ஜோதி நாயகனே!

515 சித்தமும் வாக்கும் செல்லாப் பெருநிலை
ஒத்துஉற ஏற்றிய ஒரு சிவ பதியே

முடிவெடுக்கும் சித்தமும், சொல்லி விளக்கும் வார்த்தையும், எட்டிவிட இயலா உன்னதப் பெருநிலை பொருந்திட என்னை அருள்நிலை மேல் ஏற்றருளிய எம் அருட்பெருஞ்ஜோதி நாயகனே!

516 கையறவு அனைத்தும் கடிந்து எனைத் தேற்றி
வைய மேல் வைத்த மாசிவ பதியே

இடையீடுபடும் இம்மை, மறுமை அனுபவங்கள் யாவற்றையும் நீக்கியதுடன், என்னை ஆறுதலுக்கு உட்படுத்தி, பூவுலகத்தின்கண் இயங்கும்போதே பேரின்ப நிலை பொருந்த வைத்தருளிய எம் அருட்பெருஞ்ஜோதி நாயகனே!

517 இன்புஉறச் சிறியேன் எண்ணுதோறு(ம்) எண்ணுதோறு(ம்)
அன்பொடு என் கண்உறும் அருட் சிவ பதியே

கடவுளின்பம் பெற்றிட எளியேன் உருக்கத்தோடு நினைக்கும் போது நினைக்கும் போதெல்லாம் அன்போடு என் உள்ளத்தி னிடத்துப் பொருந்திக் காட்சித் தருகின்ற எம் அருட்பெருஞ் ஜோதி நாயகனே!

518 பிழை எலாம் பொறுத்து எனுள் பிறங்கிய கருணை
மழைஎலாம் பொழிந்து வளர் சிவபதியே 518

எனது மனம், வாக்கு, காயத்தால் உண்டாகின்ற பிழைகளைப் பொறுத்தருளி, என் உள்ளத்தே விளங்கிய பரிவு எனும் மழை யாவும் பொழிந்து, என்னை அகத்தும் புறத்தும் அன்புடன் வளர்த்தருளும் எம் அருட்பெருஞ்ஜோதி நாயகனே!

519 உளத்தினும் கண்ணினும் உயிரினும் எனது
குளத்தினும் நிரம்பிய குரு சிவபதியே 519

எனது உள்ளத்தினிடத்தும், எனது புறக்கண்ணின் இடத்தும், எனது உயிரினிடத்தும், என் அகக் கண்ணின் இடத்தும் பூரணமாய் நிறைந்தருளிய எம் ஆசாரியனாகிய அருட்பெருஞ்ஜோதி நாயகனே!

### *பேரருள் சற்குருநாதனாய் விளங்கும் வகை*

520 பரம்உடன் அபரம் பகர்நிலை இவை எனத்
திரம்உற அருளிய திருஅருட் குருவே

முன்னர் கைவரப் பெறுவது சாத்திர ஞானம்; பின்னர் கைவரப் பெறுவது அனுபவ ஞானம்; அப்படி அவை அவை கூறுகின்ற



அனுபவ நிலைகள் இவை இவையே என அடியேன் அருளாற்றல் பொருந்த அனுக்கிரகித்தருளிய எம் திருவருள் ஆசானே!

521 மதிநிலை, இரவியின் வளர்நிலை அனலின்
திதிநிலை அனைத்தும் தெரித்த சற்குருவே

சந்திர ஜோதியின் இயல்நிலை, சூரிய ஜோதியின் வளர்நிலை, அக்னி ஜோதியின் காத்தல் நிலை ஆகிய யாவும் முறையே இத்தகையனவே எனத் தெரிவித்தருளிய எமது உத்தம ஆசிரியனே!

522 கணநிலை, அவற்றின் கருநிலை அனைத்தும்
குணம் உறத் தெரித்து உட்குலவு சற்குருவே

விண்மீன்கள் அமைவு நிலையும், அவற்றின் கருக்கூறு நிலைகள் யாவும் கனிவுடன் தெரிவித்தருளி என் உள்ளகத்தே குலாவி நிற்கின்ற எமது தெய்வோத்தம ஆசிரியனே!

523 பதிநிலை, பசுநிலை, பாசநிலை எலாம்
மதியுறத் தெரித்து உள் வயங்கு சற்குருவே

கடவுளது நிலைபேறு, உயிர்களினது நிலைபேறு, மல மாயைகளின் நிலைபேறு ஆகிய அனைத்தும் எமது ஆன்ம அறிவில் பொருந்தி விளங்கும்படித் தெரிவித்தருளி என் உள்ளகத்தே ஓங்கி விளங்கிடும் எமது தெய்வோத்தம ஆசிரியனே!

524 பிரம ரகசியம் பேசி என் உளத்தே
தரம்உற விளங்கும் சாந்த சற்குருவே

வேதங்களால் முடிவாகச் சொல்லப் பெறுகின்ற 'அது நீயானாய்' என்னும் பரப்பிரம இரகசியத்தைச் சொல்லியருளி என் உள்ளத்தினகத்தே மேம்பட்டுப் பொருந்தி ஓங்கும் எம் ஆறுதலுக்குரிய தெய்வோத்தம ஆசிரியனே!

525 பரம ரகசியம் பகர்ந்து எனது உளத்தே
வரம்உற வளர்த்து வயங்கு சற்குருவே

ஆகமங்களால் முடிவாகச் சொல்லப்பெறும் 'நீ அது ஆகிறாய்'

என்னும் இரகசியத்தைக் கூறியருளி, எனது உள்ளத்தே இன்ப வாழ்வுகள் யாவும் பெற வளர்த்ததும் அன்றி, உடனாகி விளங்கும் எமது தெய்வோத்தம ஆசிரியனே!

526 சிவ ரகசியம் எலாம் தெரிவித்து எனக்கே
நவநிலை காட்டிய ஞான சற்குருவே 526

சுத்த சிவநிலையின் இரகசியமாம் உயிர்நேய ஒருமை நிலைகள் யாவும் தெரிவித்ததுடன் எளியேனுக்குக் கீழ் நவநிலை, மேல் நவநிலை அனுபவப் படிகள் இவையே என காண்பித்தருளிய சத்திய ஞானோத்தம ஆசிரியனே!

527 சத்தியல் அனைத்தும் சித்தியல் முழுதும்
அத்தகை தெரித்த அருட்சிவ குருவே 527

இயற்கை உண்மையின் பெருமைகள் யாவும் இயற்கை விளக்கத்தின் சீர்மைகள் யாவும் காருணியம் நிறைவதால் கருணை கூர்ந்து பொருந்துவனவே எனத் தெரிவித்தருளிய எமது தெய்வோத்தம ஆசிரியனே!

528 அறிபவை எல்லாம் அறிவித்து என் உள்ளே
பிறிவற விளங்கும் பெரிய சற்குருவே

ஆன்ம அறிவு, அருள் அறிவு, சிவ அறிவு ஆகியன கொண்டு அறியப்படுவனவே சுத்த சிவ உண்மை அறிவு என்று அறிவித்தருளி என் உள்ளகத்தே நீக்கமின்றி நிறைந்து ஓங்கும் எமது தெய்வோத்தம ஆசிரியனே!

529 கேட்பவை எல்லாம் கேட்பித்து என் உள்ளே
வேட்கையின் விளங்கும் விமல சற்குருவே

சுத்த சிவமாம் அருட்பெருஞ்ஜோதியின் மேன்மைகள் பரப்பிரம நிலைக்கு மேல் உளது எனக் கேளாது கேட்கும்படிச் செய்வித்து என் உள்ளகத்தே விருப்பமுற்று ஓங்கும் எமது பரமோத்தம ஆசிரியனே!

530 காண்பவை எல்லாம் காட்டுவித்து எனக்கே
மாண் பதம் அளித்து வயங்கு சற்குருவே

குருதுரிய மேல்நிலைகள், சுத்த சிவதுரிய மேல்நிலைகள் முதலிய யாவும் பரநாத நிலைக்கு மேல் உளது என அத்தகைய



காணாத காட்சிகள் யாவும் காணும்படிச் செய்தருளி, உயரிய அருட்பேற்றினை அளித்து ஓங்கும் எமது பரமோத்தம ஆசிரியனே!

531 செய்பவை எல்லாம் செய்வித்து எனக்கே
உய்பவை அளித்து எனுள் ஓங்கு சற்குருவே

உயிர்நேய உயர்வுக்குச் செய்ய வேண்டிய செயற்பாடுகள் பசி நீக்கல், கொலை நீக்கல், புலை நீக்கல் என அவை யாவும் ஆன்ம நெகிழ்ச்சியுடன் யான் முன்னின்று இயற்றும்படிச் செய்வித்து, அதனால் மேம்படும் பாக்கியத்தையும் எனக்கே அளித்தருளி, எனது உளத்தே ஓங்கி விளங்கும் எமது பரமோத்தம ஆசிரியனே!

532 உண்பவை எல்லாம் உண்ணுவித்து என்உள்
பண்பினில் விளங்கும் பரம சற்குருவே

உண்ணத் தகுந்த அருள் அமுதம் முதலான அமுத வகைகள் யாவும் யான் உண்டு மகிழும்படிச் செய்தருளி என் உள்ளகத்தே மாண்புடன் ஓங்கிடும் எமது பரமோத்தம ஆசிரியனே!

533 சாகாக் கல்வியின்தரம் எலாம் கற்பித்து
ஏகாக்கரப் பொருள் ஈந்த சற்குருவே

மரணமுறா கலையின் தொடக்க நிலைத் தகுதி முதல் முடிநிலைத் தகுதி வரை யாவும் கற்கும் படிச் செய்வித்து, ‘சி’ என்னும் ஒரெழுத்து ஒருமொழியாம் ஒருமை உண்மை அனுபவத்தை என்தனக்கு வழங்கியருளிய எமது பரமோத்தம ஆசிரியனே!

534 சத்தியம் ஆம் சிவசித்திகள் அனைத்தையும்
மெய்த்தகை அளித்து எனுள் விளங்கு சற்குருவே

மெய்ம்மையாகின்ற கடவுள் சித்திகள் யாவற்றையும் உண்மைத் தகவுடன் எனக்குக் கொடுத்தருளி என் உள்ளகத்தே ஓங்கும் எமது பரமோத்தம ஆசிரியனே!

535 எல்லா நிலைகளும் ஏற்றிச் சித்து எலாம்
வல்லான் என எனை வைத்த சற்குருவே

ஜீவதுரியநிலை, பரதுரியநிலை, குருதுரியநிலை, சுத்த சிவ

துரிய நிலை, சுத்த சிவ துரியாதீத நிலை ஆகிய எல்லா அனுபவ நிலைகளிலும் யான் தேறித் தெளிந்து ஏறிடச் செய்து எல்லாம் வல்ல சித்தன் என என்னையும் உருவாக்கியருளிய எமது தெய்வோத்தம ஆசிரியனே!

***பேரருள் பெருந்தாயாய் விளங்கும் வகை***

536 சீர்உற, அருள்ஆம் தேசுஉற, அழியாப்
பேர்உற என்னைப் பெற்ற நல்தாயே

பேரருள் பெரும்புகழ் பொருந்திட, கருணையாகிய பெரும் பிரகாசம் பொருந்திட, மரணமுறாப் பெரும் பெயர்ச்சீர்மை பொருந்திட என்றே என்னை ஈன்றெடுத்த இன்னருள் அன்னையே!

537 பொருந்திய அருட்பெரும் போகமே உறுக எனப்
பெரும் தயவால் எனைப் பெற்ற நல்தாயே

இயல்பாகப் பொருந்துகின்ற பெருங்கருணையாகிய பேரின்பப் பெரும்போகம் எனக்கு நிறைந்திட என்றே, பேரிரக்கத்தால் என்தன்னை ஈன்றெடுத்த இன்னருள் அன்னையே!

538 ஆன்ற சன்மார்க்கம் அணிபெற எனைத்தான்
ஈன்று அமுதளித்த இனிய நல்தாயே

சால்புடைய ஒருமை நெறியாம் சுத்த சன்மார்க்கம் எல்லா உலகிலும் எழிலுடன் பொருந்திட என்றே, என் தன்னைப் பெற்றெடுத்து அருளமுதம் கொடுத்தருளிய இன்னருள் அன்னையே!

539 பசித்திடு தோறும் என்பால் அணைந்து அருளால்
வசித்து அமுது அருள்புரி வாய்மை நல்தாயே

மாயையின் விகற்ப ஜாலமாகிய பசி எழுகின்ற போதெல்லாம் பெருங்கருணையால் என்னிடம் சேர்ந்து, பேசி, அமுதம் ஊட்டியருள்கின்ற மெய்ம்மைசார் அன்னையே!

540 தளர்ந்ததோறு அடியேன் சார்பு அணைந்து என்னை
உளம் தெளிவித்த ஒருமை நல்தாயே

நான் உளம் தளர்கின்ற போதெல்லாம் எளியேன்பால் அடைந்து, எனது உள்ளம் தேறித் தெளியும்படிச் செய்தருளும், பேரின்பமான இன்னருள் அன்னையே!



541 அருளமுதே முதல் ஐவகை அமுதமும்
தெருள்உற எனக்கு அருள் செல்வ நல்தாயே

மௌனாமுதம், இரகசியாமுதம், மண்டலாமுதம், புவனாமுதம், அமுதம் என்னும் (அனுக்கிரக, திரோபவ, சம்கார, ஸ்திதி, சிருஷ்டி ஆகிய பஞ்சகிருத்தியத்திற்கான) அமுதநிலைகளை, அருட் பரிபாகமடையும்படி எனக்கு ஈந்தருளும் அருட் செல்வமான அற்புத அன்னையே!

542 இயலமுதே முதல் எழுவகை அமுதமும்
உயல்உற எனக்கு அருள் உரிய நல்தாயே

பரஅமுதம், பரம அமுதம், பரம்பர அமுதம், பராபர அமுதம், சிதம்பர அமுதம், மெய்ஞ்ஞான அமுதம், சிவ இயல் அமுதம் என்னும் எழுவகையான அமுத நிலைகளை உயிர்க்குலம் வாழ்ந்து உயர்ந்திட என்றே, எனக்கு அருளிய என் உரிமையாகிய நல்லன்னையே!

543 நண்புஉறும் எண்வகை நவவகை அமுதமும்
பண்புஉற எனக்கு அருள் பண்புடைத் தாயே

தோழமையாகிய நேயத்தால் பொருந்தும் பஞ்ச பூதங்களின் வழி கிடைக்கும் ஐந்து வகை அமுதமும், சந்திர, சூரிய, அக்னியாகிய முச்சுடரின் வழி கிட்டும் அமுதமும், அத்துடன் விந்து நிலை முதல் அருள் நிலை வகையிலாகிய ஒன்பது மேல் நிலை அமுத நிலைகளும் மாண்புடன் பொருந்த எனக்குக் கிருபை செய்தருளும் பண்புடை எம் அன்னையே!

544 மற்றுஉள அமுத வகை எலாம் எனக்கே
உற்று உணவு அளித்தருள் ஓங்கு நல்தாயே

மற்றுமுள்ள அண்ட அமுதம் நான்கும், பிண்ட அமுதம் நான்கும், சுத்த அமுதம் ஐந்தும் ஆகிய பிற அமுத வகைகள் யாவும், என்தனக்கே பொருந்தும்படிச் செய்த பெருந்தயவு ஓங்கிடும் எம் நல் அன்னையே!

545 கலக்கமும் அச்சமும் கடிந்து எனது உளத்தே
அலக்கணும் தவிர்த்தருள் அன்புடைத் தாயே

எமது உயிரின் பசி அலைவினையும், என் உயிர்க்கான மரணமாம் அச்சத்தினையும் முற்றும் நீக்கி, என் உள்ளகத்தே தோய்ந்த தற்போதமாம் துன்பத்தினையும் நீக்கியருளிய எனது அன்பிற்கினிதாம் எம் அன்னையே!

546 துய்ப்பினில் அனைத்தும் சுகம்பெற அளித்து எனக்கு
எய்ப்பு எலாம் தவிர்த்த இன்புடைத் தாயே

இம்மை, மறுமை, பேரின்பச் சுகம் யாவும் பெற்று அனுபவித்திடும் பாக்கியத்தை என்பால் ஈந்து உடல், மனம், குணம், உள்ளம், கருத்து, உயிர் ஆகியவற்றின் தளர்வுகளை எல்லாம் நீக்கியருளிய எனது இன்பமாய நல் அன்னையே!

547 சித்திகள் எல்லாம் தெளிந்திட எனக்கே
சத்தியை அளித்த தயவுடைத் தாயே

பிண்டசித்தி, அண்டசித்தி, பகிரண்ட சித்தி, அண்டராண்ட சித்தி என்கிற அந்தரங்க பகிரங்க தத்துவ தாத்துவிக சித்திகள் எல்லாமும் தெரிந்துகொள்ள என்தனக்கே நல்லருள் ஆற்றலைக் கொடுத்தருளிய பெருந்தயவுடைய எம் அன்னையே!

548 சத்திநிபாதம் தனை அளித்து எனைமேல்
வைத்து அமுது அளித்த மரபுடைத் தாயே

அருள்சக்திப் பதிவை என்னில் முழுமையாகப் பதிவித்து (மெய் ஞானப் பக்குவ அதீத நிலைதன்னைக் கொடுத்தருளி) என்னை சுத்த சிவ துரியாதீத மேல்நிலை மேல் பொருந்தும்படிச் செய்து அருளமுதமும் உதவியருளிய சன்மார்க்கத் தனி மரபின் நல்லருள் அன்னையே!

549 சத்தி சத்தர்கள் எலாம் சார்ந்து எனது ஏவல்செய்
சித்தியை அளித்த தெய்வ நல்தாயே

விந்து நிலை முதலாகக் கடவுள் திருச்சமூகத்து விளங்குகின்ற சத்திகள் சத்தர்கள் ஈறாக யாவரும் என்பால் அணைந்து எனது ஆணைகளைச் சிரமேற்கொண்டு செய்திடும் எல்லாம் வல்ல



இறைமைச் சித்தியை எனக்குக் கொடுத்தருளிய எமது தெய்வீக நல் அன்னையே!

550 தன்நிகர் இல்லாத் தலைவனைக் காட்டியே
என்னை மேல் ஏற்றிய இனிய நல்தாயே

ஈடு இணை இல்லாத தனிப்பெரும் கருணை நாயகனை எனக்குக் காண்பித்தருளி என்னைச் சுத்த சிவதுரியாதீத நிலைமேல் ஏற்றியருளிய எம் இனிய நல் அன்னையே!

551 வெளிப்பட விரும்பிய விளைவுஎலாம் எனக்கே
அளித்து அளித்து இன்புசெய் அன்புடைத் தாயே

இதுவரை உலகுயிர்களுக்கு அனுபவமாகாத சுத்தசிவ சாக்கிரம் முதலாகச் சுத்த சிவ துரியா தீதம் முடிவாக வெளிப்படுத்த வேண்டியிருந்த அனுபவம் எல்லாவற்றையும் என்வழி வெளிப்படுத்தி என்தனக்கே உரிமை அளித்தருளி இன்பம் செய்கின்ற எம் அன்புடைய தாயே!

552 எண் அகத்தொடு புறத்து என்னை எஞ்ஞான்றும்
கண் எனக் காக்கும் கருணை நல்தாயே

(சிற்சபைக்குரிய) உள்ளம், கருத்து, உயிர், ஆன்மா என்னும் அக நிலைகளிலும் (பொற்சபைக்குரிய) பொறிகள், புலன்கள், மனநிலைகள், குணநிலைகள் முதலிய புறநிலைகளிலும் என்னை எக்காலத்தும் கண்ணின் மணிபோல் காத்தருளும் எம் அருளுக்கு இனிதாம் நல் அன்னையே!

553 இன்அருள் அமுது அளித்து இறவாத்திறல் புரிந்து
என்னை வளர்த்திடும் இன்புடைத் தாயே

இனிதாய அருள் அமுதத்தை எனக்குக் கொடுத்தருளி என்றும் அழியாத ஆற்றலையும் தந்து, என்னைப் பொன்போல் போற்றி வளர்த்திடுகின்ற பேரின்பமாய எம் அன்னையே!

554 என்உடல், என்உயிர், என்அறிவு எல்லாம்
தன்ன என்று ஆக்கிய தயவுடைத் தாயே

மாயையின் கட்டுமானத்திற்குரிய என் தேகத்தினையும்,

மாயையால் மறைக்கப்பெறும் என் உயிர் தன்னையும் என் ஆன்ம ஞானத்தினையும், பிறயாவும் - அருள் தேகமாக, அருள் உயிராக, அருள் அறிவாக, மாற்றியருளிய பெருங் கருணையுடைய எம் நல் அன்னையே!

555 தெரியா வகையால் சிறியேன் தளர்ந்திடத்
தரியாது அணைத்த தயவுடைத் தாயே

முயன்று அருள்நெறியில் செலுத்த அறியாமையால் சிற்றறிவுடையேன் உள்ளம் தளர்வடையும் போதெல்லாம் அது கண்டு சற்றும் சகிக்காமல் அன்புடன் அணைத்து ஆதரவு செய்யும் பெருந்தயவுடைய எம் இனிய அன்னையே!

556 சினம் முதல் அனைத்தையும் தீர்த்து எனை நனவினும்
கனவினும் பிரியாக் கருணை நல்தாயே

கோபம், காமம், மோகம், மதம், தாமசம், உலோபம், மாச்சரியம், அகங்காரம் என்னும் செருக்கு நிலைகள் யாவற்றையும் போக்கி என்னை நனவு நிலையிலும் சரி, கனவு நிலையிலும் சரி பிரியாமல் விளங்கும் எம் அருளாய நல் அன்னையே!

557 தூக்கமும் சோம்பும் என்துன்பமும் அச்சமும்
ஏக்கமும் நீக்கிய என் தனித் தாயே

மாயையால் உண்டாகும் தாமத நிலையாம் உறக்கத்தினையும், தளர்வு நிலையாம் சோம்பலையும் பசித் துன்பமாம் துயரினையும், மரணத் துன்பமாம் பயத்தினையும் இப்பிறவி ஏதாகிமுடியுமோ என்னும் ஏக்கத்தினையும் முற்றும் போக்கியருளிய ஒப்பற்ற எம் இனிதாய அன்னையே!

*பேரருள் பெருந்தந்தையாய் விளங்கும் வகை*

558 துன்பு எலாம் தவிர்த்து உளே அன்புஎலாம் நிரம்ப
இன்புஎலாம் அளித்த என் தனித் தந்தையே

பிறவித் துன்பம், வினைத் துன்பம், முனைப்புத் துன்பம், மலத்துன்பம், மாயைத்துன்பம் முதலிய யாவும் நீக்கி, என் உள்ளகத்தே ஆன்ம உருக்கம் முழுவதும் நிறைந்து, நெகிழ்ந்து ஓங்க இம்மை, மறுமை, பேரின்ப ஆதாயம் எலாம் தந்தருளிய எம் இணையற்ற தந்தையே!



559 எல்லா நன்மையும் என்தனக்கு அளித்த
எல்லாம் வல்லசித்து என்தனித் தந்தையே

அருளாட்சி செய்திட வேண்டிய எல்லா நலன்களும் என்தனக்குக் கொடுத்தருளிய எல்லாம் வல்ல சித்திப் பேறுடைய ஒப்பற்ற என் இனிய தந்தையே!

560 நாயில் கடையேன் நலம்பெறக் காட்டிய
தாயில் பெரிதும் தயவுடைத் தந்தையே

கடைநாயினும் இழிவுடையேன், பேரின்பச் சுகம் அடைந்திட, உயரிய உண்மை அற வழியினைக் காண்பித்தருளிய ஞானானந்த வல்லியாம் நல் தாயினும் மிகப்பெரிய இரக்கமுடைய என் இனிய தந்தையே!

561 அறிவு இலாப் பருவத்து அறிவு எனக்கு அளித்தே
பிறிவு இலாது அமர்ந்த பேரருள் தந்தையே

உலகியல் அறிவு பொருந்திடாத இளம் பிராயத்தே, பேரருள் அறிவினை எனக்குக் கொடுத்தருளி, என் உள்ளகத்தும் என் உயிரகத்தும் என் அறிவகத்தும் பிரிந்திடாமல் வீற்றிருந்தருளும் பெருந்தயவுடைய என் இனிய தந்தையே!

562 புல்நிகர் இல்லேன் பொருட்டு, இவண் அடைந்த
தன்நிகர் இல்லாத் தனிப்பெரும் தந்தையே

புல்லுக்கும் ஒப்பாகா என் பொருட்டும், இவ்வுலகினிடையே எழுந்தருளி என்பால் சேர்ந்திட்ட ஈடு இணையில்லா பெருந்தயவுடைய என் இனிய தந்தையே!

563 அகத்தினும் புறத்தினும் அமர்ந்து அருட்ஜோதி
சகத்தினில் எனக்கே தந்த மெய்த் தந்தையே

அகமாகிய என் ஆன்மாவினிடத்தும் புறமாகிய எனது மனத்தினிடத்தும் வீற்றிருந்தருளி அருட்ஜோதியாம் பரிசினை, இவ்வுலக வாழ்வின் போதே என்தனக்கே ஈந்தருளிய என் இனிய தந்தையே!

564 இணைஇலாக் களிப்புற்று இருந்திட எனக்கே
துணைஅடி சென்னியில் சூட்டிய தந்தையே

ஒப்புமை இல்லாத பேரின்பப் பெரு நிலை பொருந்திட, உமது திருவடி மலர்களை எமது தலையின் மீதும் தரித்தருளிய என் இனிய தந்தையே!

565 ஆதி ஈறு அறியா அருள் அரசாட்சியில்
ஜோதி மாமகுடம் சூட்டிய தந்தையே

தோற்றமும் முடிவும் உணர்ந்திட இயலாத கருணையாம் பேரரசாட்சியில் அருட்பெருஞ்ஜோதியாம் திருமுடியினை என் தலை மீதும் தரித்தருளிய என் ஒப்பற்ற இனிய தந்தையே!

566 எட்டு இரண்டு அறிவித்து எனைத் தனி ஏற்றிப்
பட்டி மண்டபத்தில் பதித்த மெய்த்தந்தையே

ஆன்மானுபவத்தைப் பின் தெரிவித்து அதன் முன் ஜீவ விளக்க அனுபவ நிலையினை நான் பெறும்படிச் செய்தருளி, தெய்வங்கள் யாவும் வணங்கிப் போற்றும் படியான, சத்திய ஞானசபை வாத, விவாத பட்டிநியமத்தே அமரும்படிச் செய்தருளிய என் இனிய தந்தையே!

567 தம்கோல் அளவு அதுதந்து அருட்ஜோதிச்
செங்கோல் செலுத்து எனச் செப்பிய தந்தையே

தனது திருவருட் செங்கோலாகிய ஆன்ம நேய ஒருமைப் பாட்டுச் செங்கோலை எனக்கு ஈந்தருளி, அருட்ஜோதியாம் நீதி நெறி ஆட்சியினை இது முதல் நீயே நடத்திடுக எனக் கூறியருளிய என் இனிய தந்தையே!

568 தன் பொருள் அனைத்தையும் தன் அரசாட்சியில்
என் பொருள்ஆக்கிய என்தனித் தந்தையே

தனக்கே உரியதாகிய பேரின்ப வீட்டுப் பொருள்களாம் அரியணை, செங்கோல், மகுடம், ஆழி, குடை முதலிய யாவற்றையும் தன் அருள் ஆட்சியின் முன்பு எனக்கே உரிமையதாக்கியருளிய என் இனிய தந்தையே!



569 தன் வடிவு அனைத்தையும் தன் அரசாட்சியில்
என் வடிவு ஆக்கிய என் தனித் தந்தையே

தனது உயிர் குலத்துடன் விளங்கும் அக வடிவம், பேரடியார்களுடன் விளங்கும் அகப்புறவடிவம், சத்தி சத்தர்களுடன் விளங்கும் புறவடிவம், நவநிலைத் தலைவர்களுடன் விளங்கும் புறப்புறவடிவம் ஆகிய தயா வடிவம் யாவற்றையும் தனது அருள் ஆட்சியில் என் வடிவுக்கே உரியதாகும்படிச் செய்தருளிய என் இனிய தந்தையே!

570 தன் சித்து அனைத்தையும் தன் சமுகத்தினில்
என் சித்து ஆக்கிய என் தனித் தந்தையே

தனது எல்லாம் வல்ல சித்துடன் அருட்பெரும் சித்துகள் யாவற்றையும் தன் முன்னிலையில் என்தனக்கே உரிய சித்துகளாக்கியருளிய என் இனிய ஒப்பற்ற தந்தையே!

571 தன் வசமாகிய தத்துவம் அனைத்தையும்
என் வசம் ஆக்கிய என் உயிர்த் தந்தையே

ஆன்மாக்களைப் பரிபாகமாக்கிப் பக்குவ நிலைக்கு உயர்த்தி மேம்படுத்தும், தன்வசமாகிய சுத்த தத்துவங்கள் அனைத்தையும் உயிர்கட்கு என யான் உதவி செய்யுமாறு அத் தத்துவங்கள் யாவற்றையும் என் உரிமைப்படுத்திய என் உயிர்த் தந்தையே!

572 தன் கையில் பிடித்த தனி அருட்ஜோதியை
என் கையில் கொடுத்த என் தனித் தந்தையே

தனது திருக்கரத்தில் பற்றியருளிய ஒப்பற்ற அருட்ஜோதியாம் அருட்சிவ சத்தியை, எனது கரத்தாலும் பற்றும்படிக் கொடுத்தருளிய என் ஒப்பற்ற இனிய தந்தையே!

573 தன்னையும் தன் அருட் சத்தியின் வடிவையும்
என்னையும் ஒன்று என இயற்றிய தந்தையே

சுத்த சிவமாகிய தன்னையும், அச் சுத்த சிவ அருட் சத்தியின் திருவுருவினையும், சுத்த ஆன்ம அடியனாகிய என் தன்னையும் ஒன்றாக விளங்கும்படிச் செய்தருளிய என் இனிய தந்தையே!

574 தன்இயல் என்இயல் தன்செயல் என்செயல்
என்ன இயற்றிய என்தனித் தந்தையே

தனது திருவருட் பெருந்தன்மையே எனது பெருந்தன்மையாக, தனது திருவருட் பெருஞ்செயலே எனது பெருஞ் செயலாக, ஓங்கும்படிச் செய்தருளிய என் ஒப்பற்ற இனிய தந்தையே!

575 தன்உரு என்உரு தன்உரை என்உரை
என்ன இயற்றிய என் தனித் தந்தையே

தனது அருட்பெருஞ்ஜோதி வடிவமே எனது வடிவமாக, தனது சத்தியத் திருவருள் மெய்ம்மொழியே எனது வாய்மொழியாக விளங்கும்படிச் செய்தருளிய என் ஒப்பற்ற இனிய தந்தையே!

576 சதுரப் பேரருள் தனிப்பெரும் தலைவன் என்று
எதிரற்று ஓங்கிய என்னுடைத் தந்தையே

சத்திய சுத்த அருள்வல்லபம் யாவும் நிறைந்த பெருங்கருணை நாயகன் என, என் உயிரினிடம் நிகரற்று ஒளிர்ந்தருளுகின்ற என் இனிய தந்தையே!

577 மனம் வாக்கு அறியா வரைப்பினில் எனக்கே
இன வாக்கு அருளிய என் உயிர்த் தந்தையே

மன நினைவும், வாய் வார்த்தைகளும் செல்ல இயலாத எல்லையாகிய சிற்றம்பல வெளியில், என்தனக்கே பேரருள் மெய்மொழிகளை வழங்கியருளிய என் உயிரினும் இனிய தந்தையே!

578 உணர்ந்து உணர்ந்து உணரினும் உணராப் பெருநிலை
அணைந்திட எனக்கே அருளிய தந்தையே

ஆன்ம உணர்வு, பர உணர்வு, பரம்பர உணர்வு, பராபர உணர்வுகளால் உணர்ந்திட இயலாத பெரு நிலையாகிய சுத்த சிவ உணர்வு நிலையினை என்னிடமே சேர்த்து தயவு கூர்ந்தருளிய என் இனிய தந்தையே!

579 துரிய வாழ்வுடனே சுக பூரணம் எனும்
பெரிய வாழ்வு அளித்த பெரும் தனித் தந்தையே

சுத்த சிவ துரிய வாழ்வு எனும் இன்ப நிலையுடன், சுத்த சிவ



துரியாதீதப் பேரின்பப் பெருவாழ்வு என்றிடும் ஒப்பற்ற அருட்பெருஞ்ஜோதியாய வாழ்க்கை நிலையை, என்தனக்கே கொடுத்தருளிய என் இனிய தந்தையே!

580 ஈறுஇலாப் பதங்கள் யாவையும் கடந்த
பேறு அளித்து ஆண்ட பெரும்தகைத் தந்தையே

பரப்பிரமபதம், பரசிவபதம், அத்துவிதானந்த பதம், சச்சிதானந்த பதம், அகரநிலைப்பதம், பராபரைபதம், அருட்சிவபதம் முதலிய அழிவுறாப் பதநிலைகள் யாவும் கடந்த, சுத்த சிவானந்த துரியாதீதப் பத நிலையாகிய பாக்கியத்தை என்தனக்கு ஈந்து ஆட்கொண்டருளிய பெருங்கருணையாம் என் இனிய தந்தையே!

581 எவ்வகைத் திறத்தினும் எய்துதற்கு அரிதாம்
அவ்வகை நிலை எனக்கு அளித்த நல்தந்தையே

பரப்பிரமப்பேறு, பரசிவப்பேறு ஆகியவற்றால் எந்த வகையாலும் அடைவதற்கு இயலாததாம் சுத்த சிவநிலைப் பேற்றினை என்தனக்கே கொடுத்தருளிய என் இனிய தந்தையே!

582 இனிப் பிறவா நெறி எனக்கு அளித்தருளிய
தனிப் பெரும் தலைமைத் தந்தையே தந்தையே

தூலப்பிறப்பு, சூக்குமப் பிறப்பு, காரணப் பிறப்பு, மகாகாரணப் பிறப்பு, அதிகாரணப் பிறப்புகளில் நான் பிறந்து பிறந்து, இறந்து, இறந்து உழலா வழியினை ஈந்தருளிய என் ஒப்பற்ற பெருங்கருணைத் தந்தையே! தந்தையே!!

*அருள் துணையாய் விளங்கும் வகை*

583 பற்று அயர்ந்து அஞ்சிய பரிவுகண்டு அணைந்து எனைச்
சற்றும் அஞ்சேல் எனத் தாங்கிய துணையே

இகலோக ஆசையும், பரலோக ஆசையும், என்னைக் கலக்குகின்ற போதெல்லாம் நான் தளர்வுற்றுப் பயந்த நிலை கண்டு (நடுங்கிய அவலம் பார்த்து) அருளால் எழுந்தருளி, என்னைச் 'சிறிதும் அஞ்சற்க' எனக் காத்தருளிய என் இனிய துணைவனே!

584 தளர்ந்த அத்தருணம் என் தளர்வு எலாம் தவிர்த்து உள்
கிளர்ந்திட எனக்குக் கிடைத்த மெய்த்துணையே

உள்ளம் அயர்ந்திட்ட நேரத்தில் எனது அயர்வுகள் யாவும் நீக்கியருளி, அவ்வுள்ளம் ஊக்கமடைந்து மகிழ்ந்திட என்றே என் தனக்குக் கிடைத்த உண்மைத் துணைவனே!

585 துறைஇது, வழிஇது, துணிவுஇது நீ செயும்
முறைஇது எனவே மொழிந்த மெய்த்துணையே

சன்மார்க்க நிலை இதுவே! அதனை அடையும் உயிர்நேயவழி இதுவே! பிற சாதனங்களால் சன்மார்க்கப் பெரும்பயன் அடையப் பெறுவதில்லை என்பது உறுதி! ஆதலின் நீ எவ்வுயிரையும் தானாகப் பார்த்துச் செயல்பட முயலும் முடிந்த பெரு நீதி இதுவே! என்று வாய்மலர்ந்தருளிய என் இனிய உண்மைத் துணைவனே!

586 எங்குஉறு தீமையும் எனைத் தொடரா வகை
கங்குலும் பகலும் மெய்க்காவல் செய் துணையே

நிலம், நீர், கனல், காற்று, ககனம், கலை, கதிர், கோள், கூற்று முதலிய இம்மை, மறுமை நிலைகள் யாவற்றாலும் பொருந்துகின்ற கேடுகள் என்னை ஒரு சிறிதும் அணுக முடியாதபடி, இரவும் பகலும் பாதுகாத்தருளும் என் இனிய துணைவனே!

587 வேண்டிய வேண்டிய விருப்பு எலாம் எனக்கே
ஈண்டு இருந்து அருள்புரி என் உயிர்த்துணையே

பேரின்ப நிலைக்குத் தேவையாகிய துதிசெய்தல் உயிர்க்கு இன்பம் செய்தலாகிய இச்சை எல்லாம் நான் பெறுவதற்கு என்றே இவ்வுலகில் வெளிப்பட்டு விளங்கிக் காத்துக் கருணை செய்தருளுகின்ற என் உயிர்க்கு இனிதாம் துணைவனே!

588 இகத்தினும் பரத்தினும் எனக்கு இடர் சாராது
அகத்தினும் புறத்தினும் அமர்ந்த மெய்த்துணையே

இகமாகிய இவ்வுலக வாழ்விலேயும் பரமாகிய மறுமை உலக வாழ்விலேயும் என்தனக்கு ஓர் இடையூறும் நேரிடாது காவல் செய்து என் ஆன்மாவின் இடத்தும் என் மனத்தினிடத்தும் வீற்றிருந்தருளிய எனக்கு இனிதாம் உண்மைத் துணைவனே!



### *அருட்காதலனாய் விளங்கும் வகை*

589 அயர்வு அற எனக்கே அருள்துணையாகி என்
உயிரினும் சிறந்த ஒருமை என் நட்பே

பற்றுகளால் உண்டாகும் தளர்வுகள் யாவும் ஒழிய, ஒருமை உணர்வுத் தலைவியாகிய என்தனக்கே கருணைத் தோழனுமாகி, என் ஆன்மாவிலும் மேலாகிப் பேரின்பமியும் என் இனிய நண்பனே!

590 அன்பினில் கலந்து எனது அறிவினில் பயின்றே
இன்பினில் அளைந்த என் இன் உயிர் நட்பே

அருள் ஐந்தினை அன்பாகிய என் ஆன்ம உருக்கத்தில் ஒன்றுபட்டு, அதன் விளக்கமாகிய என்தன் ஆன்ம ஞானத்தில் பழக்கம் பெற்று, அதன் பயனாகிய பேரின்பத்தினால் என்னுள் கலந்து கொண்ட என் உயிரினுக்கு இனியதாம் நண்பனே!

591 நான் புரிவன எலாம் தான் புரிந்து எனக்கே
வான் பதம் அளிக்க வாய்த்த நல்நட்பே

யான் செய்திட வேண்டிய செயற்பாடுகள் யாவும் தானே முன்வந்து செய்து கொண்டருளி, என் தனக்கே சத்திய ஞானசபையின் மேலான நாயகி பதவியினைக் கொடுத்திடப் பொருந்திய என் இனிய நண்பனே!

592 உள்ளமும் உணர்ச்சியும் உயிரும் கலந்துகொண்டு
எள்உறு நெய்யில் என் உள்உறு நட்பே

என் கருத்தின் இடத்திலும், என் தனிக்காதல் உணர்ச்சியினிடத்திலும், என் ஆன்மாவின் இடத்திலும் ஒன்றுபட்டு, எள்ளின் உள்ளே பொருந்திய எண்ணெய்போல் என்தன் உள்ளத்தே வீற்றிருந்தருளிய என் இனிய நண்பனே!

593 செற்றமும் தீமையும் தீர்த்து நான் செய்த
குற்றமும் குணமாக் கொண்ட என் நட்பே

வைராக்கியம் பாராட்டும் சினத்தையும், பாபத்தை உண்டாக்கும் கேட்டினையும், அறவே நீக்கியருளி, அறியாமல் யான் செய்திட்ட அப்பாபத்தினையும் நன்மையாகக் கொண்டருளிய, என் இனிய நண்பனே!

594 குணம் குறி முதலிய குறித்திடாது எனையே
அணங்குஅறக் கலந்த அன்புடை நட்பே

எனது உயிர் இயல்பு, எனது மன நிலை, எனது உடல் தோற்றம் முதலியவற்றைச் சிறிதும் கருதிடாமல் என்தன் காதல் மோகம் முழுவதும் நீங்கிட என் உயிரினிடத்தே ஒன்றுபட்ட ஆன்ம நேயமுடைய என் இனிய நண்பனே!

595 பிணக்கும் பேதமும் பேய் உலகோர் புகல்
கணக்கும் தீர்த்து எனைக் கலந்த நல்நட்பே

ஒருமைக் காதல் உணர்ச்சியின் பால் ஊடலும், உடல், மனம் உள்ளம், உயிர், அறிவு முதலியன ஒன்றிப் பொருந்தாத மாறுபாடுகளும், பித்துடைய உலகத்தவர் பைத்தியமாகப் பேசும் சேர்க்கைக்குரிய 4, 8, 15 முதலிய நாட்கணக்குகளின் எல்லையும், நீக்கி என்னை எப்போதும் கலந்து கொண்டு பேரின்பமியும் என் இனிய நண்பனே!

596 சவலை நெஞ்சகத்தின் தளர்ச்சியும் அச்சமும்
கவலையும் தவிர்த்து எனைக் கலந்த நல்நட்பே

காதல் உறுதி இல்லாமல் மெலிவுற்ற என் உள்ளகத்தின் அயர்ச்சியினையும், தலைவனின் நட்பு எங்கே தொடர்ந்து கிடைக்காமல் போகுமோ என்று எண்ணும் பயமும், அத்தகைய உயிர் நாயகனால் அருட் சந்ததி பெறாது போகுமோ என்று எண்ணும் ஏக்கமும் நீக்கி, என் உயிரின்பால் விரும்பி ஒன்றுபட்ட என் இனிய நண்பனே!

*அருள் உறவாய் விளங்கும் வகை*

597 களைப்பு அறிந்து எடுத்துக் கலக்கம் தவிர்த்து எனக்கு
இளைப்பு அறிந்து உதவிய என்உயிர் உறவே

என் உயிரினது வாட்டத்தினை உணர்ந்து, என்னைத் தூக்கியருளி, எனது சஞ்சலத்தை நீக்கி என்தன் மெலிவினைத் தெரிந்து அது வலிவுபெற உதவும் என் உயிர்க்கினியதாம் சுற்றமே!

598 தன்னைத் தழுவுறு தரம் சிறிது அறியா
என்னைத் தழுவிய என் உயிர் உறவே

எல்லாம் வல்ல காதலனாகிய நின்னை அணைகின்ற தகுதி



ஒரு சிறிதும் தெரியாத ஏழைப் பெண்ணாகிய என்னையும் அணைத்துக் கொண்டருளிய என் உயிர்க்கினியதாம் சுற்றமே!

599 மனக்குறை நீக்கி நல்வாழ்வு அளித்து என்றும்
எனக்கு உறவு ஆகிய என் உயிர் உறவே

பேரின்பப் பெருவாழ்வு எப்போது அடைவோம்; எவ்வாறு பெறுவோம் என்னும் என்தன் மனத்தகத்தின் ஏக்கத்தை அகற்றி, அப்பேரின்பப் பெருவாழ்வினை என்தனக்கும் கொடுத்தருளி, எக்காலத்தும் சொந்தமாகிய என் உயிர்க்கினியதாம் சுற்றமே!

600 துன்னும் அனாதியே சூழ்ந்து எனைப் பிரியாது
என்உறவு ஆகிய என்உயிர் உறவே

தோற்றமில்லாத காலம் தொடங்கி, நெருங்கிய உறவாகி (நெருக்கம் உடையதாகி) என்னைக்கூடி, இமைப்பொழுதும் என்னை விட்டுப் பிரிந்திடாத சொந்தமாகிய என் உயிர்க்கினியதாம் சுற்றமே!

*சச்சிதானந்தமாய் விளங்கும் வகை*

601 என்றும் ஓர் நிலையாய் என்றும் ஓர் இயலாய்
என்றும் உள்ளதுவாம் என்தனிச் சத்தே

எக்காலத்தும் அழியாத ஓர் நிலைபேறுடையதாய், எங்கெங்கும் மாறுபடாத ஒரே இயல்புத் தன்மை உடையதாய், என்றென்றும் விளங்கியிருக்க கூடியதுமான என்றனது இணையற்ற மெய்ம்மையாம் பொருளே!

602 அனைத்து உலகு அவைகளும் ஆங்காங்கு உணரினும்
இனைத்து என அறியா என்தனிச் சத்தே

எல்லா உலகத்தின்கண்ணும் உள்ள எல்லா வகை அறிவுப் பொருள்களும், எவ் எவ் இடத்தில் இருந்து எவ்எவ் வகை அறிவினால் உணர முற்பட்டாலும், இப்படிப்பட்டது என உணர ஒண்ணாத என் ஒப்பற்ற மெய்ம்மையாம் பொருளே!

603 பொது மறைமுடிகளும் புகல் அவை முடிகளும்
இது எனற்கு அரிதாம் என்தனிச் சத்தே

பொதுமையாகிய வேதாந்தங்களும், அந்த வேதாந்தங்கள் புகழும் உன்னத உபநிடதங்களின் எல்லைகளும்

இப்படிப்பட்டது என்றுரைப்பதற்கு இயலாததாகிய என் ஒப்பற்ற மெய்ம்மையாம் பொருளே!

604 ஆகம முடிகளும் அவை புகல் முடிகளும்
ஏகுதற்கு அரிதாம் என்தனிச் சத்தே

சிறப்புடைய ஆகமங்களும், அதன் அருமைபெறும் முடிபுகளாகிய சித்தாந்தங்களும் அவை புகழும் சுத்த மெய்ஞ்ஞான நூல்களும் இப்படிப்பட்டது என அறிந்து அடைதற்கு இயலாததாகிய என் ஒப்பற்ற மெய்ம்மையாம் பொருளே!

605 சத்தியம் சத்தியம் சத்தியம் எனவே
இத்தகை வழுத்தும் என்தனிச் சத்தே

வாக்காம் இயற்கை உண்மைப் பொருளே, மனமாம் இயற்கை உண்மைப் பொருளே, காயமாம் இயற்கை உண்மைப் பொருளே என்று இவ்வாறு மெய்யறிவாளர்களால் புகழ்ந்து துதிக்கப்பெறும் என் ஒப்பற்ற மெய்ம்மையாம் பொருளே!

606 துரியமும் கடந்தது ஓர் பெரிய வான் பொருள் என
உரைசெய் வேதங்கள் உன்னும் மெய்ச் சத்தே

சிவதுரிய மேனிலையையும்விட சுத்த சிவதுரிய நிலைக்கு அப்பாற்பட்டு விளங்குவதே பரிபூரண அழியா மெய்ப் பொருள் என்று மறைகள் புகழ்கின்ற என் ஒப்பற்ற மெய்ம்மையாம் பொருளே!

607 அன்று, அதன் அப்பால் அதன் பரத்ததுதான்
என்றிட நிறைந்த என்தனிச் சத்தே

வேதங்களால் முடிவாகச் சொல்லப்படும் பரப்பிரமப் பொருளும் அன்று; ஆகமங்களால் முடிவாகச் சொல்லப்படும் பரசிவப் பொருளும் அன்று; அந்நிலைகட்கு அப்பால் அவர்தம் அருள் அனுபவ நிலைகளுக்கும் மேலாக நின்ற அந்தச் சுத்த சிவம் தானே அருட்பெருஞ்ஜோதி என ஆன்ம நேய அனுபவிகள் புகழ்ந்திடப் பரிபூரணமாய் நிறைந்தருளும் என் ஒப்பற்ற மெய்ம்மையாம் பொருளே!



*சித்துப்பொருளாய் விளங்கும் வகை*

608 என்றும் உள்ளதுவாய் எங்கும் ஓர் நிறைவாய்
என்றும் விளங்கிடும் என்தனிச் சித்தே

என்றென்றும் மாறுபடாது இருப்பதுவாய், எவ்வெவ்விடத்தும் நிறைந்த ஓர் பரிபூரணமாய் என்றென்றும் ஒளிரக் கூடியதுமான என் ஒப்பற்ற மெய்யறிவாம் பொருளே!

609 சத்திகள் பலவாய்ச் சத்தர்கள் பலவாய்
இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே

விந்து சத்திகள், பரவிந்து சத்திகள் முதலாகவும் நாத சத்தர்கள், பரநாத சத்தர்கள் முதலாகவும் உள்ள பல்வேறு சத்தி சத்தர்கள் நிலைகளாய் அமைந்து ஒளிரும் என் ஒப்பற்ற மெய்யறிவாம் பொருளே!

610 தத்துவம் பலவாய்த் தத்துவி பலவாய்
இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே

ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சுத்த தத்துவம் என விளங்கும் பல்வகை தத்துவ அமைப்புகளும் அதைவென்று மேம்படச் செய்வதான அனுபவ நிலைகளாகிய தாத்விக அமைப்புமாகிய என் ஒப்பற்ற மெய்யறிவாம் பொருளே!

611 படிநிலை பலவாய்ப் பதநிலை பலவாய்
இடிவுஅற விளங்கிடும் என்தனிச் சித்தே

தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சித்தி, ஆத்ம ரூபம், ஆத்ம தரிசனம், ஆத்ம சுத்தி என்னும் தசகாரியங்களாகிய படிநிலைகளின் அமைப்பு பலவாகவும் அதன் வழி அடைகின்ற சிவரூபம், சிவதரிசனம், சிவசித்தி, சுத்தசிவசிக்தி என்னும் தெய்வப் பதவிகள் பலவாகவும் நின்றே குறை அகல ஒளிர்ந்திடும் என் ஒப்பற்ற மெய்யறிவாம் பொருளே!

612 மூர்த்தர்கள் பலவாய் மூர்த்திகள் பலவாய்
ஏற்பட விளக்கிடும் என்தனிச் சித்தே

விந்து, நாதம், பரவிந்து, பரநாதம் முதலிய மூர்த்தர்கள் பலவாகவும் பிரம்மன், விஷ்ணு, உருத்திரன், மயேச்சுரன்,

சதாசிவம் முதலிய பஞ்சகிருத்திய மூர்த்திகள் பலவாகவும் உண்டாக ஒளிர்ந்திடும் என் ஒப்பற்ற மெய்யறிவாம் பொருளே!

613 உயிர்வகை பலவாய் உடல்வகை பலவாய்
இயல்உற விளக்கிடும் என்தனிச் சித்தே

ஆறுவகையாகும் அறிவு உயிர்கள் பலவாகவும், அவ்வறிவினைத் தாங்கி இயங்கும் ஏழுவகையாகும் உடல் தோற்றங்கள் பலவாகவும் இயற்கையில் ஓங்கி ஒளிரும்படிச் செய்யும் என் ஒப்பற்ற மெய்யறிவாம் பொருளே!

614 அறிவு அவை பலவாய் அறிவன பலவாய்
எறிவு அற விளக்கிடும் என்தனிச் சித்தே

இந்திரியக் காட்சி, கரணக் காட்சி, ஜீவக்காட்சி, ஆன்மக்காட்சி, அருள்காட்சி கொண்டு உணரப்படும் அனுபவ நிலைகள் பலப்பலவாகவும் அவ்வாறே இந்திரிய அறிவு, கரண அறிவு, ஜீவ அறிவு, ஆன்ம அறிவு, அருள் அறிவு ஆகிய நிலைகள் பலப்பலவாகவும் நீக்கமின்றி நிறைந்து ஒளிர்ந்திடும் என் ஒப்பற்ற மெய்யறிவாம் பொருளே!

615 நினைவு அவை பலவாய் நினைவன பலவாய்
இனைவு அற விளக்கிடும் என்தனிச் சித்தே

முக்குண இயல்புகளுக்கேற்ப நினைக்கின்ற நினைவுகள் பலவாயும் அவ்வாறு நினைக்கின்ற உயிர்கள் பலவாயும் அமைத்து துன்பம் நீங்க ஒளிர்ந்திடும் என் ஒப்பற்ற மெய்யறிவாம் பொருளே!

616 காட்சிகள் பலவாய்க் காண்பன பலவாய்
ஏட்சியின் விளக்கிடும் என்தனிச் சித்தே

புறப்புறக்காட்சி, புறக்காட்சி, அகப்புறக்காட்சி, அகக் காட்சி அருட்காட்சி எனக் காணும் காட்சி நிலைகள் பலவாகவும் அவ்வாறு காண்கின்ற பொறிகள், கரணங்கள், ஜீவன், ஆன்மா என்னும் காணும் கருவி நிலைகள் பலவாகவும் அனுபவித்திட அமைத்து அருள் ஆற்றலுடன் ஒளிர்ந்திடும் என் ஒப்பற்ற மெய்யறிவாம் பொருளே!



617 செய்வினை பலவாய்ச் செய்வன பலவாய்
எய்வு அற விளக்கிடும் என் தனிச் சித்தே

ஐம்பூதங்கள், பகுதிகள், தத்துவங்கள் முதலியனவாய், அவை விளங்கும் நிலைகள் பலவாகவும் அவற்றைச் செயல்படுத்தும் ஆதிசத்தி, பராசத்தி, பராபரசத்தி என்னும் நிலைகள் பலவாகவும் அமைத்துக் குறைவற ஒளிர்ந்திடும் என் ஒப்பற்ற மெய்யறிவாம் பொருளே!

618 அண்ட சராசரம் அனைத்தையும் பிறவையும்
எண்தர விளக்கும் என் தனிச் சித்தே

அண்ட வெளிகளையும், அவற்றினூடே தோன்றி வளரும் இயங்கும், இயங்கா உயிர்கள் யாவற்றையும் அவை வாழ்வகைக்கான உடலாம் பிண்ட வகைப் பொருள்களையும் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்னும் நான்கு இடங்களிலும் நிறைவித்தருளி ஒளிர்ந்திடச் செய்யும் என் ஒப்பற்ற மெய்யறிவாம் பொருளே!

619 எல்லாம் வல்ல சித்து என மறை புகன்றிட
எல்லாம் விளக்கிடும் என் தனிச்சித்தே

எல்லாம் செய்ய வல்ல அருள் சித்து என வேதங்கள் யாவும் புகழ்ந்திட, யாவற்றையும் ஓங்கி ஒளிர்ந்திடச் செய்யும் என் ஒப்பற்ற மெய்யறிவாம் பொருளே!

***ஆனந்தப் பொருளாய் விளங்கும் வகை***

620 ஒன்று அதில் ஒன்று என்று உரைக்கவும் படாதாய்
என்றும் ஓர் படித்தாம் என் தனி இன்பே

இந்திரிய இன்பம், கரண இன்பம், உலக இன்பம், உயிரின்பம், ஆன்ம இன்பம், அறிவின்பம் என ஒன்றற்கு ஒன்று உயர்வுடைய இன்பம் என்று கூறப்படாததாய், எக்காலத்தும் ஒரே தன்மையாகி விளங்கும் இயற்கைத் தனி இன்பமாகிய எனது ஒப்பற்ற இன்பமே!

621 இது அது என்னா இயல்உடை அதுவாய்
எதிர்அற நிறைந்த என் தனி இன்பே

இம்மை இன்பத்தது, மறுமை இன்பத்தது என்று கூறிட இயலாதபடி பேரின்ப இயல்பே உடையதுவாய், இணையேதும்

இல்லாமல் ஒருமையால் பூரணமாகி ஓங்கும் எனது ஒப்பற்ற இன்பமே!

622 ஆக்குறும் அவத்தைகள் அனைத்தையும் கடந்துமேல்
ஏக்குஅற நிறைந்த என் தனி இன்பே

ஏழுவகைப் பிறவிகள் தோறும் உண்டாகும் ஜனனம், மரணம், பசி என்பன போன்று மாயையால் உண்டாகும் அவத்தைகள் யாவும் கடந்து, அருள் அனுபவ மேல் நிலையில் எவ்வகை ஏக்கமும் இன்றிப் பூரணமாகி நிறைந்த, எனது ஒப்பற்ற இன்பமே!

623 அறிவுக்கு அறிவினில் அது அது அதுவாய்
எறிவு அற்று ஓங்கிய என் தனி இன்பே

புலன் அறிவினிலும், மன அறிவினதாய்க் கரண அறிவினிலும் ஜீவ அறிவினதாய் ஜீவ அறிவினிலும் ஆன்ம அறிவினதாய் ஆன்ம அறிவினிலும் அருள் அறிவினதாய் ஆங்காங்கு அதுஅதுவாகி நிறைந்ததுடன் விலக்கப்படுதல் இல்லாத ஓங்கிப் பெருகும் எனது ஒப்பற்ற இன்பமே!

624 விடயம் எவற்றிலும் மேன்மேல் விளைந்து அவை
இடை இடை ஓங்கிய என் தனி இன்பே

மண் விஷய இன்பம், பொன் விஷய இன்பம், பெண் விஷய இன்பம் ஆகிய யாவற்றினும் மேம்பட்டு ஓங்கிச் செழித்து, அத்தகைய இம்மை உலக இன்பங்கள் ஊடேயும், மறுமை உலக இன்பங்கள் ஊடேயும், ஓங்கி ஒளிர்கின்ற ஒருமையாகிய எனது ஒப்பற்ற இன்பமே!

625 இம்மையும் மறுமையும் இயம்பிடும் ஒருமையும்
எம்மையும் நிரம்பிடும் என் தனி இன்பே

இவ்வுலக இன்பங்களாகவும், அவ்வுலக இன்பங்களாகவும் சிறப்பித்துக் கூறப்படும் பேரின்ப நிலையாகவும் திகழ்ந்து எவ்விடத்தும் பூரணமாகி நிறைந்தருளிய எனது ஒப்பற்ற இன்பமே!



626 முத்தர்கள் சித்தர்கள் சத்திகள் சத்தர்கள்
எத் திறத்தவர்க்கும் ஆம் என் தனி இன்பே

ஜீவன் முத்தர், பரமுத்தர், கரும சித்தர், யோக சித்தர், ஞானசித்தர், அசுத்த மாயா சத்திகள், அசுத்தா சுத்த மாயா சத்திகள், சுத்த மாயா சத்திகள் அச்சத்திகளை நடத்துவிக்கும் அதிகாரத் தலைவர்கள் மற்றுமுள்ள நவநிலைக் கடவுள்கள் ஆகிய யாவர்க்கும் பொருத்தப்பாடு உடைய்தாகிய எனது ஒப்பற்ற இன்பமே!

627 எல்லா நிலைகளின் எல்லா உயிர்உறும்
எல்லா இன்பும் ஆம் என் தனி இன்பே

தத்துவ உலகங்கள் தாத்விக உலகங்கள் முதலிய மண்ணுலக நிலை, விண்ணுலக நிலை, பேரருள் உலக நிலை ஆகிய எல்லா இடங்களிலும் விளங்கி ஆங்காங்குள்ள எல்லா உயிர்களும் அனுபவிக்கும் எல்லா இன்பங்களும் தானாகிப் பொருந்திய எனது ஒப்பற்ற இன்பமே!

*அமுதமாய் விளங்கும் வகை*

628 கரும்புஉறு சாறும் கனிந்த முக்கனியின்
விரும்புறும் இரதமும் மிக்க தீம் பாலும்
629 குணங்கொள் கோல்தேனும் கூட்டி ஒன்றாக்கி
மணங்கொளப் பதம்செய் வகைஉற இயற்றிய
630 உணவு எனப் பல்கால் உரைக்கினும் நிகரா
வணம் உறும் இன்ப மயமே அதுவாய்க்
631 கலந்து அறிவு உருவாய்க் கருதுதற்கு அரிதாய்
நலம்தரும் விளக்கமும் நவிலரும் தண்மையும்
632 உள்ளதாய் என்றும் உள்ளதாய் என்உள்
உள்ளதாய் என்றன் உயிர் உளம் உடம்புடன்
633 எல்லாம் இனிப்ப இயல்உறுசுவை அளித்து
எல்லாம் வல்ல சித்து இயற்கையது ஆகிச்
634 சாகா வரமும் தனித்த பேரறிவும்
மா காதலிற் சிவ வல்லப சத்தியும்
635 செயற்கு அரும் அனந்த சித்தியும் இன்பமும்
மயக்கு அறத் தரும்திறல் வண்மையது ஆகிப்
636 பூரண வடிவாய்ப் பொங்கி மேல்ததும்பி
ஆரண முடியுடன் ஆகம முடியும்

637 கடந்து எனது அறிவாம் கன(ல்) மேல் சபைநடு
நடம் திகழ்கின்ற மெய்ஞ்ஞான ஆரமுதே

செங்கரும்பின் பிழிவும், நிழலில் இயல்பாகக் கனிந்த வாழை, மா, பலா,என்னும் முப்பழங்களின் விருப்பத்தைக் கூட்டும் இனிய சாறும் மிகுசுவை உடையதாய இனிய ஆவின் பாலும் அழியாத் தகைமை உடையதாகிய கொம்புத்தேனும் இவை ஒன்றாகச் சேர்த்துக் கலந்திட அதன் வழி நறுமணம் எல்லாம் உடையதாகி, இளம் சூட்டில் பாகம் செய்து, முறை பிறழாதபடி உண்டாக்கியதே தீஞ்சுவை அமுத உணவு. அது பலமுறை பாராட்டினாலும் ஒப்புமையாகாதது. எழில் நிறம் பொருந்திப் பேரின்ப பூரணமே யதுவாய், எனது உயிரினில் சேர்ந்து கலந்தது. பேரறிவே வடிவுடையதாகி இம்மியும் எண்ணிப்பார்ப்பதற்கு இயலாத உயர்வுடையதாய் நன்மையே தருகின்ற பொலிவுடையது. சொல்ல ஒண்ணா குளிர்ச்சித் தன்மை உடையது, எக்காலத்தும் நிலைத்திருப்பது, என் உள்ளகத்தே வீற்றிருப்பது, என் தன்னுடைய ஆன்மா, ஜீவன், உள்ளம், உடல் ஆகிய எவ்விடத்தும் தித்திப்பது, இயற்கையில் நிறைந்த தீஞ்சுவை உடையது, எல்லாம் வல்ல சித்திப்பேறு விளைகின்ற இயல்புத் தன்மை உடையது, மரணமுறா மேன்மை அளிப்பது. ஒப்பற்ற கடவுள் அறிவும், பெருங் காதல் உடைமையாய் சிவப் பேராற்றல் பெற்ற அருள்சத்தியும், யாவராலும் செய்வதற்கரிய அளவற்ற சித்திகளும் மலம், மாயை முதலிய மயக்கங்கள் யாவும் தீர்த்தருள்கின்ற வள்ளல் தன்மை உடையது, பரிபூரண வடிவம் உடையதாகி, அகம்புறமும் பொங்கிப் பூரித்து, மேற்கொண்டும் தளும்பி வழிவது, வேதாந்த அனுபவ எல்லையும் சித்தாந்த அனுபவ எல்லையும் மீறி எனது மெய்யறிவாய சத்திய ஞானசபையின் இடையே அருள் நடனத்தைச் செய்தருள்கின்றது. அத்தகைய சத்தியப் பேரறிவேயாய் நிறைந்த என் இனிய அமுதமே!

638 சத்திய அமுதே தனித் திருவமுதே
நித்திய அமுதே நிறை சிவ அமுதே

மெய்ம்மையாம் அமுதமே! ஒப்பற்ற அருள் அமுதமே! அழியா திரு அமுதமே! சிவ பூரண அமுதமே!



639 சச்சிதானந்தத் தனிமுதல் அமுதே
மெய்ச் சிதாகாச விளை அருள் அமுதே

மெய் அறிவு இன்பமாய ஈடற்ற மேலாம் அமுதமே! உண்மையாம் சிற்றம்பலத்தில் விளைந்த கருணை அமுதமே!

640 ஆனந்த அமுதே அருளொளி அமுதே
தான் அந்தம் இல்லாத் தத்துவ அமுதே

பேரின்ப அமுதமே! கருணைப் பிரகாச அமுதமே! என்றும் முடிவில்லாத சுத்த சிவ தத்துவ அமுதமே!

641 நவநிலை தரும் ஓர்நல்ல தெள்ளமுதே
சிவநிலை தனிலே திரண்ட உள்ளமுதே

பரநாத பதம் முதல் பிரமபதம் முடிவாக ஒன்பது தெய்வீக பதநிலைகளும் ஈந்திடும் உயரிய தெளிவுடை அமுதமே! சுத்த சிவமாம் முடிவிடத்தில் திரட்சி பெற்ற என் உள்ளத்து அமுதமே!

642 பொய்படாக் கருணைப் புண்ணிய அமுதே
கைபடாப் பெருஞ்சீர்க் கடவுள் வான் அமுதே

அசத்திய நிலை அறியா அருள் தரும அமுதமே! கைத்திடல் இல்லாத பெரும் புகழுடைய சுத்த சிவ சுக அமுதமே!

643 அகம்புறம் அகப்புறம் ஆகிய புறப்புறம்
உகந்த நான்கு இடத்தும் ஓங்கிய அமுதே

மண்ணுயிர்களுக்கான புறப்புற அமுதம், தேவர்களுக்கான புற அமுதம், ஐந்தொழில் கடவுளருக்கான அகப்புற அமுதம், சத்தி சத்தர்களுக்கான அகஅமுதம் ஆகிய நான்கு அமுத நிலைகளிலும் மேம்பட்டு ஒளிரும் என் இனிய அமுதமே!

644 பனிமுதல் நீக்கிய பரம்பர அமுதே
தனிமுதல் ஆய சிதம்பர அமுதே

மரண பயத்திற்கே காரணமாய ஆன்ம அலைவினைப் போக்கும் அமுதமே! ஒப்பற்ற பேரின்பத்திற்குக் காரணமாய சிற்றம்பல அமுதமே!

645 உலகு எலாம் கொள்ளினும் உலப்புஇலா அமுதே
அலகு இலாப் பெருந்திறல் அற்புத அமுதே

இம்மை, மறுமை, ஒருமை முதலிய உலகங்கள் யாவும் அள்ளிக் கொண்டாலும் சற்றும் குறைவிலா அமுதமே! அளவிட முடியாத பேரருள் ஆற்றல் உடைய அற்புத அமுதமே!

***செல்வ மாமணியாய் விளங்கும் வகை***

646 அண்டமும், அதன் மேல் அண்டமும், அவற்றுஉள
பண்டமும் காட்டிய பரம்பர மணியே

நவநிலைத் தலைவர்கள் அண்டமும், சத்தி சத்தர்கள் அண்டமும், அவற்றின் உள்ளே உள்ள இயங்கும் பொருள்களும், இயங்காப் பொருள்களும், பூதங்களும், அனல், இரவி, மதி, உடுக்கள் முதலியவற்றின் சொரூபரூப சுபாவங்களையும் தெளிவுறக் காட்டிய எம் இனிய பரம்பர இரத்தினமே!

647 பிண்டமும் அதில் உறு பிண்டமும் அவற்றுஉள
பண்டமும் காட்டிய பராபர மணியே

இம்மை மறுமை ஒருமை ஆகியவற்றின் இயங்கும் உயிர்களும் அவ்வுயிர்களில் இருந்து இயங்கும் தூல சூக்கும காரண உடல் அமைப்புகளின் கூறுபாடுகளும் அதனது சொரூப ரூப சுபாவங்களையும் தெளிவுறக் காட்டிய எம் இனிய பராபர இரத்தினமே!

648 நினைத்தவை நினைத்தவை நினைத்தாங்கு எய்துற
அனைத்தையும் தரும் ஓர் அரும்பெறல் மணியே

எண்ணிய எண்ணியபடியே எண்ணிய அளவில் அடைந்து மகிழ என்றே, யாவற்றையும் எய்துவிக்கும் பெறுதற்குரிய எம் பெறலரும் இரத்தினமே!

649 விண்பதம் அனைத்தும் மேல்பதம் முழுவதும்
கண்பெற நடத்தும் ககன மா மணியே

தேவபதங்கள் எல்லாவற்றையும் அதற்கும் மேம்பட்ட பஞ்சகிருத்திய கர்த்தர்கள் பதங்கள் எல்லாவற்றையும், அதற்கும் மேம்பட்ட சிவதத்துவ பதங்கள் எல்லாவற்றையும்



பராசத்தி, பரசிவ பதங்கள் எல்லாவற்றையும், சத்தி சத்தர் தம் பதங்கள் எல்லாவற்றையும், கடைக்கண் பார்வையில் தன் விருப்பம்போல் நடத்துவிக்கும் எம் ஒப்பற்ற மாககன சித்தி இரத்தினமே!

650 பார் பதம் அனைத்தும் பகர் அடி முழுவதும்
சார்பு உற நடத்தும் சரஒளி மணியே

மண் உலக பதங்கள் விண்ணுலக பதங்கள் மற்றும் புகழும் படியான பூமண்டல நிலைகள் யாவற்றையும், தன் விருப்பத்திற்கு ஏற்றபடி இயக்குவிக்கும் கலையாகி ஒளிரும் இனிய இரத்தினமே!

651 அண்ட கோடிகள் எலாம் அரைக்கணத்து ஏகிக்
கண்டுகொண்டிட ஒளிர் கலைநிறை மணியே

கோடிக்கணக்கான வெளிக்கோளங்கள் யாவிலும், அரை நொடியில் சென்று, தெரிந்து அங்குள்ள பொருள்கள் யாவற்றையும் கண்டுகொள்ளும்படி நிறைந்து ஒளிர்கின்ற எம் இனிய இரத்தினமே!

652 சராசர உயிர்தொறும் சாற்றிய பொருள்தொறும்
விராவி உள்விளங்கும் வித்தக மணியே

இயங்கும் உயிர்கள் ஒவ்வொன்றிலும், இயங்கா உயிர்கள் ஒவ்வொன்றிலும் அமைக்கப்பெற்ற தனு, கரண, புவன, போகம் முதலிய நால்வகை பொருள்களிடத்தும் கலந்துகொண்டு அவற்றை நடத்தி வைக்கும் எம் இனிய இரத்தினமே!

653 மூவரும் முனிவரும் முத்தரும் சித்தரும்
தேவரும் மதிக்கும் சித்தி செய் மணியே

நான்முகன், திருமால், உருத்திரன் முதலிய மும்மூர்த்திகளும் வசிட்டர், விசுவாமித்திரர், பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலிய முனிவர்களும், மணிவாசகப் பெருந்தகை முதலிய முத்தர் பெருமக்களும் பதினெண் வகை சித்தர் பெருமக்களும் முப்பத்து முக்கோடி தேவர் கூட்டங்கள் யாவரும் வணங்கிப் போற்றும் எல்லா வல்ல சித்தி செய்யும் எம் இனிய இரத்தினமே!

654 தாழ்வு எலாம் தவிர்த்துச் சக மிசை அழியா
வாழ்வு எனக்கு அளித்த வளர்ஒளி மணியே

எனது இழிமுக நிலைகள் யாவும் ஒழித்து, இப் பூமண்டலத்தின் மீது என்றும் அழியாத பூரண அருள் வாழ்வினை எனக்கு ஈந்தருளிய, அருள் ஒளி ஓங்கிடும் எம் இனிய இரத்தினமே!

655 நவமணி முதலிய நலம் எலாம் தரும் ஒரு
சிவமணி எனும் அருட் செல்வ மா மணியே

கோமேதகம், நீலம், பவளம், புருடராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம் என்னும் ஒன்பது வகை இரத்தினங்கள் என்னும் செல்வ பாக்கியங்கள் யாவும் தருகின்ற ஒரு சுத்த சிவ இரத்தினம் என்னும் பேரருள் செல்வமாய எம் இனிய இரத்தினமே!

### *வாய்மை மந்திரமாய் விளங்கும் வகை*

656 வான் பெறற்கு அரிய வகை எலாம் விரைந்து
நான் பெற அளித்த நாத மந்திரமே

வான நாட்டவரும், மோன நாட்டவரும் அடைவதற்குச் சிறிதும் இயலாத வழிமுறைகள் யாவும் நான் அதிசீக்கிரத்தில் அடையும் பொருட்டுக் கொடுத்தருளிய, எம் இனிய பரநாத *மறைமொழியே!*

657 கற்பம் பலபல கழியினும் அழியாப்
பொற்பு உற அளித்த புனித மந்திரமே

பல யுகம் சேர்த்த கற்பகாலம் பலவாக, பலவாகக் கடந்திட்ட போதும், அழிவடையாத தெய்வத் தன்மை பொருந்திட அருளிய பரிசுத்தமாய *மறைமொழியே!*

658 அகரமும் உகரமும் அழியாச் சிகரமும்
வகரமும் ஆகிய வாய்மை மந்திரமே

இயற்கை உண்மைப் பொருளின் இயல்பினைக் குறிக்கும் அகர எழுத்தும், எல்லா உயிர்களின் பொதுவினைக் குறிக்கும் உகர எழுத்தும், எல்லாம் உடைய பதியின் தலைமையைக் குறிக்கும் சிகர எழுத்தும், எல்லாம் வல்ல இறைவனில் ஒன்றுபட்ட அருள் சக்தியைக் குறிக்கும் வகர எழுத்தும் ஆகி விளங்கும் எம் இனிய *மறைமொழியே!*



659 ஐந்து என, எட்டு என, ஆறு என, நான்கு என
முந்துஉறு மறை முறை மொழியும் மந்திரமே

சிவாய நம என்பது ஐந்து எழுத்தாகியும், ஓம், ஆம், ஔம், சிவாய நம என எட்டெழுத்தாகியும், ஓம் நம சிவாய என ஆறு எழுத்தாகியும், ஓம் சிவாய என நான்கு எழுத்தாகியும் விளங்கும் எனச் சுத்த வேதங்கள் தெரிவித்தருளும் எம் இனிய *மறைமொழியே!*

660 வேதமும் ஆகம விரிவுகள் அனைத்தும்
ஓத நின்று உலவாது ஓங்கு மந்திரமே

வேத மறைகள், சித்தாந்த நூல்கள் என்னும் பல வகையான சாத்திர விரிவுகள் யாவையும், உச்சரித்து நிலைபெற முயன்றாலும், குறையாது ஓங்கி ஒளிர்கின்ற எம் இனிய *மறைமொழியே!*

### *மாமருந்தாய் விளங்கும் வகை*

661 உடற்பிணி அனைத்தையும் உயிர்ப்பிணி அனைத்தையும்
அடர்ப்பு அறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே

குன்மம், குஷ்டம், காசம், புற்று முதலிய தீராத நோய்கள் பல, மலம் மாயை என்னும் ஐந்து வகையாகும் உயிர் நோய்கள் பல. அவை முற்றிலும் நீக்கியருளிய எம் பேரருள் *மருந்தே!*

662 சித்திக்கு மூலமாம் சிவமருந்து என உளம்
தித்திக்கும் ஞானத் திருவருள் மருந்தே

எல்லாம் வல்ல சித்திப் பேற்றிற்குக் காரணமாகும் மருந்து என, என் உள்ளத்தே இனிக்கும் சிவஞானப் பேரருள் *மருந்தே!*

663 இறந்தவர் எல்லாம் எழுந்திடப் புரியும்
சிறந்த வல்லபம்உறு திருவருள் மருந்தே

முந்தைய சிருஷ்டி காலங்களிலும், முந்தைய இயமன் ஆணையாலும் பின்னரும், தற்போதும், செத்துப் போனவர்கள் கணக்கிலர். அவர்கள் யாவரையும் மீளவும் உடலும் உயிரும் அறிவும் பெற்று எழுந்திடத் திருவருள் செய்யும் தெய்வீக ஆற்றல் பொருந்திய எம் பேரருள் *மருந்தே!*

664 மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு
கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே

சாக்காடு என்னும் வலிய வலிப்பு நோய் வந்திடாத வகையில் மனம் முதலிய அந்தக் கரணங்களின் மூலம், தெய்வீகப் பேராற்றல் பெற்றுக் கொள்ளும்படி வழிகாட்டியருளிய எம் பேரருள் மருந்தே!

665 நரைதிரை மூப்பு அவை நண்ணா வகை தரும்
உரை தரு பெருஞ்சீர் உடைய நல் மருந்தே

முடிவெளுத்தல், தோல் சுருங்குதல், தள்ளாமை உண்டாதல் ஆகிய இயலாமைகள் அணுகாதபடிப் புகழும் மரணமுறா வல்லபம் ஈந்திடும் பெரும் தகைமை பெற்ற எம் பேரருள் மருந்தே!

666 என்றே என்னினும் இளமையோடு இருக்க
நன்றே தரும் ஒரு ஞான மா மருந்தே

எக்காலம் ஆயினும் இளமையாம் அழகான வடிவத்தோடு விளங்க வளமை ஈந்திடும் ஓர் ஒப்பற்ற எம் பேரருள் மருந்தே!

667 மலப்பிணி தவிர்த்து, அருள் வலம் தருகின்றது ஓர்
நலத்தகை அது என நாட்டிய மருந்தே

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலமும் அதனுடன் திரோதானம், மகாமாயை என்னும் பெருமாயை ஆகிய உயிரினது ஐவகை நோய்களை அறவே நீக்கிக் கருணையாம் வல்லபம் ஈந்தருள்கின்ற ஒப்பற்ற வளம் பொருந்திய எம் பேரருள் மருந்தே!

668 சிற்சபை நடுவே திருநடம் புரியும்
அற்புத மருந்து எனும் ஆனந்த மருந்தே

திருச்சிற்றம்பல இடையில் அருள் நடம் செய்கின்ற அற்புத அதிசய மருந்து எனப் போற்றப்படுகின்ற இம்மை இன்பம் மறுமை இன்பம் பேரின்பமாம் எம் பேரருள் மருந்தே!



### *செம்பொன்னாய் விளங்கும் வகை*

669 இடைஉறப் படாத இயற்கை விளக்கமாய்த்
தடை ஒன்றும் இல்லாத் தகவுஉடை அதுவாய்
670 மாற்று இவை என்ன மதித்து அளப்ப அரிதாய்
ஊற்றமும் வண்ணமும் ஒருங்குஉடை அதுவாய்க்
671 காட்சிக்கு இனிய நற்கலையுடை அதுவாய்
ஆட்சிக்கு உரிய பன்மாட்சியும் உடைத்தாய்
672 கைதவர் கனவினும் காண்டற்கு அரிதாய்ச்
செய்தவப் பயனாந் திருவருள் வலத்தால்
673 உளம் பெறும் இடம் எலாம் உதவுக எனவே
வளம் பட வாய்த்து மன்னிய பொன்னே

எடுத்திட எடுத்திட இற்றுப்போகாதது, மெய்யறிவு வியாபகம் உடையது, தடைபடுதல் ஏதும் இல்லாத பெருந் தன்மையை உடையது, இவ்வளவு மாற்று உடையது என்று எண்ணிக் கணக்கிட இயலாதது, அருள் வலிவும் கருணைப் பொலிவும் ஒருசேரப் பொருந்தியது, கண்ணும் மனமும் கண்டு களிப்படையச் செய்வது, நேரிய கவர்ச்சியுடைய ஒளி மேன்மையானது, எங்கெங்கு எப்படி எடுத்து கையாளப்படினும் அங்கங்கே அது அதற்கு இடம் கொடுத்துப் பயனாகும் பல்வகை மாண்புடையது, துன்மார்க்கர்கள் கனவிலும் கூடக் கண்டு தரிசிப்பதற்குக் கிட்டாதது, சத்திய தரும சன்மார்க்கப் தவப் பயனாகும் திருவருள் வல்லபத்தால் கிடைத்ததே தெய்வத் தங்கம், அதனால் உள்ளம் கருதும் எவ்வகை இடங்களிலும் ஜீவகாருண்ய பெரும்பயனுக்கு உதவிடுக என்றே அருள் வளம் அடைவதற்கு எம்மிடமும் நிலைபெற்ற எம் இனிய தங்கமே!

674 புடம் படாத் தரமும் விடம் படாத் திறமும்
வடம் படா நலமும் வாய்த்த செம் பொன்னே

புடம் போட்டுச் சுத்திகரிக்க வேண்டாத இயற்கைத் தகுதியும் குறை ஏற்படாத அருள் வல்லபமும், ஒளி சுருங்குதல் இல்லாக் கருணை வளமையும் பொருந்திய எம் இனிய தெய்வத் தங்கமே!

675 மும்மையும் தரும் ஒரு செம்மையை உடைத்தாய்
இம்மையே கிடைத்து இங்கு இலங்கிய பொன்னே

இம்மை இன்பம், மறுமை இன்பம், பேரின்பம் ஈகின்ற ஒப்பற்ற உயர் தகுதியைப் பெற்றதாய், இவ்வுலக வாழ்விலேயே எனக்குக் கிடைத்து இவ்விடத்தே ஒளிர்கின்ற எம் இனிய தங்கமே!

676 எடுத்து எடுத்து உதவினும் என்றும் குறையாது
அடுத்துஅடுத்து ஓங்கும் மெய் அருளுடைப் பொன்னே

உயிர்க்குலத்திற்கு அள்ளி அள்ளிக் கொடுத்து உதவி புரிந்தாலும், எக்காலத்தும் குன்றாமல் மேலும் மேலும் ஒளிர்கின்றதாகிய சத்தியமும் கருணையும் உடைய எம் இனிய தங்கமே!

677 தளர்ந்திடேல், எடுக்கின் வளர்ந்திடுவேம் எனக்
கிளர்ந்திட உரைத்துக் கிடைத்த செம் பொன்னே

மெலிவடையேல்! அள்ளி அள்ளி வழங்கினாலும் உடன் வளர்ந்து நிறைவு செய்திடுவோம்! என்று எழுச்சியுடன் கூறியதோடு இப்பிறப்பிலேயே கிட்டிய எம் இனிய தெய்வத் தங்கமே!

678 எண்ணியதோறும் இயற்றுக என்று எனை
அண்ணி என் கரத்தில் அமர்ந்த பைம் பொன்னே

நினைத்த பொழுதெல்லாம் நித்திய அறம் செய்து மேலும் உருவாக்கிடுக எனக்கூறி எனது கைகளின் இடையே பொருந்தி விளங்கிய எம் இனிய பசுமைத் தங்கமே!

679 நீ கேண் மறக்கினும் நின்னை யாம் விட்டுப்
போகேம் என எனைப் பொருந்திய பொன்னே

நீ என் அன்பினது கேண்மையை மறந்துவிட்டாலும், உன்னை யாம் விட்டுப் போகமாட்டோம் எனக் கூறி என்னோடு இணைந்த எம் இனிய தங்கமே!

680 எண்ணிய எண்ணியாங்கு எய்திட எனக்குப்
பண்ணிய தவத்தால் பழுத்த செம் பொன்னே



நினைத்த படியெல்லாம் நினைத்தபடியெல்லாம் பயன் கொடுத்திட என்தனக்கு முன் செய்த தவப் பயனால் கருணை வலத்தால் என்னிடம் கனிந்தருள்கின்ற எம் தெய்வத் தங்கமே!

681 விண் இயல் தலைவரும் வியந்திட எனக்குப்
புண்ணியப் பயனால் பூத்த செம் பொன்னே

வானகத்து கடவுளரும் அதிசயித்திட என்தனக்கு ஜீவகாருண்ய தவப் பயனால் மலர்ந்திட்ட எம் இனிய தெய்வத் தங்கமே!

682 நால்வகை நெறியினும் நாட்டுக எனவே
பால்வகை முழுதும் பணித்த பைம் பொன்னே

கருப்பை, முட்டை, விதை, வியர்வை ஆகியன உண்டாக்கிய நான்கு வகையான உயிர்கட்கும் உதவி புரிக என என் வசத்து எல்லா உயிர்களும் வேண்டும்படிக் கட்டளையிட்டருளிய எம் இனிய பசுமைத் தங்கமே!

683 எழுவகை நெறியினும் இயற்றுக எனவே
முழுவகை காட்டி முயங்கிய பொன்னே

எழுவகைப் பிறவிகளாகும் உயிர்களது வளர்முறை யாவற்றிலும் பயன்படுத்தி மேம்படுக என்றே, முற்றிலும் பயன்பெறும்படியான வழிமுறைகளைச் செய்து என்னையும் அணைத்துக் கொண்டருளிய எம் இனிய தங்கமே!

### *அழியாப் பெருநிதியாய் விளங்கும் வகை*

684 எண்ணியபடி எலாம் இயற்றுக் என்று எனைப்
புண்ணிய பலத்தால் பொருந்திய நிதியே

நினைத்தபடி எல்லாம் நிறைவேற்றிடுக என்றே ஜீவகாருண்ய அற வலிமையால் என்னிடம் இணைந்த என் இனிய திரவியமே!

685 ஊழிதோறு ஊழி உலப்பு உறாது ஓங்கி
வாழி என்று எனக்கு வாய்த்த நல்நிதியே

யுகந்தோறும் யுகந்தோறும் அழிவுபடாமல் ஓங்கி ஒளிர்வதுடன் என்றும் வளநிலை பெற்று வாழ்வாயாக என்றே எனக்குக் கிடைத்த என் இனிய திரவியமே!

686 இதம்உற ஊழிதோறு(ம்) எடுத்து எடுத்து உலகோர்க்கு
உதவினும் உலவாது ஓங்கு நல்நிதியே

யுகந்தோறும் யுகந்தோறும் அன்புடன் அள்ளி அள்ளி உலக மக்கள் மற்றும் மன்னுயிர்களுக்கு உபகரித்தாலும் வற்றிப் போகாமல் மேலும் செழித்தொளிரும் என் இனிய திரவியமே!

687 இருநிதி, எழுநிதி, இயல் நவநிதி முதல்
திருநிதி எல்லாம் தரும் ஒரு நிதியே

நிலைபேறு உடையது சங்க நிதி; நாளும் குறையா வருவாயினைத் தருவது பதுமநிதி; அந்த இருவகை நிதியுடன் மகாபதுமநிதி, மகரநிதி, கச்சபநிதி, முகுந்தநிதி, குந்தநிதி, நீலநிதி, வரநிதி முதலான எழுவகை நிதியும் வைப்பு, உபநிதி, மாற்று, அமானிதம், யாகிதம், போக்கியம், வேதனம், ஆர்த்தம், புனர்பதம் முதலிய ஒன்பது நிதியுடன் அருள்நிதி யாவும் ஈந்திடுகின்ற என் இனிய திரவியமே!

688 எவ்வகை நிதிகளும் இந்த மா நிதியிடை
அவ்வகை கிடைக்கும் என்று அருளிய நிதியே

மேற்கூறப்பட்ட பல்வகைச் செல்வ நிதிகளும் அருள் செல்வத்தின்பால் ஜீவகாருண்யப் பயன்பாட்டால் முற்றிலும் கிடைக்கும் என்று தெரிவித்தருளிய என் இனிய திரவியமே!

689 அற்புதம் விளங்கும் அருட்பெரு நிதியே
கற்பனை கடந்த கருணை மா நிதியே

என்றும் இல்லாத அற்புத நிகழ்வுகளை விளங்கும்படிச் செய்யும் பெருங்கருணைத் திரவியமே! இம்மை மறுமை என்னும் ஏற்பாட்டு அமைவுகளுக்கும் அப்பாற்பட்டு ஒளிரும் எம் பேரருள் பெருந் திரவியமே!

690 நற்குண நிதியே சற்குண நிதியே
நிற்குண நிதியே சிற்குண நிதியே

சத்துவ குணப் பண்பு ஒளிரும் புண்ணிய திரவியமே! புனிதப் பண்பு ஒளிரும் சீர்மைத் திரவியமே! நிர்க்குணப் பண்பு ஒளிரும் நேரிய திரவியமே! மெய்ஞானப் பண்பு ஒளிரும் மேலாய என் இனிய திரவியமே!



### ஜோதி மலையாய் விளங்கும் வகை

691 பளகு இலாது ஓங்கும் பளிக்கு மாமலையே
வளம் எலாம் நிறைந்த மாணிக்க மலையே

பிளவு, வெடிப்பு, சிதர்வு முதலிய குறைகள் யாதுமிலாது ஓங்கி ஒளிரும் தூய பளிங்காய பெரும் சிகரமே! பல்வளமும் பூரணமாய் நிறைந்த மாணிக்கச் சிகரமே!

692 மதிஉற விளங்கும் மரகத மலையே
வதிதரு பேரொளி வச்சிர மலையே

தண்ணிய அருள் ஒளிரும் பச்சை மாமலையே! ஒப்பற்ற அருட்கதிர்ப் பிரகாசம் விளங்கும் வைர மாமலையே!

693 உரை மனம் கடந்து ஆங்குஓங்குபொன்மலையே
துரிய மேல் வெளியில் ஜோதி மா மாலையே

சொல்லும் வார்த்தைகளும், நினைக்கும் மனத்திற்கும் அப்பாற்பட்டு ஒளிரும் பொன் மலையே! மேலான சுத்த துரிய வெளியில் ஓங்கும் அருட்பிரகாசப் பெரும் சிகரமே!

### இன்பக் கடலாய் விளங்கும் வகை

694 புற்புதம், திரை, நுரை, புரை முதல் இலது ஓர்
அற்புதக் கடலே அமுதத் தண் கடலே

சுழலும் குமிழிகள், அசையும் அலைகள், பொங்கும் நுரைகள், கலந்திடும் நதிநீர்க் குறைகள் முதலானவை இல்லாத அற்புதச் சமுத்திரமே! என்றும் சாவா மருந்து தரும் தண்ணருட் சமுத்திரமே!

695 இருட் கலை தவிர்த்து ஒளி எல்லாம் வழங்கிய
அருட்பெருங் கடலே ஆனந்தக் கடலே

அறியாமையாம் இருள்நிலைகள் யாவும் அகற்றியதுடன் ஒளிரும் அறிவு நிலைகள் யாவும் ஈந்தருளிய பெருங்கருணை சமுத்திரமே! பேரின்பச் சமுத்திரமே!

696 பவக் கடல் கடந்து நான் பார்த்தபோது அருகே
உவப்புஉறு வளங்கொண்டு ஓங்கிய கரையே

பிறவி என்னும் பெருங்கடல் கடந்து, அடியேன்

நோக்கியபோது அண்மையில் உள்ளம் மகிழும்படியாக அருள்வளம் பெற்று ஓங்கிய கடல் கரையே!

***இயற்கைப் பொருள்களாய் விளங்கும் வகை***

697 என் துயர்ச் சோடைகள் எல்லாம் தவிர்த்து உளம்
நன்று உற விளங்கிய நந்தனக் காவே

எனது உயிரின் துன்ப வாட்டங்கள் யாவும் நீக்கி, என் உள்ளகத்தே அருள் நலம் ஓங்கிட என்றே பயன்தரும் நந்தாவனம் எனும் தெய்வச் சோலையே!

698 சேற்று நீர் இன்றி, நல் தீஞ்சுவை தரும் ஓர்
ஊற்றுநீர் நிரம்ப வுடைய பூந்தடமே

சகதி நிறைந்த தண்ணீராய் இல்லாமல் இனிய நற்சுவை தருகின்ற ஊற்று நீர் மிகவும் ஊறுவதாயுள்ள நறுமணம் நிறைந்த வண்பூந்தடாகமே!

699 கோடைவாய் விரிந்த குளிர்தரு நிழலே
மேடைவாய் வீசிய மெல்லிய காற்றே

வேனில் காலத்திலும் தழைத்துக் குளிர்ச்சி தரும் இனிய பெரு நிழலே! மேடான பகுதியிலும் கூட வீசிடும் மென்மையாம் குளிர் தென்றல் காற்றே!

700 களைப்பு அறக் கிடைத்த கருணை நல்நீரே
இளைப்பு அற வாய்த்த இன்சுவை உணவே

தாகவிடாய், மோகவிடாயினால் ஏற்படும் களைப்பு நீங்கும்படிக் கிடைத்த கருணையாம் தண்ணீரே! உடல் தளர்வும் உயிரின் தளர்வும் நீங்கும்படிக் கிடைத்த இனியசுவை நல் உணவே!

701 தென்னைவாய்க் கிடைத்த செவ்இள நீரே
தென்னை வான் பலத்தின் திருகு தீம் பாலே

தென்னையாம் தெய்வ மரத்தினில் காய்த்த அருட்பயன் தருகின்ற செவ்விளநீரே! அத்தெய்வத் தென்னையின் பயனாம் தேங்காய் திருகிப் பிழிந்த அருட்சுவை ஈந்திடும் தீம்பாலே!



702 நீர்நசை தவிர்க்கும் நெல்லிஅம் கனியே
வேர்விளை பலவின் மென்சுவைச் சுளையே

மோகம் எனும் தாகவிடாயினைத் தீர்க்கும் கருணையாம் நெல்லிப் பழமே! தெய்வப் பலாமரத்தின் தரும வேரினில் பழுத்த, மிருதுவாகிய இன்பச் சுளையே!

703 கட்டுமாம் பழமே கதலிவான் பழமே
இட்ட நல்சுவை செய் இலந்தைஅம் கனியே

ஒருமை உணர்வால் ஒட்டுறவான உயர் மாம்பழமே! உயிர்நேயம் எனும் தேன் கதலி வாழைப்பழமே! விரும்பும் இன்பச் சுவை ஈயும் எழில்மிகு இனிய இலந்தையின் கனியே!

704 புனித வான் தருவின் புதுமைஆம் பலமே
கனி எலாம் கூட்டிக் கலந்த தீஞ் சுவையே

சுத்த சன்மார்க்கமாம் உயர்வகைச் சாதி மரத்தினில் கனிந்த புத்தம் புதிய தீங்கனியே! இம்மை, மறுமை, ஒருமை ஆகிய மும்மை இன்பமாம் பழச்சாறில் கலந்திட்ட தீம் சுவையே!

705 இதம் தரு கரும்பில் எடுத்த தீஞ்சாறே
பதம்தரு வெல்லப் பாகின் இன் சுவையே

அருள் நலம் ஈயும் ஜீவ காருணியச் செங்கரும்பே! அக்கரும்பினில் மும்மைப் பயனாய்ப் பிழிந்தெடுத்த முதிர் இரசமே! உயிர்நேயமும் மனித நேயமும் ஒன்றாய்க் கலந்திட்ட வெல்லப் பாகின் நன்சுவையே!

706 சாலவே இனிக்கும் சர்க்கரைத் திரளே
ஏலவே நாவுக்கு இனிய கற்கண்டே

அருள் சித்தியின் தித்திப்பினை மிகவும் தருகின்ற வள்ளலாம் சர்க்கரைத் திரளே! துதிமணக்கும் நாவினுக்குச் சன்மார்க்கப் பெரும் சுவை தரும் அருட்பெரு நிலையாம் இனிய கற்கண்டே!

707 உலப்புஉறாது இனிக்கும் உயர் மலைத் தேனே
கலப்பு உறா மதுரம் கனிந்த கோல் தேனே

பெரும் தயவுத் தன்மை சிறிதும் வற்றிடாமல் இனிக்கின்ற

மலைத்தேனே! சமய, மதக் கலப்புச் சிறிதுமில்லாமல் இனிக்கின்ற சமரசமாம் கொம்புத் தேனே!

708 நவை இலாது எனக்கு நண்ணிய நறவே
சுவை எலாம் திரட்டிய தூய தீம் பதமே

தேனீ முதலிய உயிர்க்குலத்திற்குத் துன்பம் கொடுத்தல் இல்லாமல் இம்மையிலேயே கிடைத்த மலச் சார்பில்லா இனிய நறும்தேனே! புலன் இன்பம் முதலாக அருள் இன்பம் முடிவாக உள்ள எல்லா இன்பச் சுவையும் ஒன்றாகச் சேர்த்துத் திரட்டிய இனிய அமுதமே!

709 பதம் பெறக் காய்ச்சிய பசு நறும் பாலே
இதம் பெற உருக்கிய இளம் பசு நெய்யே

கடவுள் தானாகும் பரிணாமம் நிலைபெறக் காய்ச்சிய காராம் பசுவின் பாலே! அதன் வழி பேரின்பம் பொருந்திடக் காய்ச்சிய சுத்த சன்மார்க்க இளம்பசுவின் இளநெய்யே!

710 உலர்ந்திடாது என்றும் ஒருபடித் தாகி
மலர்ந்து நல்வண்ணம் வயங்கிய மலரே

அருள்நிலை குன்றாமல் என்றென்றும் ஒரே இயற்கையாய்ப் பூத்திட்ட நன்னிறம் பொருந்திய தெய்வ கற்பகப் பூவே!

711 இகம்தரு புவிமுதல் எவ்வுலகு உயிர்களும்
உகந்திட மணக்கும் சுகந்த நன்மணமே

நில உலகம் முதலாக உள்ள அனைத்துலகத்து உயிர்களும் விரும்பிட அருள் மணம் கமழ்கின்ற தெய்வ மலரின் சுகந்த நறுமணமே!

712 யாழ் உறும் இசையே, இனிய இன் இசையே
ஏழ் உறும் இசையே இயல் அருள் இசையே

யாழினின்று எழுகின்ற காதற் கீதமே! பேரின்பம் ஈகின்ற பின்னணியாம் இனிய கீதமே! ஏழ்சுர வகையான குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் முதலானவைகளால் பாடப்பெறும் தேவ கீதமே! கருணையாம் இயல்புடைய தெய்வ கீதமே!



713 திவள் ஒளிப் பருவம் சேர்ந்த நல்லவளே
அவளொடும் கூடி அடைந்ததோர் சுகமே

ஈர்க்கின்ற கவர்ச்சி மிளிரும் உடல்-உள்ளம்-உயிர்ப் பக்குவம் அடைந்த உயிர் இரக்கமுடைய அரம்பைப் பெண்ணே! அத்தெய்வ மங்கையுடன் கூடிப் பெற்றதோர் ஒருமை இன்பச் சுகமே!

714 நாத நல் வரைப்பின் நண்ணிய பாட்டே
வேத கீதத்தில் விளை திருப்பாட்டே

பரநாத எல்லையை அசத்தும் தோத்திரப் பாடலே! தூய வேத கீதங்களினால் உண்டாகும் தெய்வீகப் பண்ணின் பாடலே!

715 நன்மார்க்கர் நாவின் நவிற்றிய பாட்டே
சன்மார்க்க சங்கம் தழுவிய பாட்டே

காருண்ய நன்னெறியாளர் நாவினில் வெளிப்பட்ட தெய்வப் பாடலே! நற்குண சன்மார்க்க சங்கத்தவர்கள் ஒன்றிணைந்து பாடும் தெய்வீகப் பாடலே!

716 நம்புறும் ஆகமம் நவிற்றிய பாட்டே
எம் பலமாகிய அம்பலப் பாட்டே

அழியாத் தகுதிக்கான நம்பிக்கையையூட்டும் தெய்வ ஆகமத் திருப் பாடலே! எமக்கும் அருள் வல்லபம் ஊட்டும் திருச்சிற்றம்பலத் தெய்வீகப் பாடலே!

**அருட்பெரும் பதியாய் விளங்கும் வகை**

717 என் மனக் கண்ணே என் அருட் கண்ணே
என் இரு கண்ணே என் கணுண் மணியே

என் மன விழியே! என் கருணை விழியே! என் இரண்டு விழியே! என் இரண்டு விழிகளுள் சுழலும் மணிப் பாவையே!

718 என் பெரும் களிப்பே என் பெரும் பொருளே
என் பெரும் திறலே என் பெரும் செயலே

எனது பெரும் இன்பமே! எனது கருணையாம் பொருளே! என் பெரும் ஆற்றலே! என் பெரும் அருட்செயலே!

719 என் பெருந் தவமே என் தவப் பலனே
என் பெருஞ் சுகமே என் பெரும் பேறே

*என் உயரிய கொல்லா விரதமே! அக் கொல்லா விரதத்தால் கிடைத்த என் பெரும் புண்ணியமே! அப்புண்ணியப் பயனால் கிட்டிய என் பேரின்பச்சுகமே! அப்பேரின்பச் சுகத்தால் வாய்த்த என் பெரும் பாக்கியமே!*

720 என் பெரு வாழ்வே என்தன் வாழ் முதலே
என் பெரு வழக்கே என் பெருங் கணக்கே

*என் பேரின்ப வாழ்க்கையே! அவ்வாழ்க்கைக்கான ஆன்ம நேய முதலே! உயிரிரக்க வழக்கத்தால் உண்டாகும் பெரிய நியாயமே! அச் சீவகாருண்ய செயலுக்கான என் பெரிய நீதி என்னும் வரையறையே!*

721 என் பெரு நலமே என் பெருங் குலமே
என் பெரு வலமே என் பெரும் புலமே

*என் பெரிய அருள் வளமையே! என் பெரிய கருணைக் குலமே! என் பெரிய அருள் வலிமையே! என் பெரிய கருணை வளாகமே!*

722 என் பெரு வரமே என் பெருந் தரமே
என் பெரு நெறியே என் பெரு நிலையே

*என்றும் சாகாத என் பெரிய ஆசிர்வாதமே! அதனாலாய என் பெரிய அருட் சிரஞ்சீவியே! அதன்படி உலகுயிர்களை வாழ்ந்திடச் செய்யும் என் பெரிய மார்க்கமே! அதன் வழிக் கிடைத்த என் பெரிய கருணை அனுபவமே!*

723 என் பெருங் குணமே என் பெருங் கருத்தே
என் பெருந் தயவே என் பெருங் கதியே

*என் பெரிய தெய்வ அருட் பண்பே! என் பெரிய உயிர்நேயக் கொள்கையே! என் பெரிய ஜீவகாருண்ய சீலமே! என் பெரிய திருவருட் பயனே!*

724 என் பெரும் பதியே என் உயிர் இயலே
என் பெரு நிறைவே என் தனி அறிவே



*என் பெரிய அருள் நாயகனே! அந்நாயகன் மீது நான் கொண்ட தெய்வக் காதல் உணர்வே! என் பெரிய திருவருட் கற்பே! அதனால் கிடைத்த என் பெரிய ஒப்பற்றப் பதி ஞானமே!*

***இணையற்ற ஆன்ம உருக்கமாய் விளங்கும் வகை***

725 தோல் எலாம் குழைந்திடச் சூழ்நரம்பு அனைத்தும்
மேல் எலாம் கட்டுஅவை விட்டுவிட்டு இயங்கிட

*மீத்தோல், புடைத்தோல், வன்தோல், மென்தோல் முதலிய தோல் வகைகள் யாவும் இளகிக் குழைந்திட, வெண் நரம்பு, செந்நரம்பு, பசுநரம்பு, சிறுநரம்பு, பெருநரம்பு ஆகிய 72 ஆயிரம் நாடி நரம்பு வகைகளால் உடல் முழுவதும் கட்டிய கட்டு இற்று இற்றுப் போய்விட.*

726 என்புஎலாம் நெக்குநெக்கு இயல்இடை நெகிழ்ந்திட
மென்பு உடைத் தசை எலாம் மெய்உறத் தளர்ந்திட

*பேரெலும்பு, சிற்றெலும்பு, நீட்டெலும்பு, முடக்கெலும்பு வகைகள் யாவும் உருகி உருகி உடலின் நடுவே இளகிட, மெல்லிறைச்சி, கல்லிறைச்சி, மண்ணிறைச்சி, நீர் இறைச்சி முதலான தசை வகைகள் எல்லாம் உடலோடு தளர்ந்து போக.*

727 இரத்தம் அனைத்தும் உள் இறுகிடச் சுக்கிலம்
உரத்திடை பந்தித்து ஒரு திரள் ஆயிட

*நல்லிரத்தம், புல்லிரத்தம், கலவை ரத்தம் முதலிய இரத்த வகைகள் யாவும் உடலின் உள்ளேயே உறைந்துபோக, மேல்நிலை விந்து, கீழ்நிலை விந்து முதலிய சுக்கில நிலைகள் யாவும் கட்டுப்பட்டு மார்பினிடையில் ஒரே திரட்சி ஆக.*

728 மடல் எலாம் மூளை மலர்ந்திட அமுதம்
உடல் எலாம் ஊற்றெடுத்து ஓடி நிரம்பிட

*ஓங்கார மூளை, ஆங்கார மூளை முதலியவற்றின் இதழ்கள் யாவும் விரிந்து மலர்ச்சி பெற்றிட, தலை அமுதம், இடை அமுதம் முதலிய அமுத நிலைகள் யாவும் ஊற்றுப் பெருக்கெடுத்து உடல் முழுவதும் ஓடிக்கலந்து நிறைந்திட.*

729 ஒண்நுதல் வியர்த்திட ஒளிமுகம் மலர்ந்திட
தண்ணிய உயிர்ப்பினில் சாந்தம் ததும்பிட

பிரகாசப் பெருமை பொருந்திய ஆன்மபீடமாகிய நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பிட, உள்ளே அருள் ஒளி ஒளிர்ந்திட முக மண்டலத்தில் தெய்வீகப் பூரிப்புப் பூத்திட நிலைபெற்ற பிராணனில் தெய்வீக அமைதி துளும்பிட.

730 உண்நகை தோற்றிட உரோமம் பொடித்திடக்
கண்ணின் நீர் பெருகிக் கால்வழிந்து ஓடிட

சாந்த நிறைவாகிய உள்ளகத்தில் தெய்வப் புன்சிரிப்பு எழுந்திட, மண்ணின் அங்கமாகிய மயிர்க்கால்கள் யாவிலும் மெய்ச் சிலிர்ப்பு தோன்றிட, கண்களிலோ ஆனந்தக் கண்ணீர் மிகுந்து பாதங்களின் வழியே ஓடிட.

731 வாய் துடித்து அலறிட வளர்செவித் துணைகளிற்
கூய்இசைப் பொறிஎலாம் கும் எனக் கொட்டிட

வாய் உதடுகள் பதறிக் கதறிட, நலமோங்கும் இரு காதுகளில் தசநாத ஒலிகள் எழுந்து கும் கும் என ஓசை எழுப்பிட.

732 மெய் எலாம் குளிர்ந்திட மென்மார்பு அசைந்திடக்
கை எலாம் குவிந்திடக் கால் எலாம் சுலவிட

உடல் முழுவதும் சில்லிட, மிருதுவான நெஞ்சு ஆட்டம் கண்டிட, கைகள் முற்றும் சிரமீது கூடி வணங்கிட, இரு கால்கள் முழுமையும் சுழற்சி பெற்றிட.

733 மனம் கனிந்து உருகிட மதிநிறைந்து ஒளிர்ந்திட
இனம் பெறு சித்தம் இயைந்து களித்திட

கல்லை ஒத்த மனம் கனிந்துருகி நெகிழ்ந்திட, புத்தி தத்துவம் எல்லாம் முழுமதி பிரகாசம் பூரணமாய் ஒளிர்ந்திட, அடுத்து எண்ணப்படும் சித்தம் என்னும் தத்துவம் முழுவதும் புத்தி தத்துவ பிரகாசத்துடன் கூடி இகபரப் பெரு மகிழ்வு அமைந்திட..

734 அகங்காரம் ஆங்காங்கு அதிகரிப்பு அமைந்திடச்
சகம் காண உள்ளம் தழைத்து மலர்ந்திட

அடுத்து எண்ணப்படும் அகந்தையானது தான் ஆத்மா என்று அபிமானிப்பதைக் கைவிட, பின்னர் ஓங்கும் தற்போதமற்ற சாந்த நிறைவான உள்ளம் ஆறுதல் நிலையினை அடைந்து தழைத்து மலர்ந்திட.



735 அறிஉரு அனைத்தும் ஆனந்தம் ஆயிடப்
பொறிஉறும் ஆன்ம தற்போதமும் போயிடத்

ஆத்ம ஞான வடிவம் யாவும் பேரின்பமே ஆகிவிட ஐம்பொறிகளின் பால் காற்றாடி எனச் சுழலும் சுத்த ஆன்ம அறிவான உள்ளத்துத் தற்போத அலைவுகள் யாவும் அறவே அழிந்து போய்விட.

736 தத்துவம் அனைத்தும் தாம் ஒருங்கு ஒழிந்திடச்
சத்துவம் ஒன்றே தனித்துநின்று ஓங்கிட

முப்பத்தாறாகும் தூல சூக்கும காரண தத்துவங்கள் யாவும் ஒருசேர ஒழிந்து போய்விட, உயிரிரக்க சாத்விக குணம் ஒன்றே ஒப்பற்று ஓங்கி ஒளிர்ந்திட.

737 உலகுஎலாம் விடயம் உளஎலாம் மறைந்திட
அலகுஇலா அருளின் ஆசை மேற்பொங்கிட

மண் விஷய இச்சை, பெண் விஷய இச்சை, பொன் விஷய இச்சையாய் மும்மை உலகினில் விரிந்த நிலைமைகள் எல்லாம் சுவடற்றுப் போய்விட, அளவிடப்பட முடியாத இறைவனின் பெருங்கருணை மீது ஆர்வம் மேன்மேலும் ததும்பிப் பொங்கிட.

738 என் உளத்து எழுந்து உயிர்எல்லாம் மலர்ந்திட
என் உளத்து ஓங்கிய என்தனி அன்பே

என் ஆன்ம அறிவாம் உள்ளகத்தே தோன்றி, என் ஜீவப்பண்புகள் யாவும் பூத்துப் பொலிந்திட என் ஆன்ம அறிவாம் உள்ளத்து ஓங்கிய உத்தம ஆன்ம உருக்கமே.

739 பொன் அடி கண்டு அருட்புத்தமுது உணவே
என் உளத்து எழுந்த என்னுடை அன்பே

சுத்த பொன் ஒளி சுத்தவிண்வெளி மயமான இறைவனின் திருப்பாதங்களைத் தரிசனம் செய்து அதன் பயனாகச் சுத்த அருளமுதம் உட்கொண்டிட என்றே எனது ஆன்ம அறிவினில் தோன்றிய ஆன்ம உருக்கமே.

740 தன்னையே எனக்குத் தந்து அருள் ஒளியால்
என்னை வேதித்த என் தனி அன்பே

என்தன் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் ஆகிய நான்கிடத்தும் அருட்பெருஞ்ஜோதியாம் தன்னையே கொடுத்தருளியதுடன் கருணைப் பிரகாசத்தால் என் உடல், என் மனம், என் உயிர், என் ஆன்மா ஆகியவை அருள் ஒளிமயம் ஆகும்படி வேதி மாற்றம் செய்தருளிய ஒப்பற்ற என் உத்தம ஆன்ம உருக்கமே!

741 என்உளே அரும்பி என்உளே மலர்ந்து
என்உளே விரிந்த என்னுடை அன்பே

என்உத்தம ஆன்மானுபவ மொட்டு அரும்பி, அந்த ஆன்மானுபவத்திலே உத்தம அருள் அனுபவ மலர் பூத்திட, அந்த அருள் அனுபவத்திலே உத்தம சுத்த சிவானுபவப் பூ மணம் பரவிட என்றே, கருணை பாலித்தருளிய ஒப்பற்ற உத்தம ஆன்ம உருக்கமே!

742 என்உளே விளங்கி என்உளே பழுத்து
என்உளே கனிந்த என்னுடை அன்பே

என் உள்ளகத்தே உத்தம சுத்த சிவானுபவம் தழைத்து விளங்கும்படிச் செய்த பின்பு, அச்சிவானுபவம் முற்றிப் பழுத்துப் பக்குவமாகக் கனியும்படிச் செய்த பின்பு, அச்சிவானுபவம் முழுதும் கசிந்து குழையும்படியும் செய்த பின்பு அதனை அனுபவிக்கவும் செய்தருளிய என் ஒப்பற்ற உத்தம ஆன்ம உருக்கமே!

743 தன்உளே நிறைவுஉறு தரம்எலாம் அளித்தே
என்உளே நிறைந்த என்தனி அன்பே

அருட்பெருஞ்ஜோதியாம் தன் உள்ளகத்தே பூரணமாகும் சுத்த சிவ சாக்கிரம் முதலாகச் சுத்த சிவ துரியாதீத மேனிலை முடிவாக விளங்கும் தார தம்மிய அனுபவம் எல்லாம் யான் அனுபவிக்கும்படிச் செய்ததுடன் என் உள்ளகத்தே என்றும் பூரணமாகக் குடிகொண்டருளிய ஒப்பற்ற என் ஆன்ம உருக்கமே!

744 துன்புஉள அனைத்தும் தொலைத்து எனது உருவை
இன்புஉரு ஆக்கிய என்னுடை அன்பே

தற்போத அலைவு, வாதனை அலைவு, ஐம்புல அலைவு,



அந்தக்கரண அலைவு, முக்குண அலைவு, வினை அலைவு, செருக்காகும் மத அலைவு, அசுத்த மாயை அலைவு, அசுத்தா சுத்த மாயை அலைவு, சுத்த மாயை அலைவு மற்றும் தூல, சூக்கும, காரணப் பிறவி அலைவு முதலிய துன்பம் தருகின்ற எல்லா வகை அலைவுகளையும் ஒழித்து என் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் ஆகிய நான்கு வகை வடிவினையும் புணர்ந்து பேரின்ப வடிவமாகவே செய்தருளிய ஒப்பற்ற என் ஆன்ம உருக்கமே!

745 பொன்உடம்பு எனக்குப் பொருந்திடும்பொருட்டுஆ
என்உளம் கலந்த என்தனி அன்பே

சுத்த ஒளி உடலும், அதன் வழியே சுத்த பிரணவ உடலும் அதன் வழியே சுத்த ஞான உடலும் - எனக்குப் பொருந்திடும் காரணமாக என் ஆன்ம அறிவினில் பொருந்தி ஒன்றுபட்டருளிய ஒப்பற்ற என் ஆன்ம உருக்கமே!

746 தன்வசம் ஆகித் ததும்பி மேல்பொங்கி
என்வசம் கடந்த என்னுடை அன்பே

என் தத்துவங்கள் யாவும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் தத்துவங்களாகிப் புணர்ந்து தளும்பிப் புறத்தும் பூரித்துப் பொலிய, என் கட்டுப்பாட்டினையும் கடந்து பெருகிடும் ஒப்பற்ற என் ஆன்ம உருக்கமே!

747 தன்உளே பொங்கிய தண்அமுது உணவே
என்உளே பொங்கிய என்தனி அன்பே

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனின் உள்ளகத்தே பூரித்துப் பொலிந்த பேரருள் அமுதத்தை எளியேனும் உண்டிட என்றே என் ஆன்ம அறிவகத்தே பூரித்துப் பொலிந்த ஒப்பற்ற என் ஆன்ம உருக்கமே!

### *அருள் தீபமாய்த் திகழும் தன்மை*

748 அருள்ஒளி விளங்கிட ஆணவம் எனும்ஓர்
இருள்அற என்உளத்து ஏற்றிய விளக்கே

கருணைப் பிரகாசம் ஒளிர்ந்திட என்றே அனாதியிலே பற்றியிருந்ததாகிய ஆணவம் என்னும் நித்திய வலிவுடைய இருள் ஒழிந்திட, என் ஆன்ம அறிவகத்தே ஏற்றிவைத்த அருள் தீபமே!

749 துன்புஉறு தத்துவத் துரிசு எலாம் நீக்கிநல்
இன்புஉற என்உளத்து ஏற்றிய விளக்கே

உயிரினிடத்து நீங்காத் துன்ப அலைவினைத் தருகின்ற அதிகார நிலைபெற்ற தத்துவக் குறைவுகள் யாவற்றையும் ஒழித்துப் பேரின்பம் அடைந்திட என்றே என் ஆன்ம அறிவகத்தே ஏற்றிவைத்த அருள் தீபமே!

750 மயல்அற அழியா வாழ்வு மேன்மேலும்
இயல்உற என்உளத்து ஏற்றிய விளக்கே

மயக்க நிலையாகும் மருள் தாக்கம் யாவும் ஒழிந்துபோக, மரணமிலா வாழ்க்கை மிகவும் இயல்பாகவே பொருந்தி நிற்க, என் ஆன்ம அறிவகத்தே ஏற்றிவைத்த அருள் விளக்கே!

751 இடுவெளி அனைத்தும் இயல்ஒளி விளங்கிட
நடுவெளி நடுவே நாட்டிய விளக்கே

உண்டாக்கி வைத்த இந்திரிய, கரண, ஜீவ, பகுதி, கலை, மாயை முதலிய தத்துவ வெளிகள் யாவற்றிலும் அருள் ஒளி பிரகாசித்திட என் ஆன்மாகாசத்தின் இடையில் ஒளிரும்படி நிலை நிறுத்திய அருள் தீபமே!

752 கருவெளி அனைத்தும் கதிர்ஒளி விளங்கிட
உருவெளி நடுவே ஒளிர்தரு விளக்கே

ஜீவாகாசம் முழுதும் கதிரவன் பிரகாசம் பூரணமாய் ஒளிர்ந்திட என் ஆன்மாகாசத்தின் இடையில் பிரகாசிக்கின்ற அருள் தீபமே!

753 தேற்றிய வேதத் திருமுடி விளங்கிட
ஏற்றிய ஞான இயல்ஒளி விளக்கே

சுத்த வேதாந்த அனுபவ நிலை ஒளிர்ந்திட என்றே என் ஆன்மாகாசத்தில் இயல்பொளி ஒளிரும்படிச் செய்தருளிய மெய்யறிவாகிய அருள் தீபமே!

754 ஆகம முடிமேல் அருள்ஒளி விளங்கிட
வேகமது அறவே விளங்கு ஒளி விளக்கே

சுத்த சித்தாந்த அனுபவ நிலை ஒளிர்ந்திட என்றே மும்மலங்



களும் ஒழிந்துபோக மேலும் ஆங்காங்கே அருள் ஒளி பிரகாசித்திட விளங்குகின்ற அருள் தீபமே!

755 ஆரியர் வழுத்திய அருள்நிலை அனாதி
காரியம் விளக்கும் ஓர் காரண விளக்கே

வேத வித்துக்களாம் ஆரியர்களால் வாழ்த்தப்படுகின்ற தனு, கரண, புவன, போகங்கள் எனும் அனாதி மாயா காரியம் விளக்கிட என்றே ஒளிரும் ஒப்பற்ற, காரணமாகும் அருள் தீபமே!

### *அருள் நிலவாய் விளங்கும் வகை*

756 தண்ணிய அமுதே தந்து எனது உளத்தே
புண்ணியம் பலித்த பூரண மதியே

உடல், மனம், உயிர், அறிவு எல்லாம் குளிர்ந்திடும் அருள் அமுதத்தினைக் கொடுத்து என்தன் கருத்தகத்தே உயிர்நேய அறப்பயன் கிடைத்திட என்றே பிரகாசிக்கின்ற முழுமையாகிய அருள் நிலவே!

757 உய்தர அமுதம் உதவி என் உளத்தே
செய்தவம் பலித்த திருவளர் மதியே

எளியேன் மேம்பட என்றே, அருள் அமுதத்தைக் கொடுத்ததுடன் என் கருத்தினிடத்தில் உயிர்நேய அறப்பயன் பலித்திட என்றே பிரகாசித்து, அருள் செல்வம் வளர்ந்திடச் செய்யும் முழுமையாகிய எம் அருள் நிலவே!

758 பதிஎலாம் தழைக்கப் பதம் பெறும் அமுத
நிதிஎலாம் அளித்த நிறைதிரு மதியே

நான்முகன் பதம் முதலாகப் பரசிவபதம் முடிவாக என்பால் செழித்து ஓங்க என்றே அருள் அமுத வளங்கள் யாவும் எனக்கு ஈந்தருளிய எம் பூரண அருள் நிலவே!

759 பால்எனத் தண்கதிர் பரப்பி எஞ்ஞான்றும்
மேல்வெளி விளங்க விளங்கிய மதியே

தூய பால் நிறம் போன்ற குளிர்ந்த அருள் அமுத கிரணங்களை வீசிப் பிரகாசிக்கச் செய்து, எக்காலத்தும் அகிலாண்ட

பிரமாண்டம் எனும் மேல்வெளிகள் யாவும் ஓங்க ஓங்கிய எம் தண் அருள் நிலவே!

*கருணை மழையாய் விளங்கும் வகை*

760 உயங்கிய உள்ளமும் உயிரும் தழைத்திட
வயங்கிய கருணை மழை பொழி மழையே

வாடித் தளர்ந்த என் உள்ளகமும், அதன் சார்பாய என் ஆத்மப் பண்பும் ஓங்கிச் செழித்திட என்றே, என் உயிர் அகத்தே விளங்கிக் கருணை மழை பெய்தருளும் அருள் மழையே!

761 என்னையும் பணிகொண்டு என்னுளே நிரம்ப
மன்னிய கருணை மழைபொழி மழையே

எளியேனையும் தன் குற்றேவல் பணிக்கென ஏற்றுக்கொண்டு, என் உள்ளகத்தே நிறையும்படியாக மாறுபடாப் பேறுடையதாய் நிலையான கருணை மழை பெய்தருளும் அருள் மழையே!

762 உளம்கொளும் எனக்கே உவகை மேற்பொங்கி
வளம்கொளக் கருணை மழைபொழி மழையே

இறைவன் திருவுளம்கொண்டு ஏற்றருளிய என்தனக்கு ஆத்ம திருப்தி ததும்பிப் பொங்கிட, அருள் வளம் யாவும்பெற்றிட கருணை மழை பெய்தருளும் அருள் மழையே!

763 நலம்தர உடல், உயிர், நல்அறிவு எனக்கே
மலர்ந்திடக் கருணை மழைபொழி மழையே

உடல், உள்ளம், உயிர் யாவும் நன்மையாம் வளம் பெறவும் என்தனக்கு அருள் ஐந்தறிவு விளங்கிப் பூத்திடவும் என் உள்ளத் தடாகத்தே கருணை மழை பெய்தருளும் அருள் மழையே!

764 தூய்மையால் எனது துரிசுஎலாம் நீக்கி நல்
வாய்மையால் கருணை மழைபொழி மழையே

உத்தம ஜீவகாருண்ய உணர்வினால் மட்டுமே எனது குறைகள் யாவும் அணுவளவும் நில்லாமல் அகற்றி, உத்தமச் சத்திய உணர்வினால் என் உள்ளத் தடாகத்தே கருணை மழை பெய்தருளும் அருள் மழையே!



*அருட்சுடராய் விளங்கும் தன்மை*

765 வெம் மல இரவு அது விடி தருணம் தனில்
செம்மையில் உதித்து உளம் திகழ்ந்த செஞ்சுடரே

வலிதான மனமாயை இரவு விடிகின்ற நேரம் பார்த்து என் உள்ளகத்தே செவ்விதாக உதயம் செய்தருளும் பொன் மயமான எம் அருட் கதிரோனே!

766 திரை எலாம் தவிர்த்துச் செவ்வியுற்று ஆங்கே
வரை எலாம் விளங்க வயங்கு செஞ்சுடரே

மாயை அலைவுகள் யாவும் நீக்கியருளிய நேரத்தில் அவ்விடத்தே பொன்மயமாய்ப் பொருந்தி என் உள்ளமாகிய சிகரத்தில் அகம் புறம் முழுவதும் அருள் ஒளி ஓங்கிட என்றே உதயம் செய்தருளும் எம் அருட் கதிரோனே!

767 அலகு இலாத் தலைவர்கள் அரசு செய் தத்துவ
உலகு எலாம் விளங்க ஓங்கு செஞ்சுடரே

பிரமபதம், விஷ்ணுபதம்,ருத்ரபதம், மயேச்சுர பதம், சதாசிவ பதம், விந்துபதம், நாதபதம், பரவிந்து பதம், பரநாதபதம், பராசக்தி பதம், பரசிவ பதம் என்னும் அளவிட முடியாத கடவுளர்கள் ஆட்சி செய்கின்ற தூல, சூக்கும, காரணமாகிய தத்துவ, புவன, போக பதங்கள் யாவும் ஓங்கிட என்றே அருள் பிரகாசம் விளங்கும்பொன் மயமான எம் அருட் கதிரோனே!

768 முன்உறு மலஇருள் முழுவது நீக்கியே
என் உள வரைமேல் எழுந்த செஞ்சுடரே

முன் அமைந்த பல்வேறு பிறவிகள் தோறும் சம்பாதித்துச் சேமித்த மலம், மாயை என்னும் இருள் நிலைகள் முழுவதையும் போக்கிடச் செய்து என் உள்ளகமாகிய சிகரத்தின் மீது உதயம் செய்தருளும் பொன் மயமான எம் அருட் கதிரோனே!

769 ஆதியும் நடுவுடன் அந்தமும் கடந்த
ஜோதியாய் என்உளம் சூழ்ந்த மெய்ச்சுடரே

தோற்றமும், வளர் நிலையும், முடிவும் ஆகிய நிலைகள் யாவும் கடந்து அருட்பிரகாசமாய் என் உள்ளகத்தே நிறைந்தருளும் சத்தியமாய எம் அருட் கதிரோனே!

*அருட் கனலாய் விளங்கும் வகை*

770 உள்ஒளி ஓங்கிட உயிர்ஒளி விளங்கிட
வெள்ஒளி காட்டிய மெய் அருட் கனலே

என் உள்ளகத்தே அருட்பிரகாசம் விளங்கிட, என் ஆன்மாவில் சிவப்பிரகாசம் ஓங்கிட, வெண்மையாம் தோற்றத்துடன் பூரணமாய் ஒளிரும் எமது சத்திய கருணைப் பிழம்பே!

771 நலம்கொளப் புரிந்திடு ஞான யாகத்திடை
வலம் சுழித்து எழுந்து வளர்ந்த மெய்க் கனலே

உலக உயிர்கள் வளம்பெற எப்போதும் மேம்பாட்டினையே கருதும் மெய்ஞான மயமான வேள்வியின் நடுவே பிரதட்சணமாய்ச் சுழன்று ஓங்கிய எம் சத்திய அருட் பிழம்பே!

772 வேதமும் ஆகம விரிவும் பரம்பர
நாதமும் கடந்த ஞான மெய்க்கனலே

வேதங்களின் வளர்நிலையும், ஆகமமாம் தரும நூல்களின் வளர் நிலையும் தன்னை அறியும் பரநாத நிலை அனுபவமும் கடந்து சித்தி பேறுகள் யாவும் ஈய வல்ல பரம் பரநாதம் என்னும் சிவநிலையும் கடந்து ஒளிரும் மெய்ஞ்ஞானமாகிய எம் (தெய்வ) அருட் பிழம்பே!

773 எண்ணிய எண்ணிய எல்லாம் தர எனுள்
நண்ணிய புண்ணிய ஞான மெய்க் கனலே

கருத்தில் கருதியவை யாவும் கருதியபடியே எளியேன் அடைந்து மகிழ என் உள்ளகத்தே எழுந்தருளிய உயிர்நேய அறப் பயனாகும் எம் அருட் பிழம்பே!

774 வலம்உறு சுத்த சன்மார்க்க நிலை பெறு
நலம்எலாம் அளித்த ஞான மெய்க்கனலே

கடவுளுடன் ஒன்றுபடும் வெற்றி வாய்ப்பினைத் தருவது சுத்த சன்மார்க்கப் பெருநிலை ஒன்றே. அந்த உத்தம உயிர்நேய அனுபவ நிலையால் எல்லா வளமும் ஈந்திடுகின்ற எம் சத்திய ஞான அருட் பிழம்பே!



*அருட் பரஞ்சுடராய் விளங்கும் வகை*

775 இரவொடு பகல்இலா இயல்பொது நடம்இடு
பரம வேதாந்தப் பரம்பரஞ் சுடரே

இரவு என்றும் பகல் என்றும் இல்லாமல் என்றும் ஒரே நிலையாகி, உயிர்களாகிய பொற்சபையில் பொதுநடம், ஆனந்தக் கூத்து இயற்றுகின்ற உத்தம வேத முடிவில் ஓங்கி ஒளிர்கின்ற பராபர நிலைக்கும் மேம்பாடு உடைய பரம்பரமாய எம் அருட் சோதியே!

776 வரநிறை பொதுஇடை வளர்திரு நடம்புரி
பரம சித்தாந்தப் பதி பரஞ்சுடரே

உயிர்நேயப் புண்ணியம் பூரணமாக என்றே உயிர்களாகிய பொன்னம்பலத்தின் ஓங்கி ஆனந்த அருள் நடம் செய்தருளும் உத்தம சித்தாந்த பரசிவ நிலையாய் ஒளிரும் மேலான எம் அருட் சோதியே!

777 சமரச சத்தியச் சபையில் நடம்புரி
சமரச சத்தியத் தற்சுயஞ் சுடரே

நாதாந்தம் முதலாய ஆறந்தங்களின் சமரச உண்மை அனுபவ நிலையாகி மெய்ஞ்ஞான மன்றின் சமரச நிலைக்கு மேல் ஆறந்தசமரசமாகி அருள் நடனம் செய்தருள்கின்ற எம் அருட் சோதியே!

*அருட்பெருஞ்ஜோதியாய் விளங்கும் வகை*

778 சபை எனது உளம்எனத் தான் அமர்ந்து எனக்கே
அபயம் அளித்ததோர் அருட்பெருஞ் ஜோதி

என்தன் உள்ளம் அருட்சபை என்றே, தானே விரும்பி வீற்றிருந்தருளி, எனக்கே தன் திருப்பாத அடைக்கலத்தை ஈந்திட்ட ஒப்பற்ற எம் அருட் பெருஞ்ஜோதியே!

779 மருள் எலாம் தவிர்த்து வரம்எலாம் கொடுத்தே
அருள் அமுது அருத்திய அருட்பெருஞ் ஜோதி

மலம், மாயை, மயக்கம் ஆகியவை எல்லாம் நீக்கி, உயிர்நேயப் பேரறத்தால் கிடைக்கும் பேரின்பப் புண்ணியம்

யாவும் ஈந்து, கருணையாம் அமுதத்தை ஊட்டி அருளிய எம் அருட் பெருஞ் ஜோதியே!

780 வாழிநின் பேரருள் வாழிநின் பெருஞ்சீர்
ஆழிஒன்று அளித்த அருட்பெருஞ் ஜோதி

திரு அருள் ஆணைச் சக்கரத்தை யானே செலுத்தும்படி அருளிய எம் அருட் பெருஞ்ஜோதியே! நினது பெருங்கருணை வாழ்ந்திடுக! நினது பெரும்புகழ் வாழ்ந்திடுக!

781 என்னையும் பொருள் என எண்ணி என் உளத்தே
அன்னையும் அப்பனும் ஆகி வீற்றிருந்து

எளியனாகிய என்னையும் அருளாட்சி புரியும் தகுதி உடையவன் எனக் கருதி, என் கருத்தகத்தே அருட்தாயும் அருட் தந்தையுமாய் அமர்ந்தருளி.

782 உலகுஇயல் சிறிதும் உளம் பிடியா வகை
அலகுஇல் பேரருளால் அறிவது விளக்கிச்

உலகியல் அலைவுகள் சற்றும் என் உள்ளகத்தே பற்றிடாத நிலையில் அளவற்ற உயர் கருணையால் நான் அறிய வேண்டியவற்றை எல்லாம் விளக்கம் செய்தருளி.

783 சிறுநெறி செல்லாத் திறன் அளித்து அழியா
உறுநெறி உணர்ச்சி தந்து ஒளிஉறப் புரிந்து

துன்மார்க்கமாக இழிந்த வழிகளில் நான் பழகிடா வண்ணம் அருள் வலிமையைக் கொடுத்தருளி, எவ்வுயிரையும் தம் உயிராகக் காணும் சன்மார்க்கப் பெருநீதிநெறி உணர்ச்சியை நிலைபேறாகப் பின்பற்றச் செய்து என் உயிரும் என் உள்ளமும் என் உடலும் ஒளிமயமாகும்படிச் செய்தருளி.

784 சாகாக் கல்வியின் தரம்எலாம் உணர்த்திச்
சாகா வரத்தையும் தந்து மேன்மேலும்

மரணமிலாக் கலையின் சுத்த தேக, பிரணவ தேக, ஞான தேக ஆற்றல் எல்லாம் உணரும்படிச் செய்து, அம் மூவகையாம் மரணமிலா ஆசிர்வாத ஆற்றலையும் எனக்கு ஈந்து மேற்கொண்டும் மேற்கொண்டும்.



785 அன்பையும் விளைவித்து அருட் பேரொளியால்
இன்பையும் நிறைவித்து என்னையும் நின்னையும்

ஆன்ம உருக்கத்தினை இடைவிடாது என்பால் வளர்த்துப் பூரணமாக்கி அதன் வழி கருணையாம் அருட்பெருஞ்ஜோதிப் பேரின்பத்தினை நிறையும்படிச் செய்தருளி, அடியனாகிய என்னையும் ஆண்டவனாகிய நின்னையும்.

786 ஓர்உருவு ஆக்கி, யான் உன்னியபடி எலாம்
சீர்உறச் செய்து, உயிர்த்திறம் பெற, அழியா

ஒரே வடிவமாகி நான் கருதியபடி எல்லாம் செழிக்கச் செய்தருளி, எனது ஆன்மப் பண்பு அருட்பெருஞ்ஜோதி ஆற்றல் பண்பினைப் பெற்று விளங்கிட.

787 அருள் அமுது அளித்தனை, அருள்நிலை ஏற்றினை
அருள் அறிவு அளித்தனை அருட்பெருஞ் ஜோதி

கருணையாகிய அமுதம் உண்ணும்படிச் செய்தருளினாய்! கருணையாகிய நின் பீடத்தில் என்றும் வீற்றிருக்கச் செய்திட்டாய்! கருணையாகிய நின் ஞான பாக்கியத்தையும் கொடுத்திடச் செய்தாய்! எம் அருட்பெருஞ் ஜோதியே!

788 வெல்க நின் பேரருள் வெல்க நின் பெருஞ்சீர்
அல்கல் இன்று ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

நீக்கமின்றி எங்கும் நிறைந்து விளங்கும் எம் அருட் பெருஞ்ஜோதி! நின் பெருங்கருணை வெற்றி பெறுவதாகுக! நினது அருட் பெரும்புகழ் வெற்றி பெறுவதாகுக!

789 உலகு உயிர்த் திரள் எலாம் ஒளிநெறி பெற்றிட
இலகும் ஐந்தொழிலையும் யான் செயத் தந்தனை

எல்லா உலகத்து எல்லா உயிர்க் கூட்டமும் அருட்பிரகாச மார்க்கத்தினைப் பெற்றிட என்றே, விளங்கிடும் அருள் பஞ்ச கிருத்தியங்களை யான் ஒருவனே புரியும்படிச் செய்தருளி னாய்!

790 போற்றி நின் பேரருள் போற்றி நின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட் பெருஞ் ஜோதி

அருள் வல்லபத்தால் ஒளிர்ந்திடும் எம் அருட்பெருஞ் ஜோதியே! நினது பேரருள் வாழியவே! நின் பெரும்புகழ் வாழியவே!

791 மூவரும் தேவரும் முத்தரும் சித்தரும்
யாவரும் பெற்றிடா இயல் எனக்கு அளித்தனை

சம்பந்தர், அப்பர், சுந்தரரும், நவநிலைத் தலைவர்களும், மாணிக்கவாசகப் பெருந்தகையும், கருமயோக ஞான சித்தர் களும் மற்றும் எத்தகையவரும் அடைந்திடாத இயற்கை உண்மையாம் அருள் வாழ்வினை எனக்கே கொடுத்தருளி னாய்!

792 போற்றி நின் பேரருள் போற்றி நின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

கருணை வல்லபத்தால் மட்டுமே ஒளிரும் எம் அருட்பெருஞ் ஜோதியே! நினது பேரருள் வாழியவே! நினது பெரும்புகழ் வாழியவே!

793 சித்திகள் அனைத்தையும் தெளிவித்து எனக்கே
சத்திய நிலைதனைத் தயவினில் தந்தனை

அண்டசித்தி பிண்டசித்தி முதலிய தத்துவ தாத்விக சித்திகள், மற்றும் எல்லாம் வல்ல சித்தி ஆகிய யாவற்றையும் தெள்ளத் தெளியும்படிச் செய்தருளி என் தனக்கே இயற்கை உண்மையாம் அருட்பெரும் சித்தி நிலையினைப் பெரும் கருணையால் தந்தருளினாய்!

794 போற்றி நின் பேரருள் போற்றி நின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

கருணை வல்லபத்தால் மட்டுமே எங்கும் ஒளிரும் எம் அருட்பெருஞ் ஜோதியே! நினது பேரருள் வாழியவே! நினது பெரும்புகழ் வாழியவே!

795 உலகினில் உயிர்களுக்கு உறும் இடையூறு எலாம்
விலக, நீ அடைந்து விலக்குக, மகிழ்க

உலகத்து உயிர்க்கூட்டங்கட்குப் பொருந்தும் உடல்துன்பம், உள்ளத்துன்பம், உயிர்த்துன்பம் ஆகிய துன்பங்கள் யாவும்



நீங்கும்படி அங்கு அங்கு நீயே சென்றருள்க, அத்துன்ப அலைவுகள் யாவினையும் நீக்கியருள்க. அதனால் பெருங்களிப்படைக!

796 சுத்த சன்மார்க்கச் சுகநிலை பெறுக
உத்தமன் ஆகுக, ஓங்குக என்றனை

உத்தமோத்தம உயிர்நேயமாம் பேரின்ப நிலையை நீயே உரிமையாகப் பெற்றிடுக! அதனால் அருட்பெரும் கடவுளாகிய பரமோத்தமனும் நீயே ஆகி விளங்கிடுக! அந்நிலையால் எங்கும் விளங்கி எல்லா உயிர்கட்கும் என்றென்றும் இன்பளித்திடுக என்று அனுக்கிரகம் செய்திட்டாயே!

797 போற்றி நின் பேரருள் போற்றி நின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

அவ்வாறு அருள் வல்லபத்தால் எங்கும் ஒளிரும் எம் அருட்பெருஞ் ஜோதியே! நின் பெருங் கருணை வாழியவே! நினது பேரருட் பெரும் புகழ் வாழிய வாழியவே!

798 அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி

அருட்பெருஞ் ஜோதியாம் பெருங்கருணைப் பிரகாசமே!
அருட்பெருஞ் ஜோதியாம் பெருங்கருணைப் பிரகாசமே!
அருட்பெருஞ் ஜோதியாம் பெருங்கருணைப் பிரகாசமே!
அருட்பெருஞ் ஜோதியாம் பெருங்கருணைப் பிரகாசமே!

போற்றி! போற்றி! போற்றி! போற்றி!

திருச்சிற்றம்பலம்.

## அருட்பெருஞ் ஜோதி அகவல் : கலைச்சொல் விளக்கம்

| | | |
|---|---|---|
| | உ | : பொதுநிலையில் எல்லா உயிரிலும் இறைவன் விளங்குவதைக் குறிக்கும். மரபுக் குறி. |
| | திருச்சிற்றம்பலம் | : சிறப்பு நிலையில் பக்குவம் பெற்ற உயிரில் இறைவன் விளங்குவதைக் குறிக்கும் மரபுக் குறி. |
| 1 | அருட்பெருஞ் ஜோதி | : பெருங்கருணையும் பேரறிவுமுடைய பேரின்பப் பொருள். |
| 5 | ஆகமமுடிமேல் | : சித்தாந்த எல்லை மீது. |
| | ஆரணமுடிமேல் | : வேதாந்த எல்லை மீது. |
| 7 | இகநிலை | : இம்மை உலகு இயல்பு. |
| | பரநிலை | : மறுமை உலக இயல்பு. |
| 18 | ஆறாறு | : 24 ஆன்மதத்துவம் 7 வித்தியாதத்துவம் 5 சுத்ததத்துவம். |
| 19 | ஐயமும் திரிபும் | : சந்தேகமும், மாறுபாடும். |
| 21 | ஒன்றுஎன | : இறைவன் ஒன்றே என; இறைவனும் அருட்சத்தியும் என |
| 32 | அத்துவிதச்சபை | : மலமும், மாயையும், நீங்கிய இறைவனுடன் ஒன்றுபடும் ஆன்மத் திருச்சபை. |
| 33 | தூய கலாந்தம் | : ஆன்மாவிற்கு மெய்ஞ்ஞானத் தகுதியை உண்டாக்கும் ஒளி ஆற்றல் முடிவுகள். |
| 35 | ஞான யோகாந்தம் | : ஆன்மாவிற்கு அலைவற்ற தன்மையை உண்டாக்கும் நிட்டைகளின் முடிவு. |
| 37 | விமலபோதாந்தம் | : ஆன்மாவிற்கு அருள்அறிவை உண்டாக்கும் மருளற்ற ஞானநிலையின் முடிவு. |

| | | | |
|---|---|---|---|
| 39 | பெரியநாதாந்தம் | : | ஆன்மா தன்னை உணரும் நிலையாகிய பரநாத முடிவு. |
| 41 | சுத்த வேதாந்தம் | : | பரதுரிய அனுபவ மேல்நிலை. |
| 42 | சுத்த சித்தாந்தம் | : | பரமுத்தி அனுபவ மேல் நிலை. |
| 45 | தகர மெய்ஞ்ஞானம் | : | மல உடலை மாண்புறு பொன்னுட ளாக்கும் உண்மை அறிவு நிலை. |
| 47 | தத்துவாதீதம் | : | 36 தத்துவங்களின் அனுபவ முடிவு. |
| 65 | துரியம் | : | விழிப்பு, கனவு, உறக்கம் என்னும் சுத்த அவத்தைகளின் முடிவாகிய அறிதுயில் நிலை. |
| 71 | சுக்கிராதீதம் | : | நனவில் உறக்கம் நிகழும் ஓர் சுத்தவத்தை. |
| 75 | நவம் தவிர் நிலை | : | பிரமன் நிலை முதல் பரநாத நிலைவரை கிடைக்கும் அனுபவத்திற்கு மேற்பட்ட நிலைகள். |
| 77 | உபய பக்கங்களும் | : | அனுபட்சம் (சம்பு பட்சம்) பரமாணுபட்சம் ஆகிய இரு ஐந்தொழில் நிலைகள். |
| 81 | மதாதீதம் | : | [33 கலாந்தம் முதல் 42 சித்தாந்தம் வரையிலான] கொள்கை முடிவின் எல்லை. |
| 117 | தனுகரணாதிகள் | : | உடல் கூறு, மனக்கூறு முதலானவைகள். |
| 145 | சத்தர்கள் | : | அண்டம், பிண்டம், ஐம்பூதம், சர, அசர உயிர்கள் ஆகியவற்றினைச் செயல் படுத்தும் அகநிலை ஆற்றல் பெற்ற தெய்வ நிலையினர். |
| 147 | சத்திகள் | : | மேற்கூறியபடிச் செயல்படுத்தும் புற நிலை ஆற்றல் பெற்ற தெய்வநிலையினர். |
| 150 | ஐந்தொழில் | : | தோற்றுவித்தல், பாதுகாத்தல், துரிசு நீக்குதல், பக்குவம் வருவித்தல், பயன் |



| | | | |
|---|---|---|---|
| | | | தருவித்தல் முதலிய ஐந்தொழில் கடவுளர் செயல்கள். |
| 173 | சிகரமும் வகரமும் | : | எல்லாம் வல்லானையும், பிரிவடையாத அருளையும் குறிக்கும் எழுத்துகள். |
| 173- | உகரமும் அகரமும் | : | காத்தலைச் செய்யும் எழுத்தும் அருட் பெருஞ்ஜோதி அறிவினை விளக்கிடும் எழுத்தும். |
| 175 | உபரச வேதி | : | பரிகிப்பதால் உலோகத்தைப் பொன் னாக்கும் பரிசனவேதி; மருந்துவகையால் உலோகத்தைப் பொன்னாக்கும் ஔஷதி வேதி. |
| | அபரமும் பரவமும் | : | சாத்திரத்தால் அறிவதும், அனுபவத்தால் அறிவதும். |
| 183 | சிவதுரியம் | : | பரதுரியத்திற்கு மேற்பட்ட நான்காம் நிலை. குருதுரியம் என்றும் பெயர். கடவுள் வடிவம் தானாகிய நிலைபேறு அல்லது சமரச சன்மார்க்க நிலை பேறு. |
| 187 | சேதனப் பெருநிலை | : | ஆன்ம தரிசனமும் அருள்தரிசனமும். |
| | பரைஆதனம் | : | சுத்த அனுபவ நிலை தரும் சிவசத்தி பீடம். |
| 189 | ஓமயத்திருவுரு | : | நித்திய ஓங்காரத் திருவடிவம்; பிரணவத் திருமேனி. |
| 190 | ஆமயத் தடை | : | ஆன்மாவைப் பற்றியிருக்கும் ஐம்மலத் தடை. |
| 199 | தேவி | : | மாணிக்கவல்லி. |
| 224 | ஆறியல் | : | ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர்த் தொகுதி. |
| 237 | முத்திறல் வடிவம் | : | சுத்த - ப்ரணவ - ஞான தேகங்கள். |
| 249 | முன்னுறு சாதனம் | : | இறை அனுபவம் பெறப் பழகும் முதற்படி. |

251 நிலைசேர்ந்த அனுபவம் : இறைஅனுபவம் கிடைத்தபற்படி.

257 எட்டு இரண்டு : ஆன்ம நிலையும் - ஜீவ நிலையும்.

263 சொரூபம் : தோற்றம்.

265 இயல்வுரு : இயற்கைத் தன்மை.

271 கற்பகம் : மரணத்துன்பம் நீக்கும் மாமருந்து.

278 பரைஒளி : பராசக்திப் பிரகாசம்.

493 பகுதி : பிரகிருதி - அசுத்த மாயை.

556 பகுதி அயவெளி : அசுத்தமாயையின் அதிகாரணவெளி.

557 கலைவெளி : நிவர்த்திகலை, பிரதிஷ்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீத கலை.

571 குணமுதற் கருவிகள் : சத்துவம், இராஜசம், தாமசம் என்னும் முக்குணக் கூறுகள் .

575 காலமே முதல் கருவிகள் : காலம், நியதி, கலை, அராகம், புருடன் வித்தை, மாயை என ஆன்மாவிற்கு விளக்கத்தை உண்டாக்கும் இடை நிலை தத்துவங்கள்.

577 துரிசறு கருவிகள் : சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் சுத்த மாயையாம் தலைப் பாட்டுத் தத்துவங்கள் (சிவதத்துவங்கள்)

599 நாதமாம்பிரமமும் : நவநிலைத் தத்துவங்களின் முடிவான பரநாததத்துவம் என்னும் நாதபிரமம்.

601 பராசக்தி : பரசிவத்தின் சத்தி.

603 பரசிவபதி : பராசக்தியின் பதி.

658 துணையும் நிமித்தமும் : தநு(உடல்), கரண(கருவி), புவன (உலகம்), போகம்(இன்பம்) உண்டாக் கும் முதற்காரணமாகிய மாயை நிமித்த காரண மாகிய பஞ்சகிருத்தியக் கடவுளர்கள்.



741 வான்முகில் சத்திகள் : மண்ணியல் சத்திகள் போன்று மழையை உருவாக்கித்தரும் அந்தர சத்திகள்.

762 விடய நிகழ்ச்சி : மண், பெண், பொன்பற்றி எழும்செயற் பாடுகள்.

767 கரணேந்திரியம் : மனம் மற்றும் ஐம்பொறிகள்.

783 அண்டத்துரிசு : உற்பாதங்கள்.

785 பிண்டத்துரிசு : காமம் - வெகுளி - மயக்கம் முதலியன.

839 மறைப்பின் மறந்தன : மாயையால் மறந்துபோன காரியங்கள்.

861 தெருட்டும் தலைவர்கள் : அனுக்கிரகம் செய்யும் கடவுளர்கள்.

899 அனாதி உண்மை : இயற்கை உண்மை.

910 ஒருமையின் : பேரின்பநிலையில்.

917 வீடுகள் : சுவர்க்க பீடங்கள்.

919 பற்றுகள் : இம்மை, மறுமை இச்சைகள்.

1047 பிரமரகசியம் : தத்துவமசியின் (உயிர் - அருள் - சிவ அனுபவங்கள்) நிலை.

1049 பரமரகசியம் : சிவயநம நிலை.

1051 சிவரகசியம் : உயிர்நேயமாம் சுத்த சிவநிலை.

1096 சத்தினி பாதம் : அருட்சத்தியின் அனுபவப் பதிவு.

1220 தத்துவபலவாய் : 36 தத்துவங்களை நடத்தும் மேனிலை தத்துவங்கள்.

1427 நாத நல்வரைப்பு : பரநாதமாம் உயரிய எல்லை.

*1501* இடுவெளி : தத்துவ வெளிகள்.

*1502* நடுவெளி : மனவெளி.

*1503* கருவெளி : ஆன்ம வெளி.

*1504* உருவெளி : ஜீவ வெளி.

# அருட்பெருஞ்ஜோதி அட்டகம்

## அறிமுகம்

அருட்பெருஞ் ஜோதி அகவல் அதிகாலையில் ஓதப் பெறுவது. தனித்தாவது சேர்ந்தாவது பாராயணம் செய்யப் பெறுவது. அப்படி இயல்பாகப் பாராயணம் செய்தபின்பு திருவருட்பா 6ஆம் திருமுறையில் 4ஆம் தலைப்பில் உள்ள அட்டகம் (அஷ்டகம்) என்னும் பெயரால் வழங்கப் பெறும் "அருட்பெருஞ் ஜோதி அட்டகம்" அடுத்து ஓதப் பெறுகிறது. இதனைத் தனித் தனியாக ஓதியும் வருகிறார்கள். கூட்டாகவும் ஓதி வருகின்றார்கள். எட்டுப் பாடல்களைக் கொண்டது அட்டகம். தில்லையில் ஒரே அம்பலம் விளங்குகிறது. வடலூரிலோ சத்திய ஞான சபையில் எட்டு அம்பலங்கள் எண் கோணங்களிலும் விளங்குகின்றன. எண்கோண எட்டு அம்பலங்கள் ஒவ்வொன்றும் வழிபடத் தக்க சிற்சபையே! அந்த எண்கோண சிற்சபையில் அருளாட்சி புரிந்து அருள் நடம் புரியும் அருளரசரான இறைவர் தகைமையை எண்ணி உணர்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து வழிபட அட்டகம் மிகவும் உதவிபுரிகின்றது.

அருட்பெரு வெளியி லருட்பெரு வுலகத்
  தருட்பெருந் தலத்துமே னிலையில்
அருட்பெரும் பீடத் தருட்பெரு வடிவில்
  அருட்பெருந் திருவிலே யமர்ந்த
அருட்பெரும் பதியே யருட்பெரு நிதியே
  அருட்பெருஞ் சித்தியென் னமுதே
அருட்பெருங் களிப்பே யருட்பெருஞ் சுகமே
  அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 1

சுத்தசிவ சுகாதீத வெளி எனப்படுவது தனிப் பெருங் கருணை வெளி. அப்பெருவெளியில் இயங்குவதோ பெருந்தயவினை ஈட்டித் தரும் பூ மண்டலம். அப் பூமண்டலத்தில் முடிந்த பெருங்கருணைத் தலமாக விளங்கப்படுவதோ வடலூர் என்னும் உத்தர ஞான சித்திபுரம்! அந்த வடலூரில் விளங்குவதுதான் ஒப்பற்ற மெய் அறிவு மன்றம் என்னும் சத்திய ஞான சபை. அச்

சத்திய ஞான சபையின் இடையில் விளங்குவதோ ஞான சிங்காதன பீடம் எனும் பேரருட் தவிசு! அந்தப் பேரருட் தவிசில் பெருங் கருணைத் திருமேனியுடன் பெருங்கருணை வளத்துடன் வீற்றிருக்கின்ற பெருங்கருணைப் பெருநாயகனே! அருட்பெருஞ் ஜோதி ஆண்டவனாம் பெருங்கருணைச் செல்வனே! அப்பெருங் கருணைப் பேற்றினைத் தந்தருளும் அமுதமே! அப்பெருங்கருணை யால் விளைந்த பேரின்பமே! அப்பேரின்பத்தில் நிறைந்த பெருஞ்சுக நலமே! இப்படி எல்லாம் ஓங்கி ஒளிரும் அருட்பெருஞ்ஜோதி மாமன்னரே! உமக்கே எமது நன்றியும் எமது வணக்கமும்.

குலவுபே ரண்டப் பகுதியோ ரனந்த
கோடிகோ டிகளுமாங் காங்கே
நிலவிய பிண்டப் பகுதிகள் முழுதும்
நிகழ்ந்தபற் பலபொருள் திரளும்
விலகுறா தகத்தும் புறத்துமே லிடத்தும்
மெய்யறி வானந்தம் விளங்க
அலகுறா தொழியா ததுவதில் விளங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 2

பிரகாசித்து விளங்குகின்ற பேரண்டப் பரப்புகளோ அளவிட முடியாதபடி கோடானு கோடிகள்! அவ்வாறே அந்தந்தப் பேரண்ட பரப்புகளில் ஒளிர்ந்து உயர்கின்ற உயிர்த் தொகுதிகளோ கோடானு கோடிகள்! அவை அவை வாழ்வதற்குப் பயன்படும் பலப்பல வாகிய போகப் பொருள்களோ நம்மால் முழுமையும் கணக்கிட முடியாதன. மேற்கூறிய அண்ட கோடிகள், பிண்ட கோடிகள் போகப் பொருள்கள் ஆகிய எதனிடத்தும் நீங்காமலும் உள்ளும் புறமும் மற்றையதாகிய மேல் இடங்களிலும் கூட நிறைந்து சச்சிதானந்த நன்னிலையை எவ்வுயிரும் பெறும்படி விளங்குபவரே அருட் பெருஞ் ஜோதி அரசர். ஆதலின் அளவிட முடியாத படியும், நீங்கிவிட முடியாத படியும், ஆங்காங்கே ஓங்கி ஒளிரும் தன்மை களையுடைய அருட் பெருஞ் ஜோதியராகிய எமது மாமன்னரே! உமக்கே எனது நன்றியும் எமது வணக்கமும்.



கண்முதற் பொறியால் மனமுதற் கரணக்
கருவினாற் பகுதியின் கருவால்
எண்முதற் புருட தரத்தினாற் பரத்தால்
இசைக்குமோர் பரம்பர வுணர்வால்
விண்முதற் பரையால் பராபர வறிவால்
விளங்குவ தரிதென வுணர்ந்தோர்
அண்முதற் றடித்துப் படித்திட வோங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 3

கண் முதலிய ஐம் பொறிகளாலும், மனம் முதலிய நான்கு வகை உள் கருவிகளாலும், பிரகிருதி முதலாய மூல மாயை யினாலும், கருதுதல், உன்னல், நினைத்தல் முதலிய நிலைகளை உருவாக்கும் புருட தத்துவத் தகுதியினாலும், மறுமையாம் தேவ போகத் தன்மையினாலும், சிறப்பித்துக் கூறப்படுகின்ற மகா சதாசிவ நிலையினாலும், அனைத்து வெளிகளுக்கும் ஆதார மூலப் பொரு ளாகிய பராசக்தி நிலையினாலும், அப் பராசக்தியின் மேம்பட்டு இயங்கும் பரசிவ அறிவாலும் இறைவனை விளங்கிக் கொள்வது மிக அரிதாகும். அந்த நிலைமையினைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்தவர்கள் தம் உள்ளகத்தே அன்பு மீதூரப் படித்துப் பாராயணம் செய்திட்டால் அவர்களின் உள்ளும் புறமும் ஓங்கி ஒளிரும் என் அருட்பெருஞ் ஜோதியராகிய மாமன்னரே! உமக்கே எனது நன்றியும் எமது வணக்கமும்.

நசைத்த மேனிலையீ தெனவுணர்ந் தாங்கே
நண்ணியுங் கண்ணுறா தந்தோ
திசைத்தமா மறைக ளுயங்கின மயங்கித்
திரும்பின வெனிலத னியலை
இசைத்தலெங் ஙனமோ வையகோ சிறிதும்
இசைத்திடு வேமென நாவை
அசைத்திடற் கரிதென் றுணர்ந்துளோர் வழுத்தும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 4

விரும்பி எதிர்பார்த்த சிவதுரிய அனுபவ உயர் நிலை இதுவே என மறைகள் அபர ஞானத்தால் உணர்ந்தன. பின்பு அதனினும் மேம்பட்ட பர ஞானத்தால் உணர முற்பட்டன. ஆனால் இறைவனை முழுவதும் உணர்ந்து கொள்ள முடியவில்லை. அதனால் அந்தோ வேதவேதாந்தங்கள் திகில் அடைந்தன! மேலும் தளர்வுற்றன! மயக்க முற்று முன்பு இருந்த அனுபவ நிலைக்கே திரும்பி வந்தன, என்றால் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனின் இயற்கை உண்மைச் சித்த வல்லப திறத்தைப் பேசுதல் எவ்வாறோ? ஐயவோ! சற்றேனும் பேசிடலாம் என்று நாக்கினைச் சிறிதும் அசைத்திட முடியாமல் போகிறதே என்று மெய்ம்மை உணர்ந்த வர்கள் போற்றும் என் அருட் பெருஞ்ஜோதி மாமன்னரே! உமக்கே எமது நன்றியும் எமது வணக்கமும்.

சுத்தவே தாந்த மவுனமோ வலது
சுத்தசித் தாந்தரா சியமோ
நித்தநா தாந்த நிலையனு பவமோ
நிகழ்பிற முடிமேன் முடிபோ
புத்தமு தனைய சமரசத் ததுவோ
பொருளிய லறிந்தில மெனவே
அத்தகை யுணர்ந்தோ ருரைத்துரைத் தேத்தும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 5

சுத்த வேதாந்த முடிவில் தோன்றும் ‘அவன் நீ ஆனாய்’ என்னும் அமைதிப் பேறோ? அல்லது தூய சித்தாந்த முடிவில் தோன்றும் ‘நீ அதுவானாய்’ என்னும் திருவருள் சாம்ராஜ்ஜியப் பேறோ? நித்திய நாதாந்த நிலையில் கிடைக்கும் பரசிவ அனுபவப் பேறோ? மற்றும் போதாந்தம், கலாந்தம், யோகாந்தம் முதலிய பிற அந்த அந்தங்களின் முடிவில் தோன்றும் ஆன்மானுபவப் பேறோ? அல்லது புத்தம் புதிய தெள்ளமுதம் எனத் தழைத்து ஒளிரும் சமரச சுத்த சன்மார்க்க சத்திய நெறியின் சுத்த சிவ துரியாதீத நிலை பேறோ? அப்படிப்பட்ட மெய்ப்பொருளாம் இறைவனின் இயற்கைத் தன்மையைச் ‘சிறிதும் தெரிந்திலோம்’, ‘என்னே’ என்று அருள் அனுபவ ஞானிகள் வாயார வாழ்த்திப் போற்றும் என் அருட்பெருஞ்ஜோதி மாமன்னரே! உமக்கே எமது நன்றியும் எமது வணக்கமும்.



ஏகமோ வன்றி யனேகமோ வென்றும்
இயற்கையோ செயற்கையோ சித்தோ
தேகமோ பொதுவோ சிறப்பதோ பெண்ணோ
திகழ்ந்திடு மாணதோ வதுவோ
யோகமோ பிரிவோ வொளியதோ வெளியோ
உரைப்பதெற் றோவென வுணர்ந்தோர்
ஆகமோ டுரைத்து வழுத்தநின் றோங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 6

ஒன்றாகிய சிவபரப் பொருளோ? பலவாகிய உயிர்க் கூட்டங்களோ? நித்திய நிலைபேறுடைய இயற்கைத் தன்மையோ? புதியதாய் உருவெடுக்கும் செயற்கை சீர்மையோ? அற்புத சித்தியோ? அந்த அற்புதச் சித்தியைத் தாங்கி விளங்கும் சுத்த பிரணவ, ஞான, தேக நிலையோ? பொதுமை ஆகும் மனிதநேயப் பண்போ - ஆன்ம நேயமாகும் சிறப்புப் பண்போ? புறச் சீர்மைகள் மிகுந்த பெண்மை நிலையோ? அகச் சீர்மைகள் மிக்க ஆண்மை நிலையோ! அதனினும் கடந்த முதன்மையுடைய கடவுள் நிலையோ? ஒருமை நிலை ஓங்கும் சிவயோக மெய் உணர்வோ? பன்மை நிலை தோன்றும் பேத நிலையோ? அருள் ஒளியோ? அருள் ஒளியின் மேம்பட்ட சுத்தசிவ வெளியோ! என இறைவனை எப்படித்தான் புகழ்ந்து போற்றுவதோ எனத் தம்மை உணர்ந்தவர் மனப்பூர்வமாகக் கூறி, உடலும் மனமும் உள்ளமும் உருகி - போற்றிட அந்த அனுபவத்தில் ஒளிர்ந்து ஓங்கும் எம் அருட்பெருஞ் ஜோதி மாமன்னரே! உமக்கே எமது நன்றியும் எமது வணக்கமும்.

தத்துவ மனைத்துந் தனித்தனி கடந்தேம்
தத்துவா தீதமே னிலையில்
சித்தியல் முழுதுந் தெரிந்தன மவைமேற்
சிவநிலை தெரிந்திடச் சென்றேம்

ஒத்தவந் நிலைக்கண் யாமுமெம் முணர்வும்
ஒருங்குறக் கரைந்துபோ யினமென்
றத்தகை யுணர்ந்தோர் வழுத்தநின் றோங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 7

ஆன்ம தத்துவம் 24-ம், வித்தியா தத்துவம் 7-ம், சிவ தத்துவம் 5-ம், ஆக 36 தத்துவங்களையும் தனித்தனியாக அறிந்து ஆன்ம அனுபவத்தை அனுபவித்து அப்பாற்பட்டோம். அம் முப்பத்தாறு தத்துவங்கட்கும் அப்பாற்பட்ட அருள் அனுபவ நிலையில் இயற்கை விளக்கத்தின் இயல்பினை முற்றும் அறிந்து கொண்டோம். அவ்விரண்டு அனுபவங்கட்கு மேல், சத்து சித்து ஆனந்த நிலையான சுத்த சிவானுபவம் என்னும் அருட்பெருஞ்ஜோதியின் நிலையினை அறிந்து கொள்ளப் பாடுபட்டோம். உயிர் அனுபவம், அருள் அனுபவம் கிடைத்து அந்தச் சீரிய சுத்த சிவ அனுபவப்பேறு கிடைக்கும் நிலையில் எமது ஆன்மாவும் எமது ஆன்ம உணர்வாகும் ஒருமைப்பாட்டு நிலையும் ஒன்று சேர்ந்து கரைந்து போய்விட்டன என்று இவ்வாறு சிவ துரிய நிலையில் அழுந்தியவர்கள் வாயார வாழ்த்திட அவர்களின் அகமும் புறமும் நின்று விளங்கும் எம் அருட்பெருஞ்ஜோதியாம் மாமன்னரே! உமக்கே எமது நன்றியும் எமது வணக்கமும்.

எங்குமாய் விளங்குஞ் சிற்சபை யிடத்தே
இதுவது வெனவுரைப் பரிதாய்த்
தங்குமோ ரியற்கைத் தனியனு பவத்தை
தந்தெனைத் தன்மய மாக்கிப்
பொங்குமா னந்த போகபோக் கியனாய்ப்
புத்தமு தருத்தியென் னுளத்தே
அங்கையிற் கனிபோன் றமர்ந்தருள் புரிந்த
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 8

நீக்கமற எங்கும் நிறைந்து விளங்குவது திருச்சிற்றம்பல நிலை. அச்சிற்றம்பல பீடத்தின் இம்மை இன்பம் என்றோ மறுமை இன்பம் என்றோ உரைத்திடக் கூடாத பேரின்ப நிலையாகும். ஒப்பற்ற பெருநிலையில் அப்பேரின்ப இயற்கை அனுபவ நிலையை



இறைவர் எனக்கு வழங்கியருளினார். அத்துடன் என்னை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராக்கியும் மகிழ்ந்தார். அத்துடன் கூட அப்பேரின்பப் பெரும் சுகத்தை எல்லா உயிர்களும் ஈந்து அனுபவிக்கும் சர்வ சுதந்தர உரிமையையும் எனக்கே தந்தருளினார். அம்மட்டோ! அருட்பேரமுதத்தை அன்புடன் ஊட்டியும் அகம் மகிழ்ந்தார். அதன் காரணமாக என் ஆன்மா அறிவினிடத்தே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஒளிர்ந்தருளினார். அத்தகைய அருட்பெருஞ்ஜோதியாம் மாமன்னரே உமக்கே எமது நன்றியும் எமது வணக்கமும்.

உமக்கே எமது நன்றியும் எமது வணக்கமும்!
உமக்கே எமது நன்றியும் எமது வணக்கமும்!
உமக்கே எமது நன்றியும் எமது வணக்கமும்!

திருச்சிற்றம்பலம்.

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ் சோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே

அருளரசராகிய வள்ளல் பெருமானின் பெருமையையும் அவர் செய்தருளிய அருளாட்சியின் பெருமையையும் வெளிப்படுத்தும் தகைமை உடையதே அருட்பெஞ் ஜோதி அகவல்.

தோகை மயில் ஒன்று தன் துணையைச் சேர்க்கைக்கு அழைப்பதாகிய ஓசைப் பாங்கினை உடையது பற்றியே அகவல் எனப்பட்டது.

வள்ளலார் தன்னில் புணர்ந்து கலந்த தன்னிகரற்ற தலைவனாம் ஆண்டவனை அழைத்து அழைத்து அவனது பேரின்பக் கிளர்ச்சியை ஓதி ஓதி மகிழ்வதே அருட்பெருஞ் ஜோதி அகவல்.

வள்ளல் உள்ளமாகிய திருச்சபையில் ஆண்டவர் அருள் நடம் புரிகின்ற அற்புதத்தை அண்மை விளியால் அழைத்து நமக்கு அருளமுதம் ஊட்டுவதே அகவல்.

விலை ரூ. 100